DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1467 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 17, 2024

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் பங்கேற்பு



**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திப்பதற்கு நேரம் வழங்குமாறு மன்னிப்புச் சபையின் கொழும்பு அலுவலகம் ஒரிரு மாதங்களுக்கு முன்னரே ஜனாதிபதி செயலகத்திடம் கோரியிருக்கின்ற போதிலும், அதற்கு இன்னமும் உரிய பதில் வழங்கப்படவில்லை எனவும் தெரியவருகின்றது. –** *யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்*

சர்வதேச மன்னிப்புச் சபையின் (அம்னெஸ்டி இண்டர்நேஷனல்) செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் 20ம் திகதி முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள நினைவு நிகழ்வில் பங்குகொள்ளவுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் இலங்கை வந்துள்ளதோடு முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள மே 18 நினைவு தினத்திலும் கலந்துகொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 25ம் பக்கம்)

# National Ethnic Press and Media Council of Canada, honours Late Mr. Simal Abeywardana, Editor of 'Sri Lanka Reporter' at International Press Freedom Day celebrations at Toronto City Hall.

## முன்னாள் 'ஶ்ரீலங்கா ரிப்போர்ட்டர்' ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் காலஞ்சென்ற ஶ்ரீமால் அபேவர்த்தனா ஞாபகார்த்த கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்.



10-05-2024 அன்று வெள்ளிக்கிழமையன்று கனடாவில் இயங்கிவரும் "கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகம்" **(National Ethnic Press and Media Council of Canada)** தனது அங்கத்தவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் ஆகியோர் சகிதம் "சர்வதேச பத்திரிகைச் சுதந்திர நாளை" கொண்டாடி மகிழ்ந்தது.

மேற்படி விழா ரொறன்ரோ மாநகரில் அமைந்து மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. அன்றைய தினம் அங்கு ஐந்து பத்திரிகையாளர்கள் கௌரவிக்கப்பெற்றனர். அவர்களில் ஒருவர். முன்னாள் "ஸ்ரீலங்கா ரிப்போர்ட்டர்" ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் காலஞ்சென்ற ஸ்ரீமால் அபேவர்த்தனா அவர்களும் ஞாபகார்த்த கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கிகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

Krishna Punniyam
MORTGAGE AGENT: Purchase & Refinance, First Mortgage, Second Mortgage, Commercial Mortgage, Equity Loan
ACCOUNTING: Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service
Mobile: 416.710.9150

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

Uthayan International Awards Festival – 2024
உலகெங்கும் நன்கு அறியப்பெற்ற வருடாந்த நிகழ்வு
உதயன் சர்வதேச விருது விழா-2024
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
மண்டபம்:- The Estate Banquet & Event Centre, 430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM


Albert Campbell Square
(Scarborough town Centre)
அல்பேர்ட் காம்பல் சதுக்கதில்
தமிழின அழிப்பு
நினைவு நாள்
மே 18, 2024, சனிக்கிழமை - மாலை 6:00 மணி
தமிழின அழிப்பின் 15ஆம் ஆண்டு நினைவு நாள்
• International Accountability and Remedial Justice for the Tamil Genocide.
• Recognize Tamil people as a Nation and their right to self - determination.
• Justice for enforced disappearances and release of political prisoners.
• Stop state sponsored Buddhisization, Colonization, Militarization, Signalization and Land Grabs.
• Remove armed forces and release occupied land from the traditional and ancestral homeland of Tamil people.
• தமிழின அழிப்பிற்கான சர்வதேச பொறுப்புக்கூறலும் பரிகார நீதியும்.
• தமிழ் மக்களை ஒரு தேசமாகவும் அவர்களின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்தல்.
• வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை.
• சிறீலங்கா அரசின் அனுசரணையுடன் இடம்பெறும் புத்தமயமாக்கல், குடியேற்றம், இராணுவமயமாக்கல், சிங்களமயமாக்கல் மற்றும் நில அபகரிப்பு ஆகியவற்றை நிறுத்தல்.
• தமிழ் மக்களின் பாரம்பரிய மற்றும் பூர்வீக தாயகத்திலிருந்து ஆயுதப் படைகளை அகற்றி ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவித்தல்.
15th Year
MAY
18
TAMIL GENOCIDE Remembrance Day
முள்ளிவாய்க்கால் உறவுகளுக்கு
நினைவுத் தீபம் ஏந்துவோம்
Join us to commemorate and memorialize
the genocide committed against the Tamil people in Sri Lanka
416 830 7703 | 416 818 7646
கனடியத் தமிழர் சமூகம் - கனடியத் தமிழ் மாணவர் சமூகம்

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’ சந்திக்கும் போராட்டங்களும் பெருகி வரும் பேராதரவும்

2009ல் மே 18 முள்ளிவாய்க்காலில் எமது இனம் சந்தித்த பெரும் அழிவும் அன்றைய காலப்பகுதியில் எமது மக்களும் விடுதலைப் புலிகளும் சர்வதேசத்தில் வைத்திருந்த எதிர்பார்ப்புக்கள் கடலில் கரைந்து போன உப்பாக மாறி நிற்க, இறுதித் தருணத்தில் இதய சுத்தியோடு இயங்கிய தாய்மார்களும் போராளிகளும் தாதியர்களும் வைத்தியப் பெருந்தகைகளும் ஆற்றிய பணிகள் பற்றி எண்ணிப் பார்க்கும் போது எமது கண்கள் இயல்பிலும் விட ஈரமாகிவிடுகின்றன.

இவ்வாறாக நாம் அஞ்சலி செலுத்த வேண்டிய அந்த நாள் நெருங்குகின்றது. பலமுள்ள போராளிப் படைகளை அந்த கானக மண்ணில் எத்தனையோ ஆண்டுகளாய் கட்டிக் காத்த போராளிகளின் தலைவர்களும் பொது மக்களும் சர்வதேசப் பயங்கரவாதிகள் கைகோர்த்து வந்து தங்கள் மீது தாக்குதல்களை நடத்திய வேளை போராட முடியாமல் நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

நெருக்கடியான அந்த நேரத்தில் உண்டான உணவுத் தட்டுப்பாட்டை சமாளிக்கும் வகையில் ‘கஞ்சி’ என்னும் அற்புதப் பானத்தை அனைவருக்கும் வழங்கினார்கள்

இவ்வாறான சிறப்புக்கள் பொருந்திய எளிமையான உணவாம் ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’ என்கின்ற நாமம் அங்கு இலங்கையில் ‘வலிமையான பொருள்’ என கருதப்படுகின்ற காலத்திற்கு நாம் வந்துள்ளோம்.

ஆமாம்! ஏந்த இடத்தில் எமது மக்களையும் போராளிகளையும் கொன்றழிப்பதற்காக ஈவிரக்கமின்றி இலங்கை இராணுவமும் ஏனைய நாடுகளின் இராணுவப் படைகளும் தாக்குதல்கள் நடத்தினார்களோ அந்த இடத்தை சர்வதேசச் சமூகம், மீண்டும் அந்த நாட்களை நினைவிற் கொள்ளவும் மேற்படி குற்றத்திற்கு காரணமாக இருந்தவர்களுக்கு தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கவும் வந்துள்ளார்கள். மேலும் சிலர் ‘முள்ளிவாய்க்கால்’ மண்ணை முத்தமிடவும் வந்து கொண்டிருக்கின்றார்கள்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் இலங்கைக்கு வந்துள்ள நிலை தற்போதைய ‘பொம்மை’ ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திப்பதற்கு நேரம் வழங்குமாறு மன்னிப்புச் சபையின் கொழும்பு அலுவலகம் ஓரிரு மாதங்களுக்கு முன்னரே ஜனாதிபதி செயலகத்திடம் கோரியிருக்கின்ற போதிலும், அதற்கு இன்னமும் உரிய பதில் வழங்கப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

இவ்வாறாக முள்ளிவாய்க்கால் கஞ்சியின் விவகாரம் ரணிலையும் நித்திரை கொள்ள விடாது தடுக்கின்ற இந்த வேளையில் முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள நினைவு நிகழ்வில் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் பங்குகொள்ளவுள்ளார்.

போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான வன்முறைகள் என்பன தொடர்பில் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதுடன், சர்வதேச அரங்கில் இலங்கை மீதான அழுத்தங்களையும் பிரயோகித்துவருகிறது.

அந்த வகையில் யுத்த முடிவின் 15 வருடப் பூர்த்தியையொட்டி லண்டனைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் ந வியாழக்கிழமை இலங்கைக்கு வருகைதந்துள்ளார்.

முள்ளிவய்காலில் சில முக்கிய சந்திப்புக்களை நடாத்துவதற்கு உத்தேசித்திருக்கும் அக்னெஸ் கலமார்ட்,

எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பில் ஊடகவியலாளர்களையும் சந்திக்கவுள்ளார்.

இவ்வாறாக அடுத்து வரும் நாட்கள் இலங்கையில் மாத்திரமல்ல,எம் மக்கள் வாழும் நாடுகளிலெல்லாம் முள்ளிவாய்க்கால் கஞ்சி ஏற்படுத்தவுள்ள தாக்கங்களைப் பொறுத்திருந்து பார்ப்போமாக!

Canada — We acknowledge the financial support of the Government of Canada

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## முன்னாள் ‘ஸ்ரீலங்கா ரிப்போர்ட்டர்’ ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் காலஞ்சென்ற ஸ்ரீமால் அபேவர்த்தனா ஞாபகார்த்த கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்

இங்கே காணப்படும் படங்களில் காலஞ்சென்ற ஸ்ரீமால் அபேவர்த்தனா அவர்களின் மனைவி. மகன் மற்றும் பேரப்பிள்ளை ஆகியோர் அவருக்குரிய கௌரவங்களை பத்திரிகையாளர்கள் கழகத்தின் தலைவர் தோமஸ் சாரஸ் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதைக் காணலாம்.

**National Ethnic Press and Media Council of Canada** என்னும் பத்திரிகையாளர்கள் கழகத்தின் தலைவர் தோமஸ் சாரஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த பத்திரிகையாளர்கள் விழாவில் கனடா உதயன் சார்பிலும் அதன் பிரதம ஆசிரியர் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவை வழங்கினார்கள்.

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்கள் மேற்படி **National Ethnic Press and Media Council of Canada** பத்திரிகையாளர்கள் அமைப்பின் நீண்ட கால உறுப்பினர் என்பதும் அதன் சிரேஸ்ட உப- தலைவர்களில் ஒருவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் எமது மக்கள் மீதான இனப்படுகொலை 1948 தொடக்கம் ஒரு கதையாகத் தொடர்கின்றது

### கனடிய தமிழர் பேரவை வெளியீட்டுள்ள அறிக்கையில் தெரிவிப்பு

Canadian Tamil Congress — கனடியத் தமிழர் பேரவை — Congrès Tamoul Canadien — “Voice of Tamil Canadians”

இலங்கையில் எமது தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையை நடத்தி வரும் அரசுகளின் செயற்பாடுகள் 1948 தொடக்கம் ஒரு கதையாகத் தொடர்கின்றன என்ற தலையங்கத்தோடு கனடிய தமிழர் பேரவை வெளியீட்டுள்ள ஆங்கில மூலத்தைக் கொண்ட அறிக்கை நேற்று வியாழக்கிழமை 16ம் திகதி வெளியாகியுள்ளது.

மேற்படி ஆங்கில அறிக்கை ஒன்றிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அறிக்கையில் மேலும் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

”எமது தமிழர் சமூகம் தற்போது உலகெங்கும் பரவிப் பெருகியுள்ளது. அத்துடன் சர்வதேச சமூகத்திற்கு நாம் எடுத்துச் சென்ற தகவல்களின் மூலம் இலங்கையில் எமது இனத்திற்கு எதிராக நடத்தப்பெற்றது எவ்வித சந்தேகமுமின்றி “இனப்படுகொலை“ தான் என்பதில் எமது கனடிய தமிழர் பேரவை அமைப்பானது உறுதியாக நம்புகின்ற ஒரு விடயமாக உள்ளது.

இந்த நேரத்தில் நாம் கனடிய மத்திய அரசிடம் கேட்டுக்கொள்வது என்னவென்றால். கனடிய மக்கள் மன்றத்தில் அரசு உத்தியோகபூர்வமாக அங்கீகரித்த இலங்கை அரசின் இனப்படுகொலை தொடர்பான பிரேரணைக்கு அப்பால் மேலும் நடவடிக்கைகளிலும் இறங்கி பொறுப்பானவர்களை தண்டிக்கப்படுவதற்குரிய ஏற்பாடுகளையும் தொடர்ந்து செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறு கனடிய தமிழர் பேரவையின் அறிக்கை தெரிவிக்கின்றது.

**லண்டன், ஒன்டாரியோ கனடாவில் லாபகரமான வணிக இடம் உங்களுக்காகக் காத்திருக்கிறது!**

**(Profitable Commercial Property Awaits You in Canada!)**
இடம்: லண்டன், ஒன்டாரியோ - பரபரப்பான டவுன்டவுன் மையப்பகுதி
**(London, Ontario - Bustling Downtown Core)**

பயன்பாடுகள் (நகர ஒப்புதல் பெற்ற மண்டல வரையறை): **(Zoning & Usages):** வழிபாட்டுத் தலங்கள் **(Temples, Places of Worship),** மருத்துவமனைகள் **(Doctor's Offices),** உணவகங்கள் **(Restaurants),** குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் **(Daycare Centers),** பள்ளிகள் **(Schools),** விழா அரங்கங்கள் **(Party Halls),** இதற்கு மேற்பட்டவை **(and much more!)**

சிறப்பம்சங்கள்: **(Highlights)**
பரபரப்பான இடம் - பொது போக்குவரத்து சில விநாடிகள் தூரத்தில் உள்ளது **(Busy Location - Public Transportation Seconds Away)**
வழிபாட்டுத் தலத்திற்கான அனுமதி பெற்ற வரைபடங்கள் கிடைக்கும் **(City-Approved Permits and Drawings Available for a Place of Worship)**
இரண்டு புதுப்பிக்கப்பட்ட கழிப்பறைகள் **(2 Fully Renovated Washrooms)**
**3100** சதுர அடி பரந்த இடம் - பெரிய திறந்தவெளி கூடத்துடன் **(3100 SQF Space with Large Open Gathering Area).** விலை: **$329,000 (Negotiable)**

இந்த வாய்ப்பு விரைவில் கைவிட்டுப் போகலாம்! **(This Opportunity Won't Last Long! Serious Inquiries Only.)**

தொடர்புக்கு: **(Contact:): Sathyan at 226-786-2008**

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
**416-706-8160**

**Condo Apartment for Rent**

கொண்டோ அப்பார்ட்மண்ட் வாடகைக்கு **Kennedy/Ellesmere** சந்திப்புக்கு அருகில் உள்ள **Condo** அப்பார்ட்மண்ட் **3 Rooms, 1 Wash Room** அடங்கலாக அனைத்து வசதிகளோடும் வாடைக்கு உடனடியாக வழங்கப்படும். இன்டர் நெற் மற்றும் தொலைக்காட்சி இணைப்பு ஆகியன இலவசம். **1 Parking** உண்டு. பஸ் வசதி மற்றும் தமிழர்கள் கடைகள் சுப்பர் மார்க்கட் ஆகியன மிக அருகில். கென்னடி புகையிரத நிலையத்திற்கும் விரைவாக செல்ல முடியும்.

**விபரங்களுக்கு :**
416-757-0034 / 416-994-3861

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# திருகோணமலையில் திடீரென தீப்பற்றி எரிந்த வீடு — பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசம்!

பு. கஜிந்தன்




திருகோணமலை மாவட்டத்தின் நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இல 38ல் உள்ள, பெரியகுளம் - விருகம்மான வீட்டுத் தொகுதியில் வீடொன்று தீப்பற்றியுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார். குறித்த சம்பவம் 10-05-2024 அதிகாலை 12.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, குறித்த நபர் அன்றைய தினம் வீட்டை பூட்டி விட்டு திருகோணமலை கடற்படை முகாமுக்கு முன்னால் உள்ள தனது கடையில் தங்கியுள்ள நிலையில் தூங்கிக் கொண்டிருக்கும் போது அவரது வீடு தீப்பற்றி எரிவதாக அவருக்கு தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந் நிலையில் இத் தீ சம்பவம் இடம் பெற்றுள்ளதை அறிந்து உடனடியாக பொலிஸ் அவசரப் பிரிவு இலக்கமான 119க்கு அறிவித்துள்ள நிலையில் தீயணைப்பு பிரிவுக்கும் அறிவித்ததாக குறித்த வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார். இதில் பல பெறுமதியான வீட்டு உபகரணங்கள் எரிந்து நாசமாகியுள்ளதால் பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இருப்பினும் உயிர் சேதம் எதுவும் இடம்பெறவில்லை. வீடு தீப்பற்றியமை தொடர்பில் காரணம் வெளியாகவில்லை.

இச் சம்பவம் தொடர்பில் நிலாவெளி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் உரிமையாளர் மேலும் தெரிவித்தார். குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை நிலாவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.





# "இந்த நாட்டில் உறுதியான தலைவர் இல்லை ஜனாதிபதி தேர்தலில் ரணிலை வெல்ல வேப்போம்" என்கிறார் பிள்ளையான் சந்திரகாந்தன்



இந்த நாட்டில் உறுதியான எதிர்பார்ப்பு இல்லாத திட்டத்தோடு இருக்கின்ற தலைவர்களை தற்போது காணமுடியாது இருக்கின்றது எனவே அந்த அடிப்படையில் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க போட்டியிட்டால் அவரை வெல்ல வைப்பதற்கான ஆலோசனைகளை செய்து கொண்டிருக்கின்றோம் என இராஜாங்க அமைச்சாரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சி.சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் 11-05-2024 சனிக்கிழமை அன்று இடம்பெற்ற மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் மற்றும் ஜனாதிபதியின் உறுமய தொடர்பான திட்டம தொடர்பான கூட்டத்தில் பங்கேற்றிய இராஜாங்க அமைச்சா கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்டத்தில் உறுமய திட்டத்தின் ஊடாக காணி பகிந்தளிப்பு தொடர்பாக அரசாங்க அதிகாரிகளுக்கிடையிலே அதன் சவால்கள் தொடர்பாக கலந்துரை யாடினோம. நாட்டில் 20 இலச்சம் காணி துண்டுகளை விரைவாக வழுங்க வேண்டும் என்ற வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார்.

அதற்கு உதவி செய்யும் முகமாக மட்டு மாவட்டத்தில் 27 ஆயிரம் ஏக்கர் காணி பகிர்ந்தளிக்க வேண்டியிருக்கின்றது அதனை விரைவுபடுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம் அந்தவகையில் 514 பேருக்கான காணி பகிர்ந்தளிப்பு இடம்பெற்றுள்ளது.

எனவே இதில் உள்ள குறைபாடுகளை விரைவாக நிவர்தி செய்து கொண்டு அனைவருக்கும் உறுமய வேலைத்திட்டதின் ஊடாக விரைவாக காணி கையளிப்பு இடம்பெற ஏற்பாடு செய்துள்ளோம் அதில் நிர்வாக ரீதியாக மக்கள் காணி உறுதி பத்திரம் வழுங்க அச்சப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாவட்டம் விவசாய மாவட்டம் உறுமய திட்டத்தில் இந்த உற்பத்திகளை அதிகரிக்கும் வேலைத்திட்டத்தில் உலக வங்கி ஊடாக காலநிலை இடம் பெற்றுவருகின்றது இது கடந்தகால பொருளாதார பிரச்சனை காரணமாக பின்னடைந்துள்ளதுடன் தற்போது அதில் வனபலபரிபாலன சபை மற்றும் தொல்லியல் திணைக்கள பிரச்சனை காரணமான திட்டங்கள் அமுலாக்குவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதால் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தோம்.

அதில் சில பிணக்குகள் தீர்கப்பட்டுள்ளது சில திணைக்களம் சார்ந்த விடையங்களும் அது தொடர்பான தீர்வுகளைகண்டுள்ளோம் அதேவேளை அந்த பிரதேசங்களுக்கு இருண்டு வாரத்தில் நேரே சென்று ஊக்கப்படுத்துவதும் அதன் தடைகளை நீக்கி கொடுப்பதும் 75 நாட்களில் ஆரம்பித்த பணிகளை முடிப்பது எனவும் அடுத்து சிறு திட்டங்களை பொது அமைப்புக்களுக்கு கொடுத்து முடிவுறுத்துவது எனவும்.

இல் அடையாளப்படுத்தியவையை வேறு பிராந்தியத்தில் இருந்து ஒப்பந்தத்தை பெறுபவர்கள் இந்த களச் சூழல் தெரியாது எங்களுடைய வேலையாட்களின் மனநிலை தெரியாது சில குழப்பங்கள் ஏற்பட்டுள்ளது எனவே பணிப்பாளர் உலக வங்கியுடன் ஆலோசனை குழுவுடன் பேசி பிராந்தியத்தில் இருக்கின்ற ஒப்பந்த காரர்களை தெரிவு செய்தால் விரைவாக வேலைகளை முடித்து கொடுக்க முடியம் என நம்புகின்றோம்.

விவசாயத்தை இரட்டிப்பாக வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம் 2 இலச்சம் காணிகளில் நெல் செய்கின்றோம் இதில் இரண்டாவது போகத்தில் 80 ஆயிரம் ஏக்கரில் நெல் உற்பத்தி செய்கின்றோம் இதனை ஒரு இலச்சமாக 2025ம் ஆண்டு உயர்தி நவீன விவசாய துறையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவது இலக்கு.

மந்தனாறு திட்டம் நல்லாட்சி காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது இன்னும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றது ஜ.எவ்.எம் கொடுக்கல் வாங்கல் திட்டம் பூர்தியான பின்னர் பிரெஞ் அரசாங்கம் அந்த ஒப்பந்தம் கைசாத்திட்டது அதில் 15 ஆயிரம் ஏக்கர் ஏனைய சிறிய திட்டங்கள் உடாக 5 ஆயிரம் ஏக்கரை கூட்டுவதற்கு அரசியல் ரீதியாக முன்னெடுத்துள்ளோம்.

மாவட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 5 கோடி ரூபாவும் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து சில உறுப்பினர்களுக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது மாவட்ட அபிவிருத்தி நிதிக்காக 500 மில்லியனுக்கு மேலாக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் வீதி அபிவிருத்திக்காக 6 பில்லியன் அளவில் ஆரம்பின்கப்பட்டுள்ளது இன்னும் 7 பில்லியன் அளவில் அடுத்த மாதம் வேலைதிட்ம் ஆரம்பிக்கவுள்ளது அதேவேளை உலக வங்கியின் திட்டத்தி 576 மில்லியன் அளவு எதிர்பாக்கின்றோம்.

ஜனாதிபதி தேர்தல் 10 மாதத்தில் இடம்பெறும் அறிவிக்கப்பட்டுள்ளது எனவே நாடாளுமன்ற தேர்தல் முதல் நடந்தால் நல்லது என்பது எனது தனிப்பட்ட கருத்து. இருந்த போதும் ஜனாதிபதி தேர்தலை எதிர் கொண்டாக வேண்டும் நாடு ஒரு சிக்கலான சூழலில் இருந்தது அதில் இருந்து மீட்டு நம்பிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தியுள்ளார்.

நாங்கள் ஒரு தொங்கு பாலத்தில் நடந்து செல்வதாகவும் இந்த பாலத்தை கடந்துதான் ஆகவேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். எனவே அந்த பாலத்தை கடந்து உறுதியான ஒரு பொருளாதார கட்டமைப்பு உருவாக வேண்டுமாக இருந்தால் அவர் இந்த நாட்டுக்கு தொடர்ந்து சேவையாற்ற வேண்டும் எனது தனிப்பட்ட நிலையைப்பாடு அது எங்களுடைய கட்சியில் பேசிவருகின்றோம்.

அடுத்த தலைவராக உறுதியான எதிர்பார்ப்பு இல்லாத திட்டத்தோடு இருக்கின்ற தலைவர்களை தற்போது காணமுடியாது இருக்கின்றது அந்த அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் அவரை வெல்ல வைப்பதற்கான ஆலோசனைகளை செய்து கொண்டிருக்கின்றோம் என்றார்.

# உலக தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபியில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!



இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி கிளையினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி பவனியும் இன்று காலை 9:30 மணியளவில் உலக தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபியில் காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலசந்திரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன் பொழுது முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்தவர்களை நினைவுகூறி பொதுச்சுடர் முன்னாள் போராளியும் முன்னாள் உபதவிசாளருமான விஜயனால் ஏற்றி வைக்கப்பட்டு தொடர்ச்சியாக ஈகைச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சியும் விநியோகிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து தமிழின் படுகொலை அடையாளப்படுத்தும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி யாழ் நகரிலிருந்து ஆரம்பமானது இதேவேளை முள்ளிவாய்க்கால் கஞ்சியும் விநியோகிக்கப்பட்டது. இதன் பொழுது முள்ளிவாய்க்கால் கஞ்சியின் வரலாற்றினை உள்ளடக்கிய துண்டுபிரசுரமும் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் பாலசந்திரன், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நாகரஞ்சின், முன்னாள் உப தவிசாளர் விஜயன், வட்டுக்கோட்டை தொகுதி மகளீர் அணி தலைவி ஜெயரஞ்சி, சமூக செயற்பாட்டாளர். சபாஷ், அம்பிகை பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை தொடர்ந்து நாளை 13ஆம் திகதி திங்கட்கிழமை தென்மராட்சியிலும், 14ஆம் திகதி வடமராட்சியிலும், 15ஆம் திகதி கோப்பாய், மானிப்பாய், நல்லூர் பிரதேசங்களிலும், 16ஆம் திகதி வட்டுக்கோட்டையிலும், 17ஆம் திகதி வேலணையிலும், 18ஆம் திகதி காரைநகரிலும் பயணிக்கும்.



இறுதிநாள் நினைவேந்தல் சங்கானை பேருந்து தரிப்பிடத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தங்கள் பிரதேசங்களுக்கு வரும்பொழுது மக்கள் அணிதிரண்டு ஆத்மார்த்தமாக அஞ்சலிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிழக்கில் கொக்கட்டிச்சோலையில்; தமிழ் தேசிய மக்கள் முன்னணி முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது

கனகராசா சரவணன்

கிழக்கில் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் முள்ளி வாய்க்கால் கஞ்சி வாரத்தையிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியினர் 11-05-2024 சனிக்கிழமை கஞ்சி வழஞ்கும் வாரத்தை ஆரம்பித்து வைத்தனர்.

2009 மே 18 முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இன படுகொலையையிட்டு மே 11ம் தொடக்கம் 18 ம் திகதிவரை கஞ்சிவாரம் என பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த பிரகடனத்தையடுத்து வருடாவரும் கஞ்சி வாரம் இடம்பெற்றுவருகின்ற நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியினர் கிழக்கில் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை மகிழடித்தீவில் 1990ம் ஆண்டு படுகொலை செய்யப்பட 152 பொதுக்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவு தூபியில் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கும் வாரத்தை கட்சியின் தேசிய அமைப்பாளர் த. சுரேஸ் தலைமையில் ஆரம்பித்து வைத்தனர்.

இதன் போது கடசியின் ஆதரவாளர்கள் மற்றும் அந்த பகுதியில் சிறுவர் தொடக்கம் பெரியவர்கள் வரை திரண்டு முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஆர்வத்துடன் வாங்கி குடித்தனர்.





# வாழைச்சேனை ஜெயந்தியாலை பிரதேசத்தில் இரு குழுக்களுக்கிடையே மோதல் இருவர் படுகாயம் — பதற்றத்தையடுத்து விசேட அதிரடிப்படை பலத்த பாதுகாப்பு



மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள புனானை ஜெயந்தியாலை பிரதேசத்தில் இரு குழுக்களுக்கிடையே சனிக்கிழமை (11) மாலை ஏற்பட்ட மோதில் இருவர் பலத்த காயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இதனையடுத்து அந்த பகுதியி ஏற்பட்டுள்ள பதற்றத்தையடுத்து அங்கு விசேட அதிரடிப்படையினர் பொலிசார் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதுபற்றி தெரியவருவதாவது, குறித்த பகுதியைச் சேர்ந்த இருவர் சம்பவதினமான முச்சக்கர வண்டியில் பிரயாணித்தனர் இதன் போது அங்கு மோட்டர் சைக்கிளில் பிரயாணித்த 23 வயது இளைஞன் ஒருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து இளைஞன் மீது தாக்குதலையடுத்து இளைஞன் அங்கிருந்து தப்பி ஓடி அருகிலுள்ள ஹோட்டல் ஒன்றில் புகுந்து கொண்டான்.



இதனையடுத்து அந்த இளைஞனை வெளியேவருமாறு முச்சக்கரவண்டியில் சென்ற இருவரும் ஹோட்டல் மீது தாக்குதல் நடாத்தியதையடுத்து அங்கிருந்த கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்த நிலையில் வெளியே வந்த இளைஞனுக்கும் அந்த இருவருக்கும் இடையே மோதல் எற்பட்டதையடுத்து இளைஞனின் தாக்குதலிவல் அந்த இருவரும் படுகாயமடைந்ததையடுத்து அங்கிருந்து இளைஞன் தப்பி ஓடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதில் படுகாயமடைந்த 47, 45 வயதுடைய இருவரையும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதனையடுத்து இந்த சம்பவத்தையடுத்து அந்த பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன் இன முறுகல் ஏற்படும் நிலை ஏற்பதை தடுப்பதற்காக உடனடியாக விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிசார் வரவழைக்கப்பட்டு பிரதேசத்தில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பெரிசார் மேற்கொண்டுவருகின்றனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "தமிழ் மக்களுக்கு அரசியல் செய்யும் எக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்தால் அவர்களுக்கு சம அங்கீகாரம் கொடுத்து செயல் பட நாங்கள் தயாராக இருக்கிறோம்"

## மன்னாரில் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு

(11-05-2024)



தமிழ் தேசிய பரப்பில் ஸதமிழ் மக்களுக்கு அரசியல் செய்யும் எக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்தாலும், அவர்களுக்கான சம அங்கீகாரம் கொடுத்து தொடர்ச்சியாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை செயல்படுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என கிழக்கு மாகாண ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட அங்கத்துவ கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சி அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ் தலைமையில் மன்னாரில் மாவட்ட குழு அமைக்கும் நடவடிக்கை இடம் பெற்றது.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அங்கத்துவ கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே கிழக்கு மாகாண ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்(ஜனா) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2001 ஆம் ஆண்டு முரண் பாடுகளுக்கு மத்தியில் இருந்த போராட்ட இயக்கங்கள்,மதவாத கட்சிகள் எல்லாம் இணைந்து ஒன்றிணைந்து தமிழ் தேசியக்கூட்டமைப்பு உருவாக்கின. தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாகிய காலத்தில் இருந்து இன்று வரை தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பல கட்சிகள் வெளியேற. சில கட்சிகள் உள்ளே நுழைந்தார்கள்.

எப்படி இருந்தாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக பயணித்துக் கொண்டு வந்தது. 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் தமிழரசுக்கட்சி வெளி யேறியதை தொடர்ந்து மீதமிருந்த தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தமிழ் மக்கள் விடுதலைக்கழகம் (புளொட்), ஆகியவை இணைந்து ஏற்கனவே வெளியேறிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபி.ஆர்.எல்.எப்), ஜனநாயக போராளிகள் கட்சி, மற்றும் தமிழ் தேசிய கட்சி உட்பட ஐந்து கட்சிகளும் இணைந்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற பெயரில் தமிழ் தேசிய கூட்டமைப்பாக நாங்கள் இன்று வரை செயல்பட்டு வருகிறோம்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்பது தேர்தல் திணைக்களத்தில் ஓர் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டிருந்தது. கடந்த காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இயங்குவதைப் போல் அல்லாமல் தற்போதைய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற பெயரில் ஒரு கட்டமைப்புடன் நாங்கள் இயங்கிக் கொண்டு வருகின்றோம்.

அந்த வகையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு ஒரு நிறைவேற்றுக் குழு இருக்கிறது. நிறைவேற்றுக் குழு எடுக்கின்ற முடிவு தான் இறுதி முடிவாக இருக்கும் இவ் வேளையில் தற்போது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயல்பாடுகளை மாவட்ட ரீதியாக நாங்கள் விஸ்தரித்து கொண்டு வருகிறோம்.

ஒவ்வொரு மாவட்டமாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் மாவட்ட கிளைகள் உருவாக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது.

அதற்கமைவாக யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாரை போன்ற மாவட்டங்களில் மாவட்டக்குழுக்கள் உறுவாக்கப்பட்டுள்ள நிலையில் சனிக்கிழமை (11) மன்னாரில் மாவட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் மாவட்ட குழுவை உருவாக்கி மிக விரைவில் இந்த மாவட்ட குழுக்களின் சம்மேளனத்தை நாங்கள் கூட்டி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயல்பாடுகளை தொகுதி, பிரதேச மற்றும் வட்டார ரீதியாக உருவாக்கி, தமிழ் மக்களுக்கு உரித்தான எதிர்கால அரசியல் தலைமைத்துவத்தை கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அந்த வகையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு ஒரு கட்டமைப்பு இருக்கிறது. இணைத்தலைவர்கள் இருக்கிறார்கள்.

தேவையான பதவிகள் இருக்கின்றன. அதற்கான யாப்பும் உள்ளது. யாப்பின் அடிப்படையில் தமிழ் தேசிய பரப்பில் செயல்படும் தமிழ் மக்களுக்கு அரசியல் செய்யும் எக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்தாலும், அவர்களுக்கான சம அங்கிகாரத்தை கொடுத்து தொடர்ச்சியாக இந்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி யை செயல்படுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையின் மிகவும் உயரமான மனிதனாம் குணசிங்கம் கஜேந்திரன்



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு - கைவேலி பகுதியில் இலங்கையின் மிகவும் உயரமான மனிதனாம் குணசிங்கம் கஜேந்திரன் வசித்து வருகின்றார். இவர் யாழ்ப்பாணம் - சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவர் 7 அடி 2 அங்குலம் உயரத்தினை கொண்டிருப்பதனாலேயே இலங்கையில் தற்போது உயரமான மனிதனாக இடம் பிடித்துள்ளார்.

இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையான 45 வயதுடைய இவர் முச்சக்கர வண்டி ஓட்டுநராக இருக்கின்றார். இவர் அதிக உயரமாக இருப்பதனால் முச்சக்கரவண்டிக்குள் அமர்ந்திருப்பது கூட கடினமானதாகும்.





தனது அசாதாரண உயரத்தால் எண்ணற்ற பிரச்சினைகளை சந்திக்க நேரிடுவதாகவும், இலங்கையில் தனது கால்களின் நீளத்திற்கு ஏற்ற பாதணிகளை எடுக்க முடியவில்லை எனவும், அவற்றை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றார்.

இவர் ஒரு முன்னாள் போராளி ஆவார். இவருக்கு தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் உயரிய கௌரவம் வழங்கி சிறப்பாக கண்காணித்து வந்ததாக கூறப்படுகிறது.

இவர் இலங்கையின் உயர்ந்த மனிதனாக இருந்தாலும் இவருக்கு வழங்கவேண்டிய அங்கீகாரத்தையும் செலுத்த வேண்டிய அக்கறையையும் பேணுவதற்கு இலங்கை அரசாங்கம் தவறியுள்ளது. இவரது குடும்பம் தற்போது மிகவும் வறிய நிலையில் காணப்படுகிறது. அத்துடன் இவருக்கு காலில் ஒருவிதமான நோய் ஏற்பட்டு பல தடவைகள் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் அவரது காலில் ஏற்பட்ட நோய் தாக்கம் இதுவரை குணமடையவில்லை.

இவர் ஒரு தமிழர், அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினராக இருந்தமையால் இவருக்கான அங்கீகாரம் கிடைக்கவில்லையா என மக்கள் மத்தியில் கேள்விகள் எழுந்துள்ளன.

இவ்வாறானவர்களுக்கு ஏனைய நாடுகள் உயரிய கௌரவத்தை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# களியாட்டங்களை தவிர்ப்போம் தேசம் எங்கும் நினைவுகூர்வோம் — அறைகூவல் விடுக்கிறார் நிரோஷ் தியாகராஜா



ஈழத் தமிழர் வாழ்வில் பெருந்துயர் தோய்ந்த - மறக்கவே முடியாத பெரும் வலியைத் தந்து சென்ற முள்ளிவாய்க்கால் என்னும் பேரவலத்தின் நினைவுநாள் இன்று ஆரம்பமாகின்றது.

இந்த ஒரு வாரத்துக்கு நாம் களியாட்டங்களைத் தவிர்த்து, குறுகிய நிலப்பரப்புக்குள் கொன்றுகுவிக்கப்பட்ட எங்கள் உடன்பிறப்புக்களுக்காக ஆத்மார்த்தமாக வழிபடுவோம். இவ்வாறு வட மாகாணத்தின் இளம் அரசியல்வாதியும் முன்னாள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளரும் ரெலோ கட்சியின் முக்கியஸ்தருமான நிரோஷ் தியாகராஜா அவர்கள் அறைகூவல் விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் இன்று ஆரம்பமாவதை முன்னிட்டு அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

நீதியின் அச்சாணியில் சுழலாத இந்த உலகம், அதிகாரமற்ற தமிழர்களை அடக்கி ஒடுக்கி அணுவணுவாய் கொல்வதை வேடிக்கைபார்த்த அந்தப் பெருந்துயரம் அரங்கேறி இன்றுடன் 15ஆண்டுகள் நிறைவுறுகின்றன. பச்சிளங் குழந்தைகளையும், பசியால் பல மணிநேரம் கால்கடுக்க கஞ்சிக்காக காத்திருந்த சிறுவர்களையும் ஈவுஇரக்கமின்றி கொத்துக்குண்டுகளை வீசிக்கொன்றொழித்த சிங்கள அரசுக்கு இன்றும் செங்கம்பளம் வீசிக்கொண்டிருக்கும் சர்வதேசத்திடம்தான் நாமும் எமக்கான நீதிக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றோம்.

பூகோள பந்தின் அரசியல் சடுகுடுதனங்களும், சகுனி ஆட்டங்களும் எங்களின் நீதிக்கான பாதையை எங்காவது திறப்பதற்காக வாய்ப்பை ஏற்படுத்தித்தராதா என்ற அங்கலாய்ப்பிலேயே காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கின்றோம்.

தாய்நிலம் இன்று சிங்கள ஆட்சியாளர்களால் வன்புணரப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அந்நியர்களால் பங்குபிரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அடுத்த தலைமுறை தாய்நிலத்திலிருந்து தப்பியோடத்துடிக்கின்றது.

எங்கள் பேரவலங்களையும் - வலிகளையும் மறக்கச்செய்கின்ற நிகழ்ச்சி நிரல் இளம்சமூகத்திடையே கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. எம்மைச் சூழ்ந்திருக்கும் இந்தச் சவால்களையும் தாண்டியே நீதிக்கான பயணத்தை தொடரவேண்டியிருக்கின்றது.

15 ஆண்டுகளுக்கு முன்னர் மடிந்த அந்த ஆன்மாக்கள், நாங்கள் நீதியைப்பெற்றுத் தருவோம் என்று இன்றும் நினைத்துக் கொண்டிருக்கின்றன. அதற்காக காத்திருக்கின்றன. அந்த ஆன்மாக்களின் நினைவுகளுக்கு உயிர்கொடுக்க நாம் ஆத்மார்த்தமாக உழைப்போம், என்றுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பலாலி பொலிஸார் துரத்திச் சென்றதால் மோட்டார் சைக்கிளில் சென்றவர் விபத்தில் உயிரிழப்பு!



11-05-2024 அன்று இரவு, பலாலி பொலிஸார் துரத்திச் சென்றதால் நபர் ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது சங்கானை வீதி, அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த செல்வநாயகம் பிரதீபன் (வயது 41) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது பலாலி பொலிஸார் வழிமறித்தனர். இந்நிலையில் அவர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாததால் அவரை துரத்திச் சென்றனர். இதன்போது அவர் வேகமாகச் சென்றதால் பலாலி ஆயர்கடவை பிள்ளையார் ஆலயத்துக்கு அருகே மின்கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளாகினார். இந்நிலையில் பொலிசார் அவரை, 1990 இலக்க அவசர நோயாளர் காவு வண்டி மூலம் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்து இடம்பெற்ற பகுதி சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதி என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் பொலிசாருக்கும் அங்கிருந்த பொது மக்களுக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இந்நிலையில் குறித்த பகுதியில் பதற்றம் நிலவியது. இதனை தடுப்பதற்கு அங்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

# தென்மராட்சியில் இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம்

இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி கிளையினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி பவணியும் 12-05-2024 அன்று காலை 10.30 மணியளவில் சாவகச்சேரி பேரூந்து நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் திருமதி சசிகலா ரவிராஜ்ஜின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.





இதன் பொழுது முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்தவர்களை நினைவுகூறி பொதுச்சுடர் திருமதி சசிகலா ரவிராஜ்ஜினால் ஏற்றி வைக்கப்பட்டு தொடர்ச்சியாக ஈகைச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சியும் விநியோகிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து தமிழின படுகொலை அடையாளப்படுத்தும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தியும் இதேவேளை முள்ளிவாய்க்கால் கஞ்சியும் விநியோகிக்கப்பட்டது. இதன் பொழுது முள்ளிவாய்க்கால் கஞ்சியின் வரலாற்றினை உள்ளடக்கிய துண்டுபிரசுரமும் வழங்கி வைக்கப்பட்டது.



தொடர்ந்து படுகொலை செய்யபட்ட மாமனிதர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரவிராஜ்ஜின் திருவுருவ சிலை முன்றலிலும் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி விநியோகிக்கப்பட்டது.

இதேவேளை கொடிகாமம் பேரூந்து நிலையத்தில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சிவநேசன் தலைமையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ந்து நாளை 14ஆம் திகதி வடமராட்சியிலும், 15ஆம் திகதி கோப்பாய், மானிப்பாய், நல்லூர் பிரதேசங்களிலும், 16ஆம் திகதி வட்டுக்கோட்டையிலும், 17ஆம் திகதி வேலணையிலும், 18ஆம் திகதி காரைநகரிலும் பயணிக்கும்.

இறுதிநாள் நினைவேந்தல் சங்கானை பேருந்து தரிப்பிடத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தங்கள் பிரதேசங்களுக்கு வரும்பொழுது மக்கள் அணிதிரண்டு ஆத்மார்த்தமாக அஞ்சலிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# மலேசியாவில் உயிரிழந்த மஸ்கெலியா, மொடிங்ஹேம் தோட்டத்தைச் சேர்ந்த இளைஞனின் சடலம் பெருந் திரளானோரின் கண்ணீருடன் அடக்கம்

உலக செய்திகள் World News



(13-05-2024)

மலேசியாவில் உள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றிய நிலையில் உயிரிழந்த தமிழ் இளைஞனின் சடலம் ஞாயிற்றுக்கிழமை (12-05-2024) மாலை அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

மஸ்கெலியா, மொடிங்ஹேம் தோட்டத்தைச் சேர்ந்த ராஜகுமார் டேவிட்சன் என்ற 24 வயது திருமணமாகாத இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மலேசியா கோலாலம்பூரில் உள்ள உணவகம் ஒன்றில் பணிபுரிந்து வந்த நிலையில் கடந்த மாதம் 24 ஆம் திகதி கொதிகலன் குறித்த இளைஞன் மீது விழுந்ததில் படு காயமடைந்து கோலாலம்பூரில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார்.

இந்நிலையில் கடந்த 5 ஆம் திகதி காலை சிகிச்சைப் பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டிருந்த அந்நாட்டு பொலிஸார் இளைஞனின் குடும்பத்தினருக்கு அறிவித்திருந்தனர்.

இதற்கமைய, இளைஞனின் சடலம் இலங்கையின் மஸ்கெலியா மோட்டிங்ஹாம் பிரிவில் உள்ள பிரன்சுவிக் தேயிலைத் தோட்டத்தில் உள்ள அவரது வீட்டிற்கு கொண்டு வரப்பட்டு ஞாயிற்றுக்கிழமை (12) பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் மலேசியாவிற்கு வேலைக்காக சென்றிருந்த நிலையில் இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.



# பிரதமர் திரு நரேந்திர மோடி 13-05-2024 திங்கட்கிழமை அன்று அதிகாலை குருத்வாரா தகாத் ஶ்ரீ பாட்னா சாஹிப் ஜிக்கு விஜயம்

## Prime Minister Shri Narendra Modi visited to Gurudwara Takhat Shri Patna Sahib ji early morning on Monday the 13th of May.

பிரதமர் திரு நரேந்திர மோடி 13-05-2025 திங்கட்கிழமை அன்று அதிகாலை குருத்வாரா தகாத் ஶ்ரீ பாட்னா சாஹிப் ஜிக்கு விஜயம் செய்தார் என்பதை அனைவரும் அறிந்திருப்பார்கள்.

ஶ்ரீ குரு கோவிந்த் சிங் ஜியின் பிறந்த இடமான தகாத் ஶ்ரீ ஹரிமந்திர் சாஹிப்பில் பிரதமர் வணக்கம் செலுத்தினார். அத்துடன் அவர் அர்தாஸுடன் சேர்ந்து கீர்த்தனையும் ரசித்து அங்கேயே தன் நேரத்தை கழிததார்.

பிரதமர் செளர் சாஹிப்பின் சேவை செய்து, "சர்பத் தா பாலா" பாடலில் அமர்ந்தார். அவர் அங்குள்ள லங்கார் சமையலறையையும் (சமூக சமையலறை) பார்வையிட்டார், பருப்பு தயாரித்தார், குருத்வாராவில் இருக்கும் சங்கத்திற்கு உணவு வழங்கினார்.

இந்த பயணத்தின் போது பிரதமருக்கு குருத்வாரா நிர்வாகக் குழுவினரால் "சன்மான் பத்ரா" என்னும் பட்டம் மற்றும் சீக்கிய பீபிகளால் மாதா குஜ்ரி ஜியின் உருவப்படம் வழங்கப்பெற்றது.



# அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் ஜூ லி சங் மானிப்பாய் வைத்தியசாலைக்கு விஜயம்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

**பு. கஜிந்தன்**

அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் ஜூலி சங் 15-05-2024 அன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணம் மானிப்பாயில் அமைந்துள்ள கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு அன்று மாலை விஜயம் மேற்கொண்டிருந்த ஜூலி சங் வைத்தியசாலை செயற்பாடுகளை பார்வையிட்டார். அங்குள்ள ஊழியர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

விஜயத்தின் நினைவாக மரக்கன்று ஒன்றும் வளாகத்தில் நாட்டப்பட்டது. இவ் விஜயத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி எஸ். சுரேந்திரகுமாரன், தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் வி.பத்மதயாளன், வைத்தியர்கள் ஊழியர்கள் அமெரிக்க தூதரக அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

1848 ஆம் ஆண்டு அமெரிக்கன் மிசனறியை சேர்ந்த சாமுவேல் மிஸ் கிறீன் என்பவரால் இவ்வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# கிளிநொச்சி கோணாவில் மகாவித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்களின் முன்மாதிரியான செயற்பாடு!





க.பொ.த (சா/த) 2023(2024) பரீட்சை எழுதிய மாணவர்களின் முன்மாதிரியான செயற்பாட்டினை பலரும் பாராட்டி வருகின்றனர்.

கிளிநொச்சி கோணாவில் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் பரீட்சை முடிவடைந்த பின் பாடசாலை சூழலை சிரமதானம் மூலம் சுத்தப்படுத்திய பின் தமது ஞாபகார்த்தமாக மரக்கன்றுகளை நாட்டியுள்ளனர்.

இந்த செயற்பாடு பலராலும் பாராட்டப்பட்டு வருகின்றது.

# சர்வதேச ஊடகங்கள் முள்ளிவாய்க்கள் நோக்கி "படையெடுப்பு"

இலங்கை செய்திகள் Sri Lanka News

**மன்னார் நிருபர்**




**எமது மன்னார் செய்தியாளர் லம்பேர்ட்**

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படுவதை சர்வதேச ஊடகங்கள் அங்கு சென்று உலகெங்கும் எடுத்துச் செல்லும் ஊடக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் அழிப்பு தினமாக தமிழ் மக்கள் அனைவரும் பல கெடுபிடிகளுக்கு மத்தியில் உயிர் துறந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தி வருவது வழக்கமான செயற்பாடாக மாறியுள்ளது.

இந்நிலையில் மே மாதம் தொடங்கியதில் இருந்து மக்களுக்கு முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கப்படுகிறது.

இதனை இம்முறை சர்வதேச ஊடகங்கள் நேரடியாக அங்கு படையெடுத்து கண்காணித்து வருகின்றன.

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் மேற்கு பொதுசந்தை கட்டிடத்திற்கு அருகில் கடந்த 16-05-2024 அன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி வழங்க ஆயத்த வேலைகள் இடம்பெற்று வரும் நிலையில் குறித்த வேலைகளையும், முள்ளிவாய்க்கால் முக்கிய நினைவிடங்கள், தடய பொருட்களையும் சர்வதேச ஊடக நிறுவனங்களைச் சேர்ந்த சில ஊடகவியலாளர்கள் அன்றைய தினம் நேரடியாக கவனித்து தங்கள் பணிகளில் ஈடுபட்டிருப்பைக் காணலாம்.





# முள்ளிவாய்க்காலில் உயிழந்தவர்களுக்கு யாழ்ப்பாணம் தீவகத்தில் நினைவேந்தல்

இலங்கை செய்திகள் Sri Lanka News

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் ஆரம்ப நாளான 12-05-2024 அன்று தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் வேலணை வங்களாவடியில் அமைந்துள்ள நினைவுத்தூயில் நிறைவேந்தர் நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது இறுதி யுத்தத்தின் போது உயிரிழந்தவர்களுக்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.







# தமிழ் மக்கள் போலித் தேசிய மாயையிலிருந்து விடுபடத் தொடங்கிவிட்டனர் என்கிறார் அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு!

பொது வேட்பாளர் விடயம் என்பது தமிழ் மக்களுக்கு பயனற்ற விடயம். அதை முன்னெடுப்பது தோல்வியிலேயே முடியும் என மக்கள் வெளிப்படையாக கூறத்தொடங்கியுள்ளதானது தமிழ் மக்கள் தம்மை பீடித்திருந்த போலித் தேசியம் என்ற மாயை அரசியலிலிருந்து படிப்படியாக வெளிச்சத்தக்கு வருவதை உணர்த்துகின்றது என தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடைமுறைச் சாத்தியமான எமது கட்சியின் வழிமுறையுடன் மக்கள் கைகோர்ப்பார்களானால் விரைவில் அனைத்து பிரச்சினைகளுக்கும் என்னால் தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் தென்மராட்சி பிரதேசத்தை உள்ளடக்கிய கட்சியின் பொறுப்பாளர்கள் வட்டார செயலாளர்கள் வட்டார நிர்வாக உறுப்பினர்கள் செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு 11-05-2024 அன்று சாவகச்சேரியில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், நடைமுறைச் சாத்தியமான வழிகள் தொடர்பில் எமது கட்சி மட்டும் தெளிவாக இருக்கின்றது. ஆனால் இவ்விடயத்தில் எமது கட்சி இருப்பதை விட மக்களும் தெளிவாக இருக்க வேண்டும்.

குறிப்பாக நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமராச மற்றும் அனுர குமார திசாநாயக்க ஆகிய மூன்று வேட்பாளர்கள் பிரதானமானவர்களாக காணப்படுகின்றார்கள்.

இந்த மூவரில் ஒருவருடன் கலந்துரையாடி எமது வாக்குகளை உங்களுக்குத் தலராம் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற பேரம்பேசலைச் செய்து கலந்துரையாடினால்தான் ஒரு ஆரோக்கியமான சூழல் உருவாகும். ஆனாலும் தற்போதைய நிலையில் ரணில் விக்ரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வருவதே சரியானதாக இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

அதனால்தான் எமது கட்சியின் ஆதரவு ரணில் விக்ரமசிங்கவுக்கதான் என்பதை நாம் எற்கனவே வெளிப்படையாக அறிவித்தவிட்டோம். அதுமட்டுமல்லாது தற்போதைய காலச் சூழலில் தென்னிலங்கையில் போட்டியிடும் ஒரு தரப்பினருடன் இணக்கத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு ஆதரவு வழங்கி அதனூடாக பேரம் பேசும் சக்தியாக நாம் உருவாகும் நிலையை உருவாக்குவதே அவசியமாகும்.

கடந்தகாலங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தமிழ் தரப்பினர் சரியான முறையில் கையாளாத காரணத்தினால் தான் தமிழ் மக்கள் தற்போதைய நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். 37 வருடங்களாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டம், மாகாணசபை முறைமையை ஆரம்பித்ததனூடாகத்தான் தமிழர்களுடைய அரசியல் உரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என நான் சொல்லி வருகின்றேன்.

ஆனாலும் அதனை "செவிடன் காதில் ஊதிய சங்கு" போல் யாரும் புரிந்துகொண்டிருக்கவில்லை. ஆனால் தற்போது அதுபற்றி பலரும் முணு முணுக்கின்றார்கள். இது ஆரோக்கியமானதாக இருந்தாலும். அன்று அதை எதிர்க்கும்போதும், இன்று அதனை ஆதரிக்கும்போதும் உண்மைத் தன்மையுடன் தமழ் தரப்பினர் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. இதேநேரம் இதய சுத்தியுடன் கூடிய உண்மைத்தன்மையாக முன்வருவார்களேயானால் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம்.

மேலும் புண்ணுக்கு வலியா மருந்துக்கு வலியா என பார்த்தால் கடந்த கால தமிழ் அரசியல்வாதிகள் மருந்துக்குத்தான் வலி என்ற நிலையிலிருந்தே அரசியலை முன்னெடுத்திருந்தனர். அது என்ன நிலமையில் மக்களைக் கொண்டு விட்டுள்ளது என்பதை இன்று உணர முடியும்.



எனவே புண்ணுக்குத்தான் வலி என்பதையும், இதனை தமிழ் மக்களும் சரிவர உணர்ந்து யார் தமது பிரச்சினைகளை ஆக்கபூர்வமாக முன்னெடுக்கின்றார்களோ அவர்களோடு அணிதிரள்வதுதான் சரியானது எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# "கஞ்சி"க்கு அஞ்சும் இலங்கை அரசாங்கம்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



கஞ்சி காய்ச்சிக் கொடுப்பது கூட குற்றமாகப் பார்க்கப்படும் ஒரு நாடு. அதற்கு அவர்கள் கொடுக்கும் சட்ட விளக்கங்கள் எதுவாகவும் இருக்கலாம். உண்மை எதுவென்பது முழு உலகத்துக்கும் தெரியும். இறுதிக்கட்டப் போரில் உணவு ஓர் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது என்று கூறி அந்த உணவையே ஒரு நினைவுப் பொருளாக மாற்ற வேண்டும் என்று முதலில் கூறியது தமிழ் சிவில் சமூக அமையம் என்ற ஒரு குடிமக்கள் சமூகம் தான். கஞ்சியை ஒரு நினைவுப் பொருளாக மாற்றி கிராமங்கள் தோறும் அதை சமைத்துப் பரிமாற வேண்டும் என்ற நடைமுறையை அந்த சிவில் சமூகம் தான் பரவலாக்கியது. இப்பொழுது கஞ்சி பரவலாகிவிட்டது. தாயகத்திலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் கஞ்சி ஒரு நினைவு பொருளாக மாற்றப்பட்டிருக்கிறது.

ஆனால் கடந்த வாரம் திருகோணமலையில் நடந்த சம்பவமானது அரசாங்கம் கஞ்சியை ஒரு குற்றப் பொருளாகப் பார்க்கின்றதுஎன்பதனை காட்டுகின்றது. விடுதலைப் போராட்டம் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிற்கும் பயப்படும் அரசாங்கம் கஞ்சிக்கும் பயப்படுகின்றது. கஞ்சியைத் தடுப்பதன் மூலம் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு உணர்த்துவது எதனை? சிங்கள மக்களுக்கு உணர்த்துவது எதனை?

தமிழ் மக்களுக்கு நினைவுகூர்தலில் இருக்கக்கூடிய வரையறைகளை அரசாங்கம் உணர்த்த முயற்சிக்கின்றது. அதேசமயம் சிங்கள மக்களுக்கு நினைவு கூர்தலை தடுப்பதில் அரசாங்கம் தீவிரமாக இருக்கிறது என்பதனை உணர்த்த விரும்புகிறது. கூட்டிக்கழித்துப் பார்த்தால் தனிச்சிங்கள வாக்குகளை எப்படித் திரட்டுவது என்று அரசாங்கம் சிந்திக்கின்றது என்று எடுத்துக் கொள்ளலாமா?

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் யாருடைய பொது வேட்பாளராகக் களமிறங்குவார் என்பது இன்று வழி தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அவர் ராஜபக்சக்களின் பொது வேட்பாளராகக் களமிறங்கும் சாத்தியக்கூறுகள்தான் அதிகமாகத் தெரிகின்றன. அப்படி ஒரு நிலைமை வந்தால், அவருக்கு இதுபோல தமிழ் மக்களின் உணர்வுகளை ஒடுக்கும் நடவடிக்கைகள் தேவை. தமிழ் மக்களுக்கு எதிராக ஒடுக்கு முறைகளைத் தீவிரப்படுத்தினால் தமிழ் மக்கள் எதிர்த்துப் போராடுவார்கள். தமிழ் மக்கள் போராடும் போது அதற்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியிலும் எதிர்ப்பு அலை தோன்றும். அதுபோன்ற எதிர்ப்பு அலைகள்தான் தனிச்சிங்கள வாக்குகளைத் திரட்ட உதவும் என்று அரசாங்கம் சிந்திக்கின்றதா?

அடுத்த 15 ஆண்டுகளிலும் கஞ்சி படிப்படியாகப் பரவி வந்திருக்கிறது. அந்த பரவலாக்கத்துக்குள் தெளிவின்மைகள் உண்டு. குழப்பங்கள் உண்டு. கஞ்சி தொடர்பாக ஒரு பொதுவான "ரெஸிபி" உண்டு. எனினும் கஞ்சியைக் காய்ச்சும் எல்லாருமே அதனைப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. இறுதிக் கட்டப் போரின் இறுதி மாதங்களில் தேங்காய் இருக்கவில்லை. ஆனந்தபுரம் சண்டையோடு தேங்காய் பெருமளவுக்கு இல்லாத ஒரு நிலை வந்து விட்டது. ஆனால் அரிசி கோதுமை மா போன்றன இருந்தன. இந்நிலையில் ஒரு பெரிய கிடாரத்தில் அரிசியைப் போட்டு போதிய அளவு நீர் விட்டு வேக விடுவார்கள். அரிசி வேகி வரும்பொழுது, பாலுக்குப் பதிலாக இரண்டு அங்கர் பால் மா பக்கெட்டுகளைக் கரைத்து அதற்குள் ஊற்றுவார்கள்.இப்படித்தான் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டது.




அந்தக் கஞ்சி வழமையாக வீடுகளில் சமைக்கும் கஞ்சிகளைப் போல சுவையானது அல்ல. அது சுவையற்றது. ஆனால் அந்த அந்த நேரத்தில் அது தான் பலருக்கு இன்றியமையாத உணவாக இருந்தது. அது ருசியானதா இல்லையா என்ற கேள்வி அங்கே இருக்கவில்லை. பசிக்கு உணவு அவ்வளவுதான். எனவே கஞ்சியைப் பரவலாக்கும் பொழுது அதன் ருசியின்மையும் பரவலாக்கப்பட வேண்டும். அந்த ருசியின்மைக்குள்தான் செய்தி இருக்கிறது. அந்த ருசியின்மைக்குள்தான் அடுத்த தலைமுறைக்கு கொடுக்கப்பட வேண்டிய செய்தி இருக்கிறது.

அந்த ருசியின்மைதான் கடைசிக் கட்டப் போரில் தனித்து விடப்பட்ட மக்களுடைய கண்ணீரின் ருசி. அந்த ருசியின்மைதான் அந்த மக்கள் சிந்திய ரத்தத்தின் ருசி. அந்த ருசியின்மைதான் மரணத்தின் ருசி. தோல்வியின் ருசி ஒரு யுக முடிவின் ருசி. அந்த ருசியை அல்லது அந்த ருசியின்மையை தமிழ்ப் பரப்பு எங்கும் பரவலாக்கும் பொழுது ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலைமுறைக்கு நினைவுகளும் செய்திகளும் கடத்தப்படுகின்றன. அந்த ருசியின்மைக்கு பின்னால் இருக்கும் செய்தி; அந்த ருசியின்மைக்கு பின்னாலிருக்கும் அரசியல் உலகத்தின் மனசாட்சியின் கையாலாகத்தனம் போன்றவை தொடர்பான செய்திகள் பரவலாக்கப்படுகின்றன.

ஒரு சிறிய மக்கள் கூட்டம் ஒடுங்கிய ஒரு கடற்பரப்பில் ஏன் தனித்து விடப்பட்டது? என்ற செய்தி அந்த ருசிக்குள் இருக்கிறது. உலகின் பெரும்பாலான நாடுகள் அந்த சிறிய மக்கள் கூட்டத்தை ஏன் கைவிட்டன? என்ற கேள்வி அந்த ருசிக்குள் இருக்கிறது. உலகப் பெரு நிறுவனமாகிய ஐநா போன்ற நிறுவனங்கள் ஏன் அந்த மக்களைக் காப்பாற்றவில்லை? என்ற கேள்வி அந்த ருசிக்குள் இருக்கிறது.

இன்று காசாவில் இனப்படுகொலை செய்யப்படும் பலஸ்தீனர்களுக்காக குரல் கொடுக்க ஒரு தென்னாபிரிக்கா இருக்கிறது. வேறு சில நாடுகள் இருக்கின்றன. ஆனால் அன்றைக்கு தனித்து விடப்பட்டிருந்த் சுற்றி வளைக்கப்பட்டிருந்த ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அப்படி எந்த நாடும் பகிரங்கமாக முன்வரவில்லை. ஏன் முழு உலகமும் ஈழத் தமிழர்களை கைவிட்டது? என்று அந்த கேள்வி அந்த ருசியின்மைக்குள் இருக்கிறது.

எனவே, ஈழத் தமிழர்கள் இக் கேள்விகளை தமது வீடுகளின் சாப்பாட்டு அறைகளிலும் வரவேற்பு அறைகளிலும் பொது இடங்களிலிலும் கேட்டு அவற்றுக்குரிய பதில்களை புதிய தலைமுறைகளுக்கு வழங்க வேண்டும். மூத்த தலைமுறை இளைய தலைமுறைக்கு அது தொடர்பாக அறிவூட்ட வேண்டும்.

உலகில் பெற்றோர் குழந்தைகளை உறங்க வைப்பதற்குக் கதைகளைச் சொல்லுவார்கள். அவை பெரும்பாலும் அறநெறிக் கதைகளாகவும் நீதிநெறிக் கதைகளாகவும் இருப்பதுண்டு. ஆனால் ஈழத் தமிழ் பெற்றோர் அறநெறிக் கதைகளையும் நீதிநெறி கதைகளையும் சொன்னால் மட்டும் போதாது. 15 ஆண்டுகளுக்கு முந்திய தமது இறந்த காலத்தின் கதைகளையும் அவர்கள் சொல்ல வேண்டும். இறுதிக்கட்ட போரில் எங்கே மனித குலத்தின் அறம் பிழைத்தது? நீதி பிழைத்தது?என்பதையும் இளைய தலைமுறைக்கு கதைகளாகச் சொல்ல வேண்டும். பாடல்களாகச் செல்ல வேண்டும்.

இது திரும்பத் திரும்ப காயங்களைக் கிளறும் ஒரு நடவடிக்கை என்றும் குணப்படுத்தலுக்கு எதிரானது என்றும் ஒரு தரப்பு கத்தத் தொடங்கும். திரும்பத் திரும்ப இன முரண்பாட்டை அதிகப்படுத்தும் விதத்தில் இந்த விடயங்களை அடுத்த தலைமுறைக்கு கடத்த வேண்டுமா என்று அவர்கள் கேட்பார்கள். இப்பொழுதே கேட்கின்றார்கள். ஒரு தமிழ் பொது வேட்பாளர் இனவாதத்தைத் தூண்டிவிடுவார் என்று ஒரு தொகுதித் தமிழர்கள் கேட்கின்றார்கள். ஆனால் வெடுக்கு நாறி மலையிலும் மயிலத்த மடுவிலும் திருகோணமலையில் கஞ்சி காய்ச்சிய பெண்களின் விடயத்திலும் எது தமிழ் மக்களுக்கு எதிராக இருக்கின்றது? என்று கேட்டால் அவர்கள் பதில் சொல்ல மாட்டார்கள்.

எனவே இறந்த காலத்தை நினைவூட்டுவது என்பது ஆறிப்போன காயத்தை மீண்டும் கிழித்து ரத்தத்தைப் பார்ப்பது அல்ல. அல்லது அயர் மூடிய காயத்தின் அயரை உரித்து அதைப் புதுப்பிப்பதும் அல்ல. இங்கு எந்த ஒரு காயமுமே ஆறவில்லை என்பதுதான் முக்கியமான செய்தி. காயங்கள் அப்படியே உண்டு. அவை கூட்டுக் காயங்கள். குணப்படுத்தவியலாக் காயங்கள். பலஸ்தீன கவிஞர் ஒருவர் கூறுவது போல "குணப்படுத்தவியலாத காயமாக உனது இணையை என்றென்றும் பேணுவோம்" என்பதே சரி. அவை குணப்படுத்தவியலாக் காயங்கள். அந்தக் காயங்களை யார் எப்படிக் குணப்படுத்தலாம்?

அரசியல் ரீதியாக அந்த காயங்களுக்கு காரணமாக இருக்கின்ற ஒடுக்கு முறையை நிறுத்த வேண்டும். இனப்படுகொலைக்கு உள்ளாகிய ஈழத் தமிழர்களுக்கு பரிகார நீதி கிடைக்க வேண்டும். இனப்படுகொலைக்கு எதிரான நீதிதான் இனப் பிரச்சினைக்குமான தீர்வாக அமைய வேண்டும் என்ற அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இனிக் காயங்கள் ஏற்படாது என்ற உத்தரவாதத்தைத் தரக்கூடிய பொருத்தமான தீர்வு தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். அது ஓர் அரசியற் குணப்படுத்தல்.

அதேசமயம் உளவியல் ரீதியாகவும் குணப்படுத்தல் அவசியம். உளவியல் நோக்கு நிலையில் காயங்களைக் கிளறுவது காயங்களைப் புதுப்பிப்பது தவறு என்று சுட்டிக் காட்டப்படக்கூடும். ஆனால் அதில் உண்மையில்லை. அவை ஆறிப்போன காயங்கள் அல்ல. இப்பொழுதும் ஆறாத காயங்கள் என்பதுதான் உண்மை. கடந்த 15 ஆண்டுகளாக அவை ஆறவில்லை. எனவே ஆறாத காயங்களை எப்படி சுகப்படுத்தலாம் என்பது உளவியல் ரீதியாகவும் சிந்திக்கப்பட வேண்டும். சில மனநல மருத்துவர்கள் கூறுவது போல, காயங்களைத்; திறந்து; காயங்களை வாசித்து; காயங்களை எழுதி; காயங்களை இசைத்து; காயங்களைப் பாடி; காயங்களை வரைந்து; காயங்களை நிகழ்த்தி; காயங்களை கடக்கலாம். இந்த விடயத்தில் மருத்துவர்களோடு கலைஞர்களும் சேர்ந்து உழைக்கலாம். மதத் தலைவர்கள் உழைக்கலாம். ஏனென்றால் குணப்படுத்தல் செய்முறை என்பது ஒரு விதத்தில் பண்பாட்டுச் செய்முறையும்தான். அது ஒரு கூட்டுச் செய்முறை.

கூட்டுக் காயங்களுக்கு கூட்டுச் சிகிச்சைதான் தேவை. கூட்டு மனவடுக்களுக்கும் கூட்டுச் சிகிச்சைதான் தேவை. எனவே தனிய அதனை மருத்துவர்கள் மட்டும் கையாள முடியாது. அதை ஆஸ்பத்திரிகளுக்கு வெளியே ஒரு கூட்டு நடவடிக்கையாக முன்னெடுக்க வேண்டும். அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள். உள்ளிட்ட அனைத்துத் தரப்பும் அதில் ஒன்றிணைய வேண்டும்.

அரசியல் ரீதியாக தீர்வு மேலிருந்து கீழ்நோக்கி வர வேண்டும். அதே சமயம் உளவியல் ரீதியாக ஒரு தீர்வை ஈழத் தமிழர்கள் கண்டுபிடிக்க வேண்டும். அதைக் கீழிருந்து மேல் நோக்கி கட்டியெழுப்ப வேண்டும். அது ஒரு கூட்டுச் செய் முறையாக அமைய வேண்டும்.

கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்றுவதற்கு ஈழத்தமிழ் பரப்பில் உள்ள அரசியல்வாதிகளும் அரசியல் செயல்பாட்டாளர்களும் குடிமக்கள் சமூகங்களும் கூட்டாக உழைக்க வேண்டும். கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்றுவது எப்படி என்று ஈழத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும். கடந்த 15 ஆண்டுகளாகவும் நினைவு கூர்தல் என்பது அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையிலும் ஒரு சடங்காகவே காணப்படுகின்றது. நினைவுகளை கூட்டு ஆக்க சக்தியாக மாற்றுவதற்கான அரசியல் செய்முறைகள் தாயகத்தில் பலவீனமாக இருக்கின்றன.

தாயகத்தில் மட்டுமல்ல புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் நிலைமை அப்படித்தான் இருக்கின்றது. கூட்டு நினைவுகளை, கூட்டுக் காயங்களை, கூட்டுத் துக்கத்தை கூட்டும் மனவடுவை, கூட்டு ஆக்க சக்தியாக மாற்றுவதற்கு பதிலாக, நினைவுகளைக் கொச்சைப்படுத்தும் நிலைமைகள். வளர்ச்சியடைந்து வருகின்றன. கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ்ச் சமூகம் தொடர்ந்து சிதறிக் கொண்டே போகின்றது. அதேசமயம் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவாக மூன்றாவது புலப் பெயர்ச்சி அலை ஒன்று தோன்றியிருக்கிறது. அதாவது இனமும் சிறுகின்றது.நிலமும் சிறுக்கின்றது.

இப்படிப்பட்டதோர் வீழ்ச்சிகரமான பின்னணியில், நினைவுகள் தான் தமிழ் மக்களை ஓரளவுக்காவது கூட்டி கட்டி வைத்திருக்கின்றன. நினைவு கூர்தல் தான் தமிழ் மக்களை ஓரழுவுக்காவது திரளாக வைத்திருக்கின்றது. எனவே, தமிழர்கள் நினைவுகளைச் சுமக்க வேண்டும். நினைவுகளைப் போற்ற வேண்டும். நினைவுகளை ஆக்க சக்தியாக பண்புருமாற்றம் செய்ய வேண்டும். நினைவுகளில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

# மே.18, இன அழிப்புக்கான நீதிக்காக உழைப்போம் என உறுதி பூணும் நாள்

- நிமால் விநாயகமூர்த்தி (May 18, 2024)





**ப**தினைந்து வருடங்கள் சென்றுவிட்டன. இது போன்ற நாட்களில் தான் எல்லாமும் நடந்தேறியது. “எங்களை காப்பாற்ற எவராவது வரமாட்டார்களா?” என்னும் ஏக்கத்துடன் எங்கள் மக்கள் மரண உலகின் கைதியானார்கள். உலகம் காப்பாற்றும் என்று நாங்கள் நம்பினோம் - எங்களால் முடிந்தது எல்லாம் செய்தோம் - இறுதியில் எமது மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர் என்னும் கொடிதான செய்திதான் எங்களை வந்தடைந்தது.

எங்களுக்கு மாபெரும் அநீதி இழைக்கப்பட்டது. நீதி கோரி நாம் தொடர்ந்தும் போராடுகின்றோம் - ஆனாலும் எங்கள் முயற்சியில் தொடர்ந்தும் தோற்றுக் கொண்டேயிருக்கின்றோம். இந்தக் குற்றவுணர்வுடன், மீண்டுமொரு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் தலை தாழ்த்துகின்றோம்.

நமது தேச விடுதலைக்காக ஆகுதியாகிப் போனவர்களை நெஞ்சில் வைத்து போற்றும், கண்ணீரை துடைத்துக் கொள்ளும் இந்த உன்னத நாளில், நாம் நமக்குள் கேட்டுக் கொள்வோம்? நம்மால் ஏன் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை? நாம் எதிர்பார்த்த விடயங்கள் ஏன் நடைபெறவில்லை - எங்களது இதுவரை கால முயற்சிகளுக்கு என்ன நடந்தது? முள்ளிவாய்க்கால் கஞ்சியைக் கூட, சுதந்திரமாக காய்ச்சுவதற்கும் பருகுவதற்கும் சுதந்திரமில்லாத வாழ்வையல்லவா எமது மக்கள் எதிர் கொண்டிருக்கின்றனர். இதன் பின்னரும் நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம் - சர்வதேசத்தோடு பேசிக் கொண்டிருக்கின்றோம் - ஐ.நா.வுடன் தொடர்பில் இருக்கின்றோம் என்றெல்லாம் ஆறுதல் கொள்வதில் என்ன பெருமையுண்டு?

ஆரம்பத்தில் நம்பிக்கையை வாரி வழங்கிக் கொண்டிருந்த சர்வதேச அழுத்தங்கள் என்பவை, மெதுவாக ஒரு மாயமான் என்னும் தோற்றத்தை பெற்றிருக்கின்றது. ஏனெனில், அவ்வாறான அழுத்தங்களால் சிங்கள ஆளும் வர்க்கம் அச்சம் கொள்ளவில்லை - ஒருவேளை அச்சம் கொண்டிருந்தால் இந்தளவு மூர்க்கத்துடன் அவர்களால் அரசியலை முன்னெடுக்க முடியாது.

அவர்களது ஒவ்வொரு செயற்பாடுகளும் அவர்கள் அச்சம் கொள்ளவில்லை என்பதையே காண்பிக்கின்றது. அழுத்தங்கள் தொடர்பில் அச்சம் கொள்ளாத அரசுகளிடமிருந்து நாங்கள் மனமாற்றத்தை எதிர்பார்க்க முடியாது - ஒன்றில் அவர்கள் அச்சம் கொள்ளக் கூடியவறான அழுத்தங்களை வெளியுலகம் கொடுக்கவில்லை - அல்லது, அவ்வாறான அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடியளவிற்கான பிரச்சாரத்தை எங்களால் முன்னெடுக்க முடியவில்லை.

கடந்த பதினைந்து வருட கால புலம்பெயர் சமூகத்தின் பரப்புரை தேல்வியில் இருந்துதான் நாம் இதனை புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் சரியான பாதையில் சென்றிருக்கின்றோம், வினைத்திறனாக செயற்பட்டு இருக்கின்றோம், சூழ்நிலைகளை புரிந்து கொண்டு, அதற்கேற்ப செயற்பட்டிருக்கின்றோம்,

சர்வதேசம் எங்களுக்காக அதன் செவிகளை திறந்து வைத்திருக்கின்றது - இப்படியெல்லாம் எங்களால் சொல்லிக் கொள்ள முடியுமானால், பின்னர் எவ்வாறு தொடர்ந்தும் நாங்கள் வீழ்ந்து கொண்டிருக்கின்றோம்? ஏன் சிறிலங்கா அரசு கீழிறங்கவில்லை - தொடர்ந்தும் கீழிறங்க மறுக்கின்றது? இந்தக் கேள்விகளுக்கான பதிலில் நாம் கருத்தொற்றுமையுடன் சங்கமிக்கும் போது மட்டும் தான், நமது எதிர்கால செயற்பாட்டிற்கான கதவு திறக்கும்.

முள்ளிவாய்க்கால் துயரத்தின் உணர்வில் நாம் கலந்திருக்கும் இன்றைய கால பகுதியானது, நமது தேசத்தை பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானதொரு காலப் பகுதியாகும். அரசியல் ரீதியில் நமது தேசம் பெரும் ஆபத்தை எதிர் கொண்டிருக்கிறது. இது ஒரு வரலாற்று நெருக்கடி. வங்குரோத்து நிலைக்குள் சிக்கிக் கிடக்கும் சிறிலங்கா மீண்டெழும் வழிகளை தேடி வருகின்றது. இந்தப் பின்புலத்தில் இலங்கையின் ஒரே ஒரு பிரச்சினை பொருளாதார பிரச்சினைதான் என்னும் புரிதலை திணிக்கும் முயற்சியில் சிங்கள ராஜதந்திரம் தந்திரமாகவும், தூர நோக்குடன் செயற்பட்டு வருகின்றது. இந்தச் சவாலை வெற்றி கொள்ள நாம் என்ன செய்யப் போகின்றோம்?

சவாலை வெற்றி கொள்ளுதல் என்பது ஒரு கட்டம் என்றால் - முதல் கட்டம் சவாலை எதிர் கொள்வதாகும். நாம் ஒரு தேசிய இனம், தேசம் என்னும் நிலையில் எங்களை நிலை நிறுத்திக் கொள்வதுதான் முதல் கட்டமாகும். தமிழீழ விடுதலைப் போராட்டம் இடம்பெற்ற காலத்தில், ஆயுதப் போராட்டம் அனைத்துமாக இருந்தது. அதனால் ஒரு தேசமாக எங்களை நிலை நிறுத்துவதற்கு பிரத்தியேக முயற்சிகள் தேவை பட்டிருக்கவில்லை ஆனால் இப்போது நிலைமை அப்படியல்ல. கடந்த பதினைந்து வருடங்களில் தாயக தலைமைகள் வீழ்சியுற்றிருக்கின்றன. எமது மக்கள் தங்களுக்கள் சிதறியிருக்கின்றனர். அரச ஆதரவு அரசியல் ஊடுருவி, வளர்கின்றது. இவற்றை எதிர்கொள்வதுதான், தேசமாக எழுவதிலுள்ள முதல் சவாலாகும்.

இதனை கடக்க வேண்டும் என்றால், முதலில் மீண்டுமொருமுறை நாம் ஒரு தேசமா-கவே இருக்கிறோம் என்பதை இலங்கை தீவிற்குள் நிரூபிக்க வேண்டும். இது எவருக்குமானதல்ல - மாறாக எங்களுக்கானது.

இந்த அடிப்படையில்தான், தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம் தவிர்க்க முடியாத - தவிர்க்க கூடாத, விடயமாக இருக்கிறது. களமும் புலமும் இதில் ஓரணியாக இணைய வேண்டும். அனைத்து தமிழ் தேசிய தரப்புக்களும் ஒரு குடையின் கீழ் வரவேண்டும். சிறிலங்காவுக்கான ஜனாதிபதி தேர்தல் அரங்கில், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கி, அவருக்கு தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாக்களிக்கும் போது, அது கடந்த பதினைந்து வருடகால சரிவுகள், சிதைவுகள், தடுமாற்றங்கள், தோல்விகள், முரண்பாடுகள் அனைத்தையும் தமிழ் தேசிய வேள்வித் தீயில் எரித்து விடும். மேலும் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி இந்த ஜனாதிபதித் தேர்தலை ஓர் பொது வாக்கெடுப்பாக மாற்றுவது எமது சாமத்தியமாகும். நாம் புதுப் பொலிவுடன் நிமிர்வதற்கான சூழல் உருவாகும். இது இன்றைய சவாலை கடப்பதற்கான ஒரு வழியாகும்.

“காலத்தை தவறவிட்டால் கண்டவனெல்லாம் கதவை தட்டுவான்” என்னும் புதுவை அண்ணரின் கவிவரியை மனதில் நிறுத்தி, நாம் ஒரு தேசமாக திரள்வது ஒன்றுதான், பதினைந்து வருடகால, துயர நினைவுகளுக்கு - நாம் தேசமாக செலுத்தும் உன்னத அஞ்சலியாகும்.

---

## வீணாவின் கவிக்கணை

அழகான பயணம் இது,
ஆனால் இதில் பயணிக்கையில்
பல சங்கடங்களையும்
துன்பங்களையும் துயரங்களையும்
தாண்டிவரவேண்டியிருக்கும்,
ஒவ்வொன்றையும் தாண்டுவது
நம் வாழ்வின் ஒவ்வொரு
மைல்கல்லினை தாண்டுவது போல,
அதை மட்டும் நாம் தாண்டி விட்டால்
அதுவே நம்மை வெற்றி பாதைக்கு
கொண்டு சேர்த்து விடும்,

# வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெரு விழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



(13-05-2024)

வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெருந்திருவிழா 13-05-2024 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணாணந்த குருக்கள் தலைமையில் காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரையான சுப நேரத்தில் கொடியேற்றம் இடம் பெற்றது.

தொடர்ந்து உற்சவ மூர்த்திகளுக்கு வசந்த மண்டபத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் கொடிக் கம்பத்திற்கு முன் எழுந்தருளியதை தொடர்ந்து விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

அதனை தொடர்ந்து கொடிக் கம்பத்திற்கு விசேட அபிஷேகம் இடம் பெற்றது.

அதனை தொடர்ந்து கொடியேற்றும் விழாவில் இடம்பெற்றது.

இதன் போது கொடியேற்ற பெரு விழாவில் பல நூற்றுக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# மாந்தை மேற்கில் நெற்செய்கைக்கான புலவு தெரிவு செய்வதில் அதிகாரிகளின் தனிப்பட்ட பழி வாங்களை கண்டித்து மன்னார் செயலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம்

## நெடுங் கண்டல் புலவை திறந்து விடுமாறு கோரிக்கை



(எஸ்.றொசேரியன் லெம்பேட்)
(13-05-2024)

மன்னார் மாவட்ட சிறு போக நெற்செய்கைக்கான புலவுகளை தெரிவு செய்வதில் அதிகாரிகளின் தனிப்பட்ட பழி வாங்களை கண்டித்து திங்கட்கிழமை (13-95-2024) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான சிறு போக செய்கைக்காக நெடுங் கண்டல் புலவை திறந்து தருமாறு கோரி மாந்தை மேற்கு விவசாயிகள் குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மன்னார் மாவட்டச் செயலகத்தின் நுழைவாயிலை முற்றுகையிட்டு,பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் அதிகாரிகளின் தனிப்பட்ட பழிவாங்கல் களுக்கு இடம் கொடுக்காதீர்கள், திறந்து விடு திறந்து விடு நெடுங் கண்டல் புலவை திறந்து விடு, கொல்லாதே கொல்லாதே விவசாயிகளை கொள்ளாதே உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்ட மாந்தை மேற்கு விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்ட காலம் தொட்டு இன்று வரை ஒரு போதும் நெடுங்கண்டல் புலவு பூட்டப் படவில்லை.

1974 ஆம் ஆண்டு நீர் தட்டுப்பாடு வந்த போது காலபோகத்தில் செய்கை பண்ணப்படும் 40 ஏக்கருக்கு சிறுபோகத்தில் 1 ஏக்கர் என்ற தீர்மானத்தில் 40:1 என்ற விகிதத்தில் விவசாயம் செய்யப்பட்ட போது சின்ன உடைப்பு துலுசின் கீழ் உள்ள புலவுகள் மாத்திரம் திறக்கப்பட்டது.

இதில் நெடுங்கண்டல் புலவு முதன்மையானதாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு ஏற்பட்ட நீர் தட்டுப்பாடு காரணமாக அனைத்து புலவுகளும் பூட்டப்பட்டு மன்னார் மாவட்ட விவசாயிகள் விதை நெல் தேவைக்காக நெடுங்கண்டல் புலவு மாத்திரம் திறந்து விவசாயம் செய்யப்பட்டது.

இம்முறை எமது நெடுங்கண்டல் புலவு இம்முறை பூட்டப் பட்டதற்கான காரணத்தை தனிப்பட்ட முறையில் எமது கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் உரிய அதிகாரிகளை சந்தித்து வினவிய போது 2023 ஆம் ஆண்டின் புலவு பங்கீட்டில் தனிப்பட்ட நபர் ஒருவருடனான முரண்பாட்டிற்கு பழி தீர்க்கும் வகையில் இம்முறை எமது புலவு பூட்டப்பட்டுள்ளது என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொண்டுள்ளோம்.

குறித்த விஷயத்திற்காக நாம் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் மன்னிப்புக் கோரினோம்.உரிய அதிகாரிகளை நேரில் சந்தித்து மிகத் தெளிவாக விளக்கியிருந்தோம். சாதக பாதக நிலையை தெளிவு படுத்தி எமது புலவை திறந்து தரும் படி பணிவாக வேண்டினோம்.

எனினும் ஏழை விவசாயிகளாகிய நாங்கள் வஞ்சிக்கப்பட்டோம். இதன் அடிப்படையிலேயே எமது உரிமைகளை பெற்றுக் கொள்ள போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு திங்கட்கிழமை (13) காலை மாவட்டச் செயலகத்திற்கு முன் ஒன்று கூடி போராட்டத்தை முன்னெடுத்தோம்.

2024 ஆம் ஆண்டுக்கான சிறு போக செய்கைக்காக நெடுங்கண்டல் புலவை திறந்து தருமாறு விவசாயிகள் சார்பாக கோரிக்கை முன் வைக்கின்றோம் என போராட்டத்தில் ஈடுபட்ட மாந்தை மேற்கு விவசாயிகள் தெரிவித்தனர்.

தமது கோரிக்கை அடங்கிய மகஜர் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இதன் போது விவசாயிகள் சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளர் லுஸ்ரின் மோகன் ராஜ், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் முஜாகிர் உற்பட பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.





# மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு மக்கள் தொடர்ந்தும் எதிர்ப்பு

## மேற்படி திட்டத்திற்கு அனுமதி வழங்க முடியாது என மறுத்த அரச அதிபரின் துணிச்சலுக்கு பாராட்டுக்கள் குவிகின்றன

(எஸ்.றொசேரியன் லெம்பேட்) (13-05-2024)

மன்னார் மாவட்டத்தில் அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்டு இயங்கும் டைட்டானியம் சான் லிமிடெட் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள கணிய மணல் அகழ்வு தொடர்பாக பொது மக்களின் விருப்பத்தை பெற்றுக்கொள்வதற்கான ஒரு அவசர கூட்டம் 13-05-2024 திங்கட்கிழமை மதியம் முதல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்டு இயங்கும் டைட்டானியம் சான் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குனர் சாலிய உள்ளடங்களாக குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

சுற்றுச்சூழல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டை பெற்றுக் கொள்ளும் வகையில்,குறித்த நிறுவனத்தினர் தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு செல்லும் போது மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்தின் வேண்டுகோளுக்கு அமைய, பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக குறித்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகள்,சமூக மட்ட அமைப்புகள் திணைக்கள தலைவர்கள், கலந்து கொண்டிருந்தார்கள்.



இதன் போது அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்டு இயங்கும் டைட்டானியம் சான் லிமிட்டெட் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள கணிய மணல் அகழ்வு தொடர்பாக திட்டம் தொடர்பாக மக்களுக்கு முன் வைக்கப்பட்டது. இதன் போது மன்னாரிற்கு குறித்த திட்டத்தினால் பாரிய பாதிப்புகள் உள்ளமை குறித்து



மக்களாலும், பொது அமைப்புகளின் பிரதி நிதிகளினாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா குறித்த திட்டம் மன்னாரில் அமுல் படுத்தும் பட்சத்தில் மன்னாரில் பாரிய பாதிப்புகள் ஏற்படும் என்ற விடையத்தை சுட்டிக்காட்டினார்.

அவரது கருத்தை வருகை தந்த பொது அமைப்புக்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரஜைகள் குழுவினர் வரவேற்றனர்.

இதேவேளை மன்னார் தீவில் குறித்த திட்டத்தை அமுல் படுத்துவதை மக்கள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் மன்னார் தீவை தவிர்த்து வேறு நிலப்பரப்பில் குறித்த திட்டம் தொடர்பான ஆய்வை மேற்கொள்ள அனுமதி வழங்குவது என்றும் மன்னார் தீவில் கணிய மணல் அகழ்வுக்கு ஆதரவு வழங்காத நிலையில் சுற்றுச்சூழல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க முடியாது என பொதுமக்கள் உறுதிய உள்ள காரணத்தினால் குறித்த கூட்டம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது.

மன்னார் தீவில் குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாததன் காரணத்தை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்த உள்ளதாக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மாக்கஸ் அடிகளார், பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் உட்பட சமூக மட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

NOTE: *(மன்னார் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மாக்கஸ் அடிகளார்இபொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் ஆகியோரது குரல் பதிவு இணைப்பு)*

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வட மாகாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களை ஊக்குவிப்பது தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடல்!

தமிழியல் ஆய்வு நடுவகம் அமைப்பின் கோரிக்கைக்கு அமைய, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களை ஊக்குவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் (14-05-2024) இன்று நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் தமிழியல் ஆய்வு நடுவகம் அமைப்பின் தலைவர் உள்ளிட்ட குழுவினரும், ஆளுநரின் உதவிச் செயலாளர், உள்ளூராட்சித் திணைக்கள பணிப்பாளர், மாகாண கலாசார உதவிப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்துக்கொண்டனர்.

உள்ளூர் எழுத்தாளர்களின் தற்போதைய நிலைமை, பதிப்பகங்கள், அச்சகங்களின் செயற்பாடுகள், நூல் பதிப்பு மற்றும் விற்பனை, கலை, இலக்கியத் துறையின் சமகாலப்போக்கு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

உள்ளூராட்சி அமைப்புகள், பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள், கிராம அபிவிருத்தி திணைக்களங்கள் தம்மிடம் காணப்படும் நிதியில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, உள்ளூர் எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என இதன்போது கௌரவ ஆளுநர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் ஆளுநர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதேவேளை, தமிழியல் ஆய்வு நடுவகம் அமைப்பை வடக்கு மாகாணம் முழுவதும் செயற்படும் வகையிலாக பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ ஆளுநர் தெரிவித்தார். உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதைப் போல, கலைகளையும் வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கௌரவ ஆளுநர் குறிப்பிட்டார். திறந்தவெளி அரங்குகளில் உள்ளூர் கலைகளை மேடையேற்றி அவற்றினை அழிந்திடாமல் பாதுகாத்து புத்துயிர் வழங்க மாகாண கலாசார திணைக்களத்திற்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

# உரும்பிராய் மேற்கு இளைஞர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்!



உரும்பிராய் மேற்கு இளைஞர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நிகழ்வு இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு இளைஞர்களால், தியாகி பொன். சிவகுமாரன் அவர்களது சிலை முன்பாக முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை வாரத்தின் மூன்றாவது நாளான இன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இதில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி மக்கள் பேரியக்க ஒருங்கிணைப்பாளரும் சிவகுரு ஆதீன முதல்வருமான வேலன் சுவாமிகள் மற்றும் உரும்பிராய் மேற்கு இளைஞர்கள் கிராம மக்கள் பயணிகள் என பலரும் கலந்துகொண்டனர்.






# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைப்பு





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினால், 2009 ஆண்டு இலங்கை படைத் தரப்புக்களால் முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்பட்ட தமிழினப் படுகொலையை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு 14.05.2024 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட நுழைவாயிலில் வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில், இறுதிக்கட்டப் போரின் போது தமிழ் மக்களின் உயிர்காத்த உணவான முள்ளிவாய்க்கால் கஞ்சி விரிவுரை யாளர்கள், ஊழியர்கள், மாணவர்களினால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# முள்ளிவாய்க்கால் மே 18 நினைவேந்தலில் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆணையாளர் அக்கினஸ் கலந்துகொள்ளவுள்ளார்

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்



சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆணையாளர் அக்கினஸ் அம்மையார் 18ம் திகதி முள்ளிவாய்கால் நினைவேந்தலில் கலந்து கொள்ளவதற்காக இலங்கைக்கு வருகின்றார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகர் சுமைதாங்கி சந்தியில் செவ்வாய்கிழமை இடம்பெற்ற பொலிசாரின் அராஜகத்தின் மத்தியில் முள்ளிவாய்க்கால் கஞ்சிவழங்கும் செயற்பாட்டில் கலந்து கொண்ட அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் நஞ்சை கொடுக்கவில்லை கஞ்சி கொடுக்கின்றோம் அதனை மக்கள் அருந்துவதற்கு உடன்பாடாக இருந்தார்கள் ஆனால் மக்களை விடாது பொலிசார் இரு வீதியருகில் நின்று கொண்டு தடுத்துக் கொண்டிருந்தனர்.

சம உரிமை மத உரிமை, வழிபாட்டு உரிமை இறந்த அல்லது கொல்லப்பட்ட ஆத்மாக்களை நினைவு கூறும் உரிமை சகலருக்கும் இருக்கின்றது இதனை தடுக்க எவருக்கும் உரிமையில்லை சர்வதேச மன்னிப்புச் சபையின் அக்கினஸ் அம்மையார் 18ம் திகதி முள்ளிவாய்கால் நினைவேந்தலில் கலந்து கொள்ளவதற்காக இலங்கைக்கு வருகின்றார்.

எந்தவொரு அடிப்படையிலும் கொள்ளப்பட்டவர்களின் ஆத்மாக்களுக்கு சாந்திவேண்டி செய்யப்படுகின்ற அஞ்சலிக்கு அல்லது கஞ்சி வழங்கும் செயற்பாட்டில் தடைவிதிக்க கூடாது தானும் கூட கலந்துகொள்ள இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இருக்கின்ற போது இங்கு அடக்குமுறை ஒடுக்குமுறை அராஜகம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது இன்று பாலை-தயின் ஓரமாக மட்டக்களப்பு மண்ணில் எங்களது ஆலையத்துக்கு முன்பாக எங்களுடைய ஆத்மாக்களின் சாந்திவேண்டி நாங்கள் அஞ்சலி செய்வதற்கு உரிமை மறுக்கப்படுகின்றது என்றால் இந்த நாட்டில் மனித உரிமை என்பது தலைகீழக பேனப்படுகின்றது.

இந்த இடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மனித உரிமை ஆணையாளர். சுகாதார பணிப்பாளர், உட்பட சம்மந்தபட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டோம் இல்லாது விட்டால் அராஜகமான நிலையில் கஞ்சி காச்சுவதை குழப்பி அடிக்கும் நிலையில் பொலிசார் இருந்தனர்.

இந்த நாட்டில் குற்றவாளிகள் தானாக உருவாகவில்லை அவர்கள் குற்றவாளிகளை உருவாக்கப்படுகின்றனர் அமைதியாக செயற்படுகின்ற மக்களை வன்முறைக்கு தூண்டி தண்டிப்பதற்கு விளைந்து கொண்டிருக்கின்றனர் இத்தனை அழிவு நடந்து 144 ஆயிரம் மக்கள் காணமல் ஆக்கப்பட்டும் கூட பொலிசார் இன்னும் திருந்த வில்லை இதனால்தான் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வேண்டும் என கேட்டிருந்தோம்.

ஏன் என்றால் இங்கிருக்கின்றவர்கள் இந்த மக்களின் உணர்வுகளை விளங்கிகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். சுயாட்சி, சுயநிர்ணய உரிமை பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் என பேசுவது இந்த அடக்கு முறையில் இருந்து தமிழ் மக்கள் விடுபட்டு சுதந்திரமாக வாழ்வதற்காகத்தான்.

இந்த நாடு குற்றத்துக்கு மேல் குற்றம் செய்தாலும் திருந்த கூடிய நாடாக இல்லை ஆகவே இந்த நாட்டின் பொருளாதாரம் மனித உரிமை என்பது மிகவும் கேவலமான முறையில் மீறப்பட்டுள்ளது.

திருகோணமலை சம்பூரில் கஞ்சி காச்சிய செயல்பாட்டில் ஈடுபட்ட பல்கலைகழக மாணவிகள் உட்பட பெண்களை இரவு நேரத்தில் கைது செய்யப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர் இது ஒரு முறையற்ற காட்டுமிராண்டித்தனமான செயலை எங்களுக்கு உதாரணமாக சொல்லி மிரட்டுகின்றனர் இனரீதியான பாகுபாடுகாட்டிச் செய்கின்றனர். என்றார்.

# மட்டக்களப்பு வெல்லாவெளியில் 15 சிறுமியை கடத்திச் சென்று பாலியல் துஸ்பிரயோகம் மேற்கொண்ட இரு இளைஞர்கள் கைது

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் தனது அம்மம்மாவீட்டிற்கு சென்று தனிமையில் வீதியில் திரும்பிக் கொண்டிருந்த 15 வயது சிறுமியை கடத்திச் சென்று காட்டுப்பகுதியில் வைத்து பாலியல் துஸ்பிரயோகம் மேற்கொண்ட 26, 21 வயதுடைய இளைஞர்கள் இருவரை 13-05-2024 திங்கட்கிழமை இரவு கைது செய்துள்ளதாக வெல்லாவெளி பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தைச் சோந்த 15 வயது சிறுமி கடந்த 7ம் திகதி தனது வீட்டில் இருந்து அம்மம்மா வீட்டிற்கு சென்று அங்கிருந்து தனிமையில் திரும்பிக் கொண்டிருந்தபோது காட்டுப்பகுதியை அண்டிய பகுதியில் வைத்தி சிறுமியை இரு இளைஞர்கள் கடத்திச் சென்று பாலியல் துஸ்பிரயோம் செய்துள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுமி பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து பொலிஸ்நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து அந்த பகுதியைச் சேர்ந்த 26,21 வயதுடைய இரு இளைஞர்களை கைது செய்ததுடன் பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதில் கைது செய்தவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# கிளிநொச்சி மாவட்ட சாரணிய ஆணையாளராக சி.விக்கினேஸ்வரன் நியமனம்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



கிளிநாச்சி மாவட்டத்தின் சாரண மாவட்ட ஆணையாளராக கடமையாற்றிய மு.பிரேம்குமார் கடந்த ஐந்து வருடங்கள் சிறப்பாக சேவையாற்றி அவரது சேவை காலம் முடிவடைந்தமையால் புதிய மாவட்ட ஆணையாளராக சி.விக்கினேஸ்வரன், அவர்களை பிரதம சாரண ஆணையாளர் ஜனப்ரித் பெனான்டோ அவர்கள் கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளராக நியமித்து அவர்களுக்கான கடிதத்தினை வழங்கி வைத்தார்.

புதிய மாவட்ட ஆணையாளர் பளை மத்திய கல்லூரியில் சிறந்த சாரணராக சேவையாற்றி, ஜனாதிபதி விருதினை பெற்றவர். அவர் அப்பாடசாலையை தேசிய ரீதியில் பல சாதனைகள் படைப்பதற்கு காரணமாக இருந்தவர் ஆவார். அத்துடன் கிளிநொச்சி உதவி மாவட்ட ஆணையாளராகவும் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# "வடக்கு கிழக்கிலே நீதிமன்றங்கள் இனவாதப் பொலிஸாரின் கட்டளைகளிற்கு பணிந்து செயல்படுகின்றனவா"? — செல்வராசா கஜேந்திரன் எம்.பி கேள்வி



வடக்கு கிழக்கிலே நீதிமன்றங்கள் இனவாதப் பொலிஸாரின் கட்டளைகளிற்கு பணிந்து செயல்படுகின்றதா என்றொரு கேள்வி இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற 14-05-2024 அமர்வில் பங்குகொண்டு கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், எங்கள் தேசத்தின்மீது சிறிலங்கா அரசு இனப்படுகொலையை நிகழ்த்தி 15 ஆண்டுகள் கடந்திருக்கின்றது. இந்த 15 ஆண்டுகள் கடந்தும் படுகொலை செய்யப்பட்டவர்களிற்கு நீதி கிடைக்கவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அதாவது படையினரின் கைகளில் உறவுகளை ஒப்படைத்தோர், ஈ.பி.டி.பி, கருணா, பிள்ளையான. போன்றாரோல் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோர் தங்களது உறவுகளைத் தேடி இன்றும் அலைந்துகொண்டு இருக்கின்றார்கள். இந்தவேளையிலே வருடந்தோறும் இங்கு இடம்பெற்ற இனப்படுகொலையை நினைவுகூறும் விதமாக வடக்கு கிழக்கிலே வாழும் தமிழ் மக்கள் இந்த இனப்படுகொலை வாரத்தை அனுஸ்டிப்பதும் அந்த வாரத்தில் இனப்படுகொலை தொடர்பில் காட்சிப்படுத்துவதும் 2009இலே இனப்படுகொலை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது உணவை ஆயுதமாக பயன்படுத்திய கோட்டாபாய ராஜபக்சா அவரது அண்ணன் மகிந்த ராஜபக்சாவும் பட்டினிச் சாவிற்குள் தமிழரகளைத் தள்ளியபோது அந்த தமிழர்கள் உயிர் பிளைத்துக்கொள்வதற்காக அங்கே நெல்லில் இருந்து வெளியேறிய குறுனலை உமியில் இருந்து பிடைத்தெடுத்து தண்ணீர் போட்டு அவித்து பச்சைக் குழந்தைகளிற்குகூட உணவாக ஊட்டு உயிர் பிழைத்த வரலாறு நடைபெற்றிருக்கின்றது.

இதனை நினைவுகூறும் விதமாக அதனை இந்த வாரத்திலே நாங்கள் செய்வது வழமை. திருகோணமலை மாவட்டம் கட்டைபறிச்சான் பகுதியிலே புவனகணபதி ஆலயத்தில் கஞ்சி கொடுக்கும் நிகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது அந்த நிகழ்வில் ஈடுபட்டமைக்காக எங்களுடைய கட்சியின் திருகோணமலை உதவிச் செயலாளர் நவரத்தினராசா கரிகரகுமார் வயது 43 மற்றும் பொது மக்கள் மூன்று பெண்கள் கமலேஸ்வரன் விஜிதா வயது 40, கமலேஸ்வரன் தேன்நிலா வயது 21, சுஜானி 32 வயது ஆகியோரே கைது செய்யப்பட்டு மூதூர் நீதிமன்றில் முறபடுத்தப்பட்டு 14 நாள்கள் தடுப்புக் காவல் வழங்கப்பட்டுள்ளது. இதுதான் இந்த நாட்டினுடைய நல்லிணக்கம் மற்ற மதங்களை மதிக்கின்ற சித்துவமாக இருக்கின்றது.

ஓர் ஆலயத்திலே கஞ்சி காச்சியமைக்காக இந்த தண்டணை வழங்கப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயம். இந்த விடயத்தை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். அவர்கள் 4 பேரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். வடக்கு கிழக்கிலே நீதிமன்றங்கள் இனவாதப் பொலிஸாரின் கட்டளைகளிற்கு பணிந்து செயல்படுகின்றதா என்றொரு கேள்வி இருக்கின்றது. பொலிஸார் எதனைச் சொன்னாலும் அதனை அப்படியே ஏற்றுக்கொண்டு நீதிமன்றங்கள் செயல்படவேண்டிய அளவிற்கு நீதிதன்றங்களின் சுயாதீனத் தன்மை பறிக்கப்பட்டுள்ளதா என்றொரு கேள்வி இருக்கின்றது. நீதிமன்றம் ஒரு உத்தரவு வழங்கியிருக்கின்றது பொது மக்களை ஒன்று கூட்டுவதும் அவர்களிற்கு கஞ்சிகளை பரிமாறுவதும் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும் என பொலிசார் கேட்டுக்கொண்ட தடை உத்தரவை அப்படியே வழங்கியுள்ளார்கள் மறு கேள்வி இல்லாமல். அப்படி என்றால் நான் கேட்கின்றேன் இந்த மாதம் உங்களுடைய வெசாக் மாதம். இந்த மாதத்திலே தனசல உணவு வழங்களை தடை செய்யுமாறு பொலிஸார் கோருவார்களா, அதற்கு நீதமன்றங்கள் தடை உத்தரவு வழங்குமா. இது தமிழர்களிற்கு ஒரு நீதி, சிங்களவர்களிற்கு ஒரு நீதி. பௌத்த நிகழ்வை முன்னட்டு தெருவிற்கு தெரு அந்த நிகழ்வை நீங்கள் செய்கின்றீர்கள் அந்த நிகழ்வை தடுத்து நிறுத்த தயாராக இருக்கின்றீர்களா.

இந்த இனவாதச் செயல்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதோடு பொலிஸாரின் அத்து மீறல்கள் எல்லைதாண்டிச் சென்றுகொண்டு இருக்கின்றன. கடந்த 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலே இரு பொலிஸார் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை துரத்திச் சென்று உதைந்து வீழ்த்தியதனால் அவர் மதிலோடு மோதி வீழ்ந்தமையினால் உயிரிழந்திருக்கின்றார். இந்த இரு பொலிஸாரும் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும், பொலிஸாரின் அராஜகங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் இதேபோன்று வவுனியா வடக்கில் புளியங்குளம் பொலிஸ் பிரிவில் ஒருவரது வீட்டிற்குள் இன்னொருவர் கடந்த ஏப்பிரல் 12 ஆம் திகதி புகுந்து தாக்குகின்றனர் வெளிநாட்டவரின் பணத்திற்காகவே பொலிஸார் இவ்வாறான அராஜகங்களில் ஈடுபடுகின்றனர் என்றார்.

# வலி சுமந்த உறவுகளின் உயிர்காத்த உணவு

## முள்ளிவாய்க்காலில் வழங்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி



முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தை - தமிழ் இனப் படுகொலையை நினைவூட்டும் வகையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு தொடர்ச்சியாக தமிழர் தாயகம் முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் தாயக நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இறுதி உயிரை காப்பாற்ற வலி சுமந்த உறவுகளின் உயிர்காத்த உணவான முள்ளிவாய்க்கால் கஞ்சியானது முள்ளிவாய்க்கால் மேற்கு பொதுசந்தை கட்டிடத்திற்கு முன்பாக அன்று 16.05.2024 அன்று காலை வழங்கப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் உயிர்த்த உறவுகளிற்கு அஞ்சலி செலுத்தப்பட்ட நிலையில், அடுத்த சந்ததிக்கு கடத்தும் முகமாக தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டது.





# தமிழ் தலைமைகள் பிளவுபடாத சமூகமாக ஒன்றிணைய வேண்டும் என யாழ்ப்பாணத்தில் வலியுறுத்திய அமெரிக்க தூதுவர்



தமிழ் தலைமைகள் பிளவுபடாத சமூகமாக ஒன்றிணைய வேண்டும் என அமெரிக்க தூதுவர் வலியுறுத்தினார் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

15-04-2024 புதன்கிழமையன்று சந்திப்பு தொடர்பில் கிளிநொச்சியில் அவர் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரித்தார்.

தொடர்ந்து சிவஞானம் சிறீதரன் தெரிவிக்கையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பாக இருந்த தமிழ்கட்சிகள் பிளவு பட்டு இருக்கின்றன.

அதே போல் தமிழரசுக் கட்சிக்குள்ளும் நீதிமன்ற வழக்கு காணப்படுகிறது. இவ்வாறு தமிழ் கட்சிகள் பிளவுபடாது ஒன்றிணையும் போதே பலமாக முடியும் என அமெரிக்க தூதுவர் தெரிவித்ததாகவும் தற்போது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பொலிசார் பொது மக்களை கைது செய்யும் விடயங்கள், தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவித்தார்.

# எரிபொருள் இன்மை காரணமாக சம்மில்துறையில் கரையொதுங்கிய இந்திய படகு!





இன்று மாலை இந்தியா - மல்லிப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களது படகு ஒன்று எரிபொருள் தீர்ந்ததனால் யாழ்ப்பாணம் - சம்பில்துறையில் கரையொதுங்கியது.

பெருமாள் வாஞ்சிநாதன், ராஜேந்திரன் மகேஷ், இளங்கோவன் ரஞ்சித்குமார் ஆகிய மீனவர்கள் படகுடன் கரையொதுங்கினர்.

குறித்த மீனவர்கள் மூவரும் இளவாலை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கனடிய செய்திகள்
Canadian News

# மூன்றாவது ஆண்டாக இன அழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் சட்டமூலம் – 104

தமிழ் இனப்படுகொலையின் உச்சக் கட்டமான 2009இல் முள்ளிவாய்க்காலில் நடத்தப்பட்ட இன அழிப்பின் 15ஆவது நினைவு ஆண்டு. இனப்படுகொலை என்பது ஒரு சில குறிப்பிட்ட நிகழ்வுகளால் மட்டும் அடையாளப்படுத்தப்படுவதில்லை. இது ஒரு தொடர்ச்சியான செயல்முறை. ஒரு குழுவை அல்லது இனத்தை அகற்றுவதற்கும் அழிப்பதற்கும் குறிப்பிட்ட தரப்பினால் திட்டமிட்டு, தொடர்ச்சியாக செயற்படுத்தப்படும் செயல்முறை. சுதந்திரம் அடைந்ததிலிருந்து இலங்கை அரசானது இனப்படுகொலையின் பாதையிலேயே திட்டமிட்டுப் பயணித்துக் கொண்டிருக்கிறது. முதலில் இலங்கை அரசு திட்டமிட்ட முறையில் தமிழ் மக்களின் உரிமையை மறுக்க ஆரம்பித்தது பின்னர் படிப்படியாக தமிழ் மக்களை வகைதொகையின்றிக் கொலை செய்து இன அழிப்புச் செய்யும் தொடர் நிகழ்வுகளை ஆரம்பித்தது.

15 ஆண்டுகளுக்கு முன்னர், சிறிலங்கா அரசு வேண்டுமென்றே பொதுமக்களைக் குறிவைத்து, கடுமையான எறிகணை வீச்சுகள், கொத்துக்குண்டுகள் போன்ற கொடிய தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட “போர் தவிர்ப்பு” பாதுகாப்பு வலயங்களில் தஞ்சமடைந்த மக்களைத் தாக்கிக் கொன்றது. மே 2009 முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நடந்த காலப் பகுதியில் மட்டும் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் காணாமற் போயுள்ளனர். அதேபோல், 1980களின் பிற்பகுதியிலிருந்து உலகில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலில் சிறிலங்கா இரண்டாவதாக நாடாக உள்ளது. தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது எண்ணற்ற உறவுகளின் கொடூரமான இழப்பையும் துயரையும் அனுபவித்திருக்கிறார்கள்.




சட்டமூலம் 104: தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம்

தொடர்ந்து மூன்றாம் ஆண்டாக, பின்வரும் கல்விச் சபைகள் தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரத்தை அங்கீகரித்துத் தங்கள் மாணவர்களுக்குத் தொடர்ந்து கற்பித்து வருகின்றன:

ரொறன்ரோ பிரதேச கல்விச் சபை
ரொறன்ரோ கத்தோலிக்க கல்விச் சபை
யோர்க் பிராந்திய கல்விச் சபை
பீல் பிரதேச கல்விச் சபை
டுரம் பிராந்திய கல்விச் சபை ஆகியன அவற்றில் அடங்கும்.




பல ஆசிரியர்களும் மாணவர்களும் தங்கள் பாடசாலைகளில் தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரத்தை நினைவுகூரும் வகையில் தங்கள் மாணவர்களுக்கு கல்வி கற்பித்தல், பயிலரங்குகள் மற்றும் நினைவேந்தல்களை ஏற்பாடு செய்துள்ளனர்.

3 ஆண்டுகளுக்கு முன், ஒன்ராறியோ மாகாண சட்டமன்ற உறுப்பினரும் தற்போதைய மாகாண போக்குவரத்து துணைஅமைச்சாராக விளங்குபவருமான





விஜய் தணிகாசலம் அவர்கள், தமிழின அழிப்பு அறிவூட்டல் வார சட்டமூலம் 104இனை வெற்றிகரமாக நிறைவேற்றினார். ஒவ்வொரு ஆண்டும் மே 18 அன்று முடிவடையும் ஏழு நாட்களை தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரமாக (மே 12 - 18) சட்டமூலம் 104 பிரகடனப்படுத்துகிறது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தமிழின அழிப்பினை அங்கீகரிக்கும் சர்வதேச நாடுகளில் முதலாவது பிராந்தியமாக ஒன்ராறியோ மாகாணம் விளங்குகிறது. ஒன்ராறியோவில் வாழும் தமிழ் மக்களுக்கு இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு அம்சமாகும்.

தமிழின அழிப்பு நினைவு நாள், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழியங்களை நினைவூட்டுவதாகவும், அத்தகைய செயல்களை என்றும் மறக்காமல் இருப்பதை உறுதிசெய்வது எம் அனைவரினதும் கடமையாகும். நாம் வாழும் அந்தந்த நாடுகளில் நாம் எமது இன அழிப்பின் வலிகளை நினைவுகூர்வதுபோல், உலகெங்குமுள்ள தமிழ் மக்கள் அனைவரும் நினைவுகூர்ந்து வருகிறோம்.

எம் தேசத்தில் இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்கு காரணமான குற்றவாளிகளை பொறுப்புக்கூற வைப்பதும், தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதும், இவ்வாறான அட்டூழியங்கள் இனி நடக்காமல் பார்த்துக் கொள்வதும் நம் அனைவரதும் பொறுப்பாகும். தமிழின அழிப்பைப் பாடமாகக் கற்று, அதனை அனைவருக்கும் பயிற்றுவித்து, அதன்மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி அடுத்த தலைமுறைக்கு விழிப்பூட்டி, அவர்களின் தலைமுறையினரின் வரலாற்றினைப் பகிர்ந்து கொள்ளவும், அவர்களும் இந்த வரலாற்றின் ஒரு பகுதி என்பதை அங்கீகரிக்கவும் வலுவூட்டுவோம்.

எனவே, நாம் ஒன்றுகூடி உரக்கச் சொல்வோம், இத்துயரம் இனி ஒருபோதும் நடக்காதென்று.



# 'பயங்கரவாதி'யாகப் பார்க்கப்படும் முள்ளிவாய்க்கால் கஞ்சி

**"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் அராஜகங்கள், அடாவடிகளை மேற்கொள்ள முஸ்லிம் நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றங்கள் துணைபோகின்றன. வடக்கு, கிழக்கு மாகாண நீதிமன்றங்களில் தமிழ் நீதிபதிகளுக்கு பற்றாக்குறை இருப்பதைப் பயன்படுத்தி அந்த இடங்களுக்கு முஸ்லிம் நீதிபதிகளை நியமித்து தமிழ் மக்களின் மாவீரர் நாள், தியாக தீபம் திலீபன் நினைவு நாள், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு தடைகளை விதித்து தமிழ், முஸ்லிம் பகைமையை, வெறுப்பை, குரோதத்தை வளர்க்க பேரினவாத ஆட்சியாளர்கள் நன்கு திட்டமிட்டு செயற்படுகின்றனர்"**

- கே. பாலா



2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி யுத்தம் முடிவடைந்த நிலையில், யுத்தத்தின் இறுதி நாட்களில் உயிரிழந்த உறவுகளின் நினைவாக ஆண்டுதோறும் "மே 18" தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தம் உக்கிரமடைந்த சந்தர்ப்பத்தில் இலங்கை அரசின் திட்டமிட்ட உணவுத்தடையாலும், பல மாத காலத் தொடர் யுத்தத்தினாலும் மக்கள் உணவின்றித் தவித்தனர், பலருக்கு ஒரு நேர உணவுகூட கிடைக்காமல் பட்டினி கிடந்தார்கள், குழந்தைகளுக்கான உலர் உணவிற்கு அலைந்தார்கள். பட்டினி சாவுகளும் நிகழத்தொடங்கின.

அக்காலகட்டத்திலேயே அந்த மக்களுக்கு கஞ்சியே உயிர்காக்கும் உணவானது. அரிசியும் தவிடும் கலந்து உப்புமிட்டு மக்கள் பசியை ஆற்றினார்கள். யுத்தம் முடிவுற்றுப் பல ஆண்டுகள் உருண்டோடிப் போனாலும் யுத்தம் தந்த வடுக்களை யாராலும் எளிதில் மறந்து விட முடியாது. இந்த யுத்தகால நினைவுகளில் மறக்கமுடியாதவற்றுள் ஒன்றாக விளங்குவது தான் இந்த முள்ளிவாய்க்கால் "கஞ்சி". பல இலட்சம் மக்கள் கஞ்சிக்காகக் காத்திருந்து தமது பசிப்பிணி போக்கிய இக் கஞ்சி உணவு அன்றைய நாட்களில் எமது மக்களின் வாழ்வோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்ததாகவே காணப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் உணவுக்காகப் பட்ட அவலத்தையும், கஞ்சி உணவே எமது உறவுகளின் உயிரை தக்க வைத்தது என்பதையும் வெளிப்படுத்தும் முகமாகவும் அவற்றை எதிர்கால சந்ததியினருக்கும், இளைய தலைமுறையினருக்கும் தெரியப்படுத்தும் முகமாகவும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாட்களில் தமிழர் தாயகமெங்கும் பொது இடங்கள், ஆலயங்களில் மக்களுக்கு கஞ்சி வழங்குவது வழமை.

இம்முறையும் முள்ளிவாய்க்கால் "மே 18" நினைவு வாரத்தை முன்னிட்டு தமிழர் தாயகப்பகுதிகளில் கஞ்சி வழங்கும் நிகழ்வுகள் பொதுமக்களினாலும் பொது அமைப்புக்களினாலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தான் சிங்கள பேரினவாதமும் சிங்களவர்களுக்கு ஒரு நீதியையும் தமிழருக்கு ஒரு நீதியையும் வழங்கு நீதித்துறையும் இனவாத பொலிஸ்துறையும் இணைந்து இந்த கஞ்சியைக்கூட பயங்கரவாத செயலாக்கி கஞ்சி வழங்கும் நிகழ்வுகளை இனவாத வெறியோடு தடைசெய்தும் தடுத்தும் வருகின்றன. ஆண் பெண் வேறுபாடின்றி கைது செய்து சிறைகளிலும் தள்ளுகின்றன.

இவ்வாறான அராஜகம் திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவில் உள்ள சேனையூர் பகுதியில் மூதூர் நீதிமன்றத்தினாலும் சம்பூர் பொலிஸாரினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையில் அது தற்போது கிழக்கு மாகாணமெங்கும் அரங்கேற்றப்பட்டு வருகிறது.

சேனையூர் பகுதியில் மக்கள் முள்ளிவாய்க்கால்நினைவுக்கஞ்சிகாய்ச்சிக்கொண்டு இருந்தபோது அங்கு வந்த பொலிஸார் நீதிமன்ற தடை உத்தரவைக்காட்டி அச்சுறுத்தி தடுக்க முற்பட்டுள்ளனர். இதன்போது நாங்கள் வேறு யாரையும் நினைவு கூரவில்லை .உயிரிழந்த எமது உறவுகளுக்கும் பொது மக்களுக்காகவுமே இதனை செய்கின்றோம் எனக் கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு மூதூர் நீதிமன்ற தடை உத்தரவை வாங்க மறுத்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை காய்ச்சி பொதுமக்களுக்கு பரிமாறி முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த பொது மக்களை நினைவு கூர்ந்தனர்.

இதனையடுத்து முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறிய குற்றச்சாட்டில் சம்பூர் பொலிஸார் நள்ளிரவு வீடுபுகுந்து சமூக செயற்பாட்டாளர் கமலேஸ்வரன் விஜிதா (வயது 40), சமூக செயற்பாட்டாளர் செல்வவினோத்குமார் சுஜானி (வயது 40) என்ற 2 பெண்களையும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நவரெட்ணராஜா ஹரிஹரகுமார் (வயது 43) என்பவரையும் இதன்போது பொலிஸாரை தாக்கிய குற்றச்சாட்டில் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள கலைப்பிரிவு மாணவி கமலேஸ்வரன் தேமிலா (வயது 22), என்பவரையும் உடுத்த உடையுடன் கதறக்கதறக் கைது செய்து இழுத்துச் சென்ற சம்பவம் தமிழர் தாயகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இதன் தொடராக கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் பல இடங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்க நீதிமன்றங்களினால் தடைஉத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதுடன் பொலிஸாரினால் பலர் கைது செய்யப்படும் மிரட்டப்படும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. இந்த விடயத்தில் இலங்கையின் நீதிமன்றங்களும் பொலிஸாரும் இன, மதவாத ரீதியில் தடை யுத்தரவுகளை பிறப்பித்தும் கைதுகளை மேற்கொண்டும் வருகின்றன.

திருகோணமலை - சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்ச மூதூர் நீதிவான் நீதிமன்ற முஸ்லிம் நீதிபதியே தடையுத்தரவு பிறப்பித்திருந்தார். இந்த தடைஉத்தரவை கோரிய பொலிஸார் அதற்கு கூறிய காரணங்கள்தான் விசித்திரமானவை. பொலிஸார் கோரிய தடை உத்தரவில் "பொது இடங்களான பாடசாலை, கோவில் போன்ற இங்களில் முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களை நினைவூட்டும் எண்ணத்துடன் அதற்காக செயற்படுதல், சட்டவிரோதமாக மக்களை ஒன்று கூட்டுதல், மக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படும் வகையில் உணவு, கஞ்சி, குடிபானம் வழங்குவதற்காக மக்களை ஒன்று கூட்டுதல், சுகாதாரப்பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க" என்ற காரணங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதற்கு மூதூர் நீதிவான் நீதிமன்ற முஸ்லிம் நீதிபதியும் கண்ணை மூடிக்கொண்டு அனுமதி வழங்கியது மட்டுமன்றி திருகோணமலை - சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறிய குற்றச்சாட்டில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரையான 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கவும் கடந்த 13 ஆம் திகதி உத்தரவிட்டுள்ளார்.

இதே போன்றே கல்முனை பாண்டிருப்பு ஸ்ரீ அரசடியம்மன் ஆலய முன்றிலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்க சென்ற அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி உட்பட குழுவினரை கஞ்சி வழங்கவிடாது விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் விரட்டியடித்ததுடன் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இணைப்பாளருக்கு நீதிமன்ற தடை உத்தரவையும் வழங்கினர். இந்த தடை உத்தரவை கல்முனை நீதவான் நீதிமன்ற முஸ்லிம் நீதிபதியே வழங்கியுள்ளார்.

இதில் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தடைஉத்தரவில் "இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர்களை நினைவு கூரும் முகமாக செய்யவுள்ள நிகழ்வினால் பயங்கரவாத நடவடிக்கைகள் மீண்டும் நாட்டில் தலைதூக்குவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாலும் அவ்வாறான நிகழ்வு இடம்பெற்றால் பொதுமக்களின் அன்றாட நிலை பாதிப்படைய வாய்ப்பு இருப்பதாலும் யுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலில் மரணமடைந்த புலி உறுப்பினர்களை நினைவு கூரும் நிகழ்வு நடைபெறாமல் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதிக்குள் இவ்வாறு இன்னும் பல இடங்களில் நீதிமன்ற தடை உத்தரவுகள் வழங்கப்படலாம். பல கைதுகள் இடம்பெறலாம். இவ்வாறான அநீதியான பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் நீதிபதிகள் துணைபோவதுதான் நீதிமன்றங்களின் சுயாதீனத்தன்மையை கேள்விக்குட்படுத்தியுள்ளது. தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அதிகளவான நீதிமன்றங்களில் நீதிபதிகளாக முஸ்லிம் நீதிபதிகளே இருப்பது பேரினவாத ஆட்சியாளர்களுக்கும் இனவாத பொலிஸாருக்கும் தமிழின அடக்கு முறையை கட்டவிழ்த்து விட பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குவது சுகாதார பாதிப்புக்களை ஏற்படுத்தும், தொற்று நோயை பரப்பும் என்பதே இதனை தடை செய்ய பொலிஸார் முன்வைக்கும் காரணங்களில் முதன்மையானதாக இருக்கும் நிலையில் இந்தக் காரணங்கள் உண்மையில் மக்கள் நலன் கருதி பொலிஸாரினால் முன்வைக்கப்பட்டதாக இருக்குமானால் எதிர்வரும் 23,24 ஆம் திகதிகளில் "வெசாக் பொசன்" தினத்தை முன்னிட்டு சிங்கள பௌத்தர்களினால் நாடு முழுவதும் வீதிக்கு வீதி, சந்திக்கு சந்தி அமைக்கப்படும் "தன்சல்" நிலையங்களுக்கும் (அன்னதானம் வழங்கும் இடங்களுக்கும்) இதே காரணத்தைக் காட்டி நீதிமன்றங்களிடம் பொலிஸாரினால் தடை உத்தவுகளைக் கோர முடியுமா? அல்லது அப்படி தடை உத்தரவு கோரினால்கூட நீதிமன்றங்கள் வழங்கிடத்தான் முடியுமா? அல்லது யாராவது பொதுநலன் கருதி இந்த அன்னதான சாலைகளுக்கு எதிராக சுகாதார சீர்கேடு, தொற்று நோய் பரவுமென வழக்குத் தொடுத்தால் இந்த முஸ்லிம் நீதிபதிகளினால் அவற்றுக்கு தடை உத்தரவு போட முடியுமா?



தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் அராஜகங்கள், அடாவடிகளை மேற்கொள்ள முஸ்லிம் நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றங்கள் துணைபோகின்றன. வடக்கில் கூட சில நீதிமன்றங்களில் முஸ்லிம் நீதிபதிகளே உள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாண நீதிமன்றங்களில் தமிழ் நீதிபதிகளுக்கு பற்றாக்குறை இருப்பதைப் பயன்படுத்தி அந்த இடங்களுக்கு சிங்கள நீதிபதிகளை நியமிக்காது இவ்வாறு முஸ்லிம் நீதிபதிகளை நியமித்து தமிழ் மக்களின் மாவீரர் நாள், தியாக தீபம் திலீபன் நினைவு நாள், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு தடைகளை விதித்து தமிழ், முஸ்லிம் பகைமையை, வெறுப்பை ,குரோதத்தை வளர்க்க பேரினவாத ஆட்சியாளர்கள் நன்கு திட்டமிட்டு செயற்படுகின்றனர்.

இவ்வாறான தடைகளுக்கு கண்டனங்கள், எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டாலும் நீதிமன்றங்களின் சுயாதீனத்தில் நாம் தலையிட முடியாது. நீதிமன்றங்களின் உத்தரவுப்படியே பொலிஸார் செயற்படுகின்றனர் எனக்கூறி தமிழர் மீதான அடக்குமுறைகளுக்கு நியாயம் கற்பிக்கவே தற்போது ஆட்சியாளர்களினால் வடக்கு, கிழக்கு நீதிமன்ற முஸ்லிம் நீதிபதிகள் பயன்படுத்தப்படுகின்றனர். இதற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றிய டி.சரவணராஜாவுக்கு குருந்தூர் மலை பௌத்த விகாரை தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களும் அதற்கு அவர் அடிபணியாததால் விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தலும் அதன் விளைவாக அவர் நாட்டை விட்டு வெளியேறியமையும் சிறந்த உதாரணம்.


UTHAYAN INTERNATIONAL
AWARD FESTIVAL - 2024
உதயன் சர்வதேச விருது விழா 2024
உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2024
MAY 26th 2024
Sunday, 6.00 PM
THIS YEAR'S AWARDS ARE...
இவ்வருடத்திற்குரிய விருதுகள்...
UTHAYAN LITERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD- ONTARIO
UTHAYAN LEADERSHIP AWARD
UTHAYAN YOUTH ICON AWARD- ONTARIO
UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-TAMIL NADU
UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-MALAYSIA
UTHAYAN SPECIAL AWARD – EUROPE
The Estate Banquet Hall and Event Centre
430 Nugget Avenue, Scarborough, Ontario

உ



### கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன்
# வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா
# விஞ்ஞாபனம்-2024

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினாறாவது முறையாக நிகழும் மங்களகரமான குரோதி வருஷம் சித்திரை மாதம் பதினேழாம் நாள் (ஆங்கிலம்29-04-2024) திங்கட்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 09ம் நாள் ஆங்கிலம் 22-05-2024 புதன்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 23-05-2024 வியாழக்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

மஹோற்சவ சிவாச்சாரியார்:
சிவாகம பூஷணம், சிவாகம திலகம்
சிவஸ்ரீ பத்ம ஜெயராம குருக்கள் (இலங்கை)

ஆலய குருமார்:
சிவஸ்ரீ பத்ம ஜெயராம குருக்கள்(இலங்கை)
சிவஸ்ரீ சண்முகம் ஜனார்த்தனன் (பாண்டிச்சேரி, இந்தியா)
சிவஸ்ரீ உமாசுதன் சர்மா (இலங்கை)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

28-04-2024 ஞாயிறு மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**



21-05-2024 செவ்வாய்
சப்பறத் திருவிழா



22-05-2024 புதன்
தேர்த் திருவிழா

**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி மூன்றாவது தடவையாக ஜூலை மாதம் 25, 26, 27ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 28ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்**

### திருவிழாக்கால நிகழச்சிகள் நேரகால அட்டவணை

**காலை திருவிழா**
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

**மாலை திருவிழா**
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - அபிராம சுந்தரம் ராஜேஷ்
முனிராஜ் முனிரெத்தினம் - அண்ணாதுரை மணிகண்டன்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)




ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டா்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

டுறம் தமிழ் ஒன்றியம் "Evolving Elder Care In-Home Support"வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல் எனும் ,முதியவர்களுக்கான தன்னார்வ அடிப்படையிலான சேவைகளை வழங்குகிறது.

## இலவச சேவை

- உணவு விநியோகம்,
- தன்னார்லர்கள் மூலம் போக்குவரத்து சேவை: மருத்துவமனை நியமனங்கள், மருத்துவரைபார்வையிடல், மளிகைப்பொருள் கொள்வனவு நிலையங்கள் போன்றவை
- முதியோருக்கான சிறு வீட்டு பராமரிப்பு
- நண்பர்களாக வீட்டுக்கு வருகை தருதல் - நட்பு உரையாடல்கள், மற்றும் திறன் வளர்ப்புஉதவிகள். (Zoom, YouTube, google search...)
- போக்குவரத்து சேவை - வழிபாட்டு தலங்கள், Mall, உணவு விடுதிகள் போன்றவை.

## எங்களின் தொடர்புக்கு

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

- (647) 968-9549
- (647) 286-9549

மேலும் தகவலுக்கு எங்கள் இணையதளத்தைப் பார்க்கவும்:

dtaseniorsinhomesupport.ca

# டுறம் தமிழ் ஒன்றியம்

## வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல்



வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

பாதிக்கப்படக் கூடிய மற்றும் குறைந்த வருமானம் உடைய முதியவர்கள்

எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவை வழங்கபபடுகின்றது

PICKERING, AJAX,WHITBY, OSHAWA CLARINGTON, BROCK, UXBRIDGE ,SCUGOG,

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

## வளரும் முதியோர் பராமரிப்பு - வீட்டில் ஆதரவளித்தல்

### இலவச உணவு விநியோக சேவை

அசைவம் அல்லது சைவ விருப்பத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

- சூடான, புதிதாகத் தயாரிக்கப்பட்ட உணவு
- எங்களின் தன்னார்வலர்களால் சரியான நேரத்தில் உணவு விநியோகிக்கப்படுகிறது

எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவைவழங்கப்படுகின்றது

Pickering, Ajax, Whitby, Oshawa, Clarington,Brock, Uxbridge, Scugog





மேலதிக விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

(647) 968-9549

(647) 286-9549

டெலிவரி தேதிக்கு குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னதாக உங்கள் ஆர்டரைச் செய்யுங்கள்.

தகுதி: பாதிக்கப்படக்கூடிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முதியவர்கள்: வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

dtaseniorsinhomesupport.ca

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

## Durham Tamil Association Evolving Elder Care -in Home Support for seniors

### Free Training

- Free Training and a certificate of completion from Computek College in Ajax
- 50 volunteer hours placement

### Benefits

- Free Vulnerable Check
- Unlock valuable life skills with Free Standard CPR and First Aid Training
- Volunteer Travel Expense $0.58/km
- Join us to make a postive impact on seniors lives while gaining valuable skills and exprences.

### Contact US

Office Hours: Monday through Friday 9:00am - 5:00PM

Contact Number:

- (647) 968-9549
- (647) 286-9549

**Durham Tamil Association**

66 Harwood Ave, S.Ajax L1S 2H6




### Serving Eight Municipalities

- Brock
- Uxbridge
- Scugog
- Pickering
- Oshawa
- Clarington
- Ajax
- Whitby

**For More Information Visit the website: dtaseniorsinhomesupport.ca**

## Volunteers Needed!

### தன்னலவாளர்கள் தேவை!




**Join our volunteer team and gain more than just experience – unlock valuable life skills while making a positive impact on seniors' lives in Durham!**

**Volunteer Gala : Twice a Year!**

- Summer Gala 2024
- Winter Gala 2024
- Spring Gala 2025
- September Gala 2025

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada



# ஸ்ரீ ஆதிபராசக்தி அம்பாள் தேவஸ்தானம் ஸ்ரீ கனகதுர்க்கை பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

## 24-வது ஆண்டு விழா (2024)

ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம் – டொரொன்ரோ

3021 Markham Road, Units 45, 46 & 47 Scarborough ON M1X 1L8

E-Mail: sakthi1226@gmail.com | Tel: 416-293-1226 | Fax: 416-293-1215







கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் கபடு வராத நட்பும் கன்றாத வளமையும்
குன்றாத இளமையும், கழுபிணி இலாத உடலும் சலியதா மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும் தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும் தடைகள் வராத கொடையும்
தொலைதா நிதியமும், கோணாத கோலும் ஒரு துன்பம் இலாத வாழ்வும் துய்ய நின்பாதத்தில்
அன்பும் உதவிப் பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய் அலைஆழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி அருள்வாமி அபிராமியே!

**அம்பிகை அடியார்க்ளே**

ஸ்ரீபரம்பொருளினால் சிருஷ்டிக்கப்பட்ட இப்புண்ணிய பூவுலகின் கண்ணேயுள்ள ஐம்பெரும் கண்டங்களுள் செல்வச்செழிப்புடனும், விஞ்ஞான நுண்ணாராய்ச்சியினாலும் நிறைவுபெற்று விளங்கும் அமெரிக்கக் கண்டத்தின் வடபால் தலைசிறந்து நிகழும் உலக அதிசயங்களில் ஒன்றான நயகரா நீர் வீழ்ச்சியைத் தன்னகத்தே கொண்டதுமான நீர்வளம், நிலவளம், மலைவனம் போன்ற இயற்கை வளங்களால் நிறைந்து விளங்குவதுடன் – நூற்றுக்கும் மேற்பட்ட சைவ, வைஷ்ணவ திருக்கோயில்களால் நிறைந்து மிளிர்கின்ற கனடாத் திருநாட்டின் ஸ்காபரோ புண்ணிய ஸ்தலத்தில் கோவில் கொண்டு வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் அன்னையாம் ஸ்ரீ ஆதிபராசக்தி ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாளுக்கு நிகழும் மங்களகரமான குரோதி வருடம் சித்திரை 29 ம் நாள் **(11.05.2024)** சனிக்கிழமை திருவாதிரை நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய பகல் சுபவேளையில் 8:00 மணிக்கு மேல் 9:30 மணிக்குள் கொடியேற்றப்படும்.

**மே 25 ஆம் திகதி வைகாசி திங்கள் 12-ம் திகதி காலை 8:00 மணி தொடக்கம் 9:00 மணிக்குள் மூலத் நட்சத்திரம், மிதுன லக்னத்தில் தேர் வடம் பிடிக்கப்படும்.**

இவ்விழாக்காலங்களில் நேர, கால, நிர்ணயம் தவறாமல் நடைபெறும் கிரியைகளில் அனைவரும் கலந்து சிறப்பிப்பதோடு பால், தயிர், பழங்கள், பூக்கள் போன்ற அபிஷேகத் திரவியங்களையும் வழங்கி அம்பாளின் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

**காலை**

8:30 மணிக்கு கும்ப பூஜை
9:30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
10:00 மணிக்கு யாக பூஜை
10:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
11:00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11:30 மணிக்கு வீதியுலா
12:30 மணிக்கு பிரசாதம் வழங்கல்

திருவிழாக்காலங்களில் அனைவரும் வருகை தந்து
அம்பிகையின் திருவருள் பெற்று வாழ்வீர்களாக!
இங்கனம் : **ப்ரம்மஸ்ரீ சந்திரமௌலி சாஸ்திரிகள்**

**மாலை**

5.00 மணிக்கு கும்ப பூஜை
5.30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
6.00 மணிக்கு யாக பூஜை
6:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
7.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
8.00 மணிக்கு வெளிவீதி வீதி வலம் வருதல்
8.45 மணிக்கு பிரசாதம் வழங்கல்

**புதிய வேத பாடசாலை ஒன்று ஆரம்பிக்கவுள்ளது.**
**மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளவும்.**

# National Ethnic Press and Media Council of Canada Celebrates International Press Freedom Day, at the Members Lounge of Council Chambers of Toronto City Hall

கனடிய செய்திகள்
Canadian News



## கனடா "கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகம்" "சர்வதேச பத்திரிகைச் சுதந்திர நாளை" கொண்டாடி மகிழ்ந்தது

10-05-2024 அன்று வெள்ளிக்கிழமையன்று கனடாவில் இயங்கிவரும் "கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகம்" (National Ethnic Press and Media Council of Canada) தனது அங்கத்தவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் ஆகியோர் சகிதம் "சர்வதேச பத்திரிகைச் சுதந்திர நாளை" கொண்டாடி மகிழ்ந்தது.

மேற்படி விழா ரொறன்ரோ மாநகரில் அமைந்து மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

National Ethnic Press and Media Council of Canada என்னும் பத்திரிகையாளர்கள் கழகத்தின் தலைவர் தோமஸ் சாரஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த பத்திரிகையாளர்கள் விழாவில் கனடா உதயன் சார்பிலும் அதன் பிரதம ஆசிரியர் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவை வழங்கினார்கள். உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்கள் மேற்படி National Ethnic Press and Media Council of Canada பத்திரிகையாளர்கள் அமைப்பின் நீண்ட கால உறுப்பினர் என்பதும் அதன் சிரேஸ்ட உப - தலைவர்களில் ஒருவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.







## "கவிநாயகர்" கந்தவனம் அவர்களின் நினைவலைகளைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் கனடாக் கவிஞர்கள் கழகம் ஏற்பாடு செய்துள்ள "நினைவேந்தல் கூட்டம்"

கனடாவில் வாழ்ந்து அண்மையில் இயற்கை எய்திய எங்கள் "கவிநாயகர்" கந்தவனம் அவர்களின் நினைவலைகளைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் கனடாக் கவிஞர்கள் கழகம் ஏற்பாடு செய்துள்ள "நினைவேந்தல் கூட்டம்" எதிர்வரும் 19-05-2024 அன்று ஸ்காபுறோ நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைவரும் வந்து கலந்து கொண்டு அன்னாரின் பெருமைகளை புகழந்துரைக்கும் உரைகளையும் கவிதாஞ்சலிகளையும் செவிமடுக்குமாறு கனடாக் கவிஞர்கள் கழகம் அழைக்கின்றது.




## கனடாவில் நடைபெறவுள்ள ஐரோப்பா வாழ் எழுத்தாளர் கோவிலூர் செல்வராஜன் நூல்களின் வெளியீட்டு விழா

உலகத் தமிழ் வாசகர்கள் மத்தியில் நன்கு அறியப்பெற்ற ஐரோப்பா வாழ் எழுத்தாளர் கோவிலூர் செல்வராஜன் நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் 25-05-2024 அன்று கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ளது.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில் நடைபெறவுள்ள மேற்படி விழாவிற்கு தற்போதை தலைவர் எழுத்தாளரும் கவிஞருமான அகணி சுரேஸ் அவர்கள் தலைமை தாங்குகின்றார். 27 Case Bridge Court Unit 5 (27 கேஸ்பிரிட்ஜ் கோர்ட் யுனிட் - 5) என்னும் விலாசத்தில் அமைந்துள்ள "பைரவி நுண்கலைக் கூட" கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.




TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி aches | All Pain & Aches, Arthritis Asthma, Sinusitis, Rhinitis Allergies Stress, Migraine & All Types of Head- |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல் | Diabetes, Gastric Pain, Ulcer Menstruation Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள் Sri Lanka News

# திருமண முறிவுகளால் சிதைந்து போகும் குடும்ப கட்டமைப்பினை பாதுகாக்கும் விழிப்புணர்வு நிகழ்வு



(14-05-2024)



அதிகரித்து வரும் திருமண முறிவுகளும் சிதைந்து போகும் குடும்ப கட்டமைப்புகளும் என்ற தொனிப்பொருளில் சாய்ந்தமருது குவாஷி நீதிமன்ற நீதிபதி ஆதம்பாவா தலைமையில் சாய்ந்தமருது பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். முஸ்பிறா நெறிப்படுத்தலில் மகளிர் சங்க உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு சாய்ந்தமருது குவாஷி நீதிமன்ற மண்டபத்தில் 14-05-2024 அன்று மாலை நடைபெற்றது.

இதன் போது விழிப்புணர்வு நிகழ்வில் விசேட உரையினை முஸ்லீம் பெண்கள் செயல் ஆராய்ச்சி முன்னணியின் பிரதிநிதிகளான ஹபிலா மற்றும் ஹஸ்ஸானா உட்பட HEO நிறுவனத்தின் பிரதிநிதிகளாக வை. றினோஸா, எம். எம் றீபா உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஏனைய உரையினை சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பெருங் குற்றப் பொறுப்பதிகாரியும் பதில் பொறுப்பதிகாரியுமான நவுப், சாய்ந்தமருது பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி கள உத்தியோகத்தராக கடமை புரியும் ஏ.அபிரா, பிரதேச அபிவிருத்தி அமைப்பின் தலைவர் ஐ.ஜாபீர், ஆகியோரும் மேற்கொண்டனர்.



அத்துடன் குவாஷி மன்றத்தின் யூரிகளாக கடமையாற்றுகின்ற மௌலவி ஏ.எம்.நாவாஸ், எம்.ஐ.உதுமாலெப்பை, எம்.எஸ்.நவூஸுக், ஏ.எம் சஸ்நீன், ஏ.டபிள்யூ சரோபர், ஏ.எம்.ரசீட், எஸ்.எல்.நியாஸ், எப். எப்.அஹானி, ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

# சிறையில் உணவொறுப்பில் ஈடுபட்டு வருகின்ற சமூக செயற்பாட்டாளர் ஆணந்தவர்மனின் விடுதலையில் அக்கறைகொள்ளாத அரசு உதட்டளவில் நல்லிணக்கம் பேசுகிறது!

## "குரல் அற்றவர்களின் குரல்" அமைப்பு கண்டனம்

15.05.2024

சிறையில் ஒன்பது நாட்களாக உணவொறுப்பில் ஈடுபட்டு வருகின்ற சமூக செயற்பாட்டாளரான ஆணந்தவர்மனின் விடுதலையில் அக்கறைகொள்ளாத அரசு உதட்டளவில் நல்லிணக்கம் பேசுகிறது!

கொழும்பு விளக்கமறியல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில், கடந்த ஒன்பது நாட்களாக உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற சமூக செயற்பாட்டாளரான செல்வநாயகம் ஆணந்த வர்மனை 14-05-2024 அன்று குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் சிறை வைத்தியசாலைக்கு நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

அதாவது இல.117, தோணிக்கல் - வவுனியா என்ற முகவரியைச் சேர்ந்த ஆணந்தவர்மன், கடந்த 26.03.2024 அன்று பயங்கரவாத விசாரனைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். இவர் தனது முகநூல் பக்கத்தினூடாக மக்களிடையே பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வகையில் பதிவுகளை இட்டு வந்துள்ளதாக குற்றம் சுமத்தியுள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவினர், கொழும்பு - நீதவான் நீதிமன்ற கட்டளையினை பெற்றுக்கொண்டு, சமூகச் செயட்பாட்டாளரான தன்னை, மறு அழைப்புத் திகதி எதுவுமின்றி கொழும்பு - விளக்கமறியல் சிறையில் காலவரையரையற்ற விளக்கமறியலில் தடுத்து வைத்துள்ளதாக தெரிவித்திருக்கின்றார்.

இந்நிலையில், இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் தன்னை, "உடனடியாக விடுதலை செய்யவேண்டும். அவ்வாறில்லையேல், தன்மீது பொய்யாகப் புனையப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளுக்கமைய மேல் நீதிமன்றில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்து மன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும்" என்ற கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஒன்பது நாட்களாக சிறைக்குள் இருந்தவாறு உணவுத் தவிர்ப்புப் பேராட்டத்தில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார்.

யுத்தத்தின்போது கடுமையான விழுப்புன்களுக்கு ஆளாக்கப்பட்ட ஆணந்தவர்மன், ஏற்கனவே கடந்த 2009ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சுமார் ஏழு வருடங்கள் சிறைவாசம் அனுபவித்து விடுதலை பெற்றிருந்தவர் என்பது கவனிக்கத்தக்கது.

அதனடிப்படையில், நீண்டகாலமாக உடல் உள ரீதியில் பாதிக்கப்பட்டிருந்த இவர், தற்போது ஒன்பது நாட்களை கடந்தும் உறுதியோடு மேற்கொண்டு வருகின்ற உணவுத் தவிர்ப்பு காரணமாக உடல் உருக்குலைந்து மிகவும் சோர்வுற்ற நிலையில் வெலிக்கடை சிறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனவே, இதன்மூலம் மக்களின் பக்கம் நின்று ஜனநாயக வழியில் பொதுவெளியில் செயற்பட்டு வருகின்ற சிவில் செயற்பாட்டாளர்கள் மீது அரச இயந்திரங்களைக்கொண்டு மறைகரமாக அடக்குமுறைகளை மேற்கொண்டு, சட்டத்தின் பெயரில் குரல்வளைகளை நசுக்குகின்ற செயல்களில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றமையை காணமுடிகிறது.

உதட்டளவில் மாத்திரமே நல்லிணக்கம் பேசுகின்ற அரசானது மிகநீண்ட காலங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வருடக்கணக்காக தெருப்போராட்டம் நடாத்திவருகின்ற காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, பாதுகாப்பு - தொல்லியல் - வனவளம் என்ற பெயர்களில் கையகப்படுத்தப்பட்ட இன்றும் கையகப்படுத்திக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்களின் காணிகள் விடுவிப்பு, போரை காரணம்காட்டி அநியாயமாக உயிர்பறிக்கப்பட்ட தமது உறவுகளின் ஆத்மாக்களை நினைவேந்தி ஆறுதலுறுகின்ற அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றமை போன்ற வெகுமக்களின் பல்வேறு வாழ்வியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து அச்சுறுத்தல்களை தொடர்வதன் மூலம் அரசு இந்த நாட்டை எத்திசை நோக்கி கொண்டுசெல்ல முனைகிறது?

எனவே, மக்கள் நலனை மகுட வாசகமாக கொண்டியங்கும் அரசியல் மற்றும் குடிமக்கள் சார் அமைப்புகள், "வீதி வரையே பிரச்சினை, எம் வீட்டுக்குள் வரவில்லை" என்று வேடிக்கை பார்த்துக்கொண்டிராது ஜனநாயகத்தின் குரல்களுக்கு ஆபத்து நேருகின்றபோது யாராக இருந்தாலும் அதனை தட்டிக் கேட்கின்ற மனநிலையுடன் கருமமாற்றுவதன் ஊடாகவே எதிர்பார்க்கின்ற மக்களாட்சியின் அடைவுமட்டத்தை அன்மிக்க முடியுமென்பதை தயவுடன் வலியுறுத்த கடமைப்படுகிறோம்.

# நினைவேந்தல் உரிமை மறுக்கப்பட்டமை மிக மோசமான ஜனநாயக உரிமை மீறல்

## வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்கிறது சம்பூர் நினைவேந்தல் குழு




நினைவேந்தல் உரிமை மறுக்கப்பட்டமை மிக மோசமான ஜனநாயக உரிமை மீறல், அதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்ல நினைவேந்தல் ஏற்பாட்டு குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்கள் 2009 இன் பின்னர் தமது ஜனநாயக உரிமைகளை மட்டுமல்ல தமது அடிப்படை மனிதவுரிமைகளைக் கூட போராடிப் பெற வேண்டியவர்களாகவே இருக்கின்றனர். அதிலும் கிழக்கு மாகாணத்தின் சம்பூர் போலீஸ் பிரிவானது மிக மோசமான ஜனநாயக மற்றும் மனிதவுரிமைப் பிறழ்வுகளுக்குள் மக்களை இட்டுச் செல்கிறது என்பதை தற்போதைய நிலைமைகள் தெளிவுபடுத்துகின்றன.

உலகின் அனைத்து இனங்களும் தமக்கெனக் கொண்டுள்ள சிறப்புரிமையான நினைவேந்தல் உரிமையினை எமது மக்களிடமிருந்து பறித்து அவர்களது மனவேதனைகளைப் புதைத்து உறவுகளை இழந்தோரை மனநோயாளிகளாக்கும் இழி செயலில் ஈடுபடுகிறது அரச இயந்திரம்.

கடந்த நவம்பர் மாதம் இலங்கையில் எந்த மாவட்டத்திலும் தடை செய்யப்படாத மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு சம்பூரில் மட்டும் தடைவிதிக்கப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை எமது நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவுக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தடை விதிப்பதாக மூதூர் நீதவான் நீதி மன்றினால் அறிவிக்கப்பட்டது.

எனினும் மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவுக்கும் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் செயற்பாட்டுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்பதனை தடையுத்தரவை கொண்டு வந்த காவல்துறையினருக்கு தெளிவு படுத்தப்பட்டதுடன் அன்று சேனையூர் பிள்ளையார் கோவில் பொது மக்களால் முன்னெடுக்கப்பட்ட கஞ்சி வழங்கும் செயற்பாடும் நீதிமன்றக் கட்டளைக்கேற்ப முடிவுறுத்தப்பட்டது.

அன்றைய தினம் இரவு வேளையில் கஞ்சி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்களின் வீடுகளுக்குள் நுழைந்த சம்பூர் போலீசார் அவர்களைக் கைது செய்தனர். இச்செயற்பாட்டின் போது கணவரை யுத்தத்தில் இழந்த நிலையில் தாயும் இரண்டு பெண் பிள்ளைகளும் வசித்த வீட்டுக்குள் நுழைந்த போலீசார் தாயை கைது செய்ய முயன்ற போது மகள் தடுக்க முற்பட்டதால் பொலிசாருடன் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி பல்கலைக் கழகத்துக்கு தெரிவான மாணவியான மகள் தற்கொலை செய்து கொள்ள முயன்றிருக்கிறார்.

இந்நிலையில் ஆண் போலீசார் தாயையும் மகளையும் மிகக் கேவலமாக மிருகங்களைப் போல நடந்து கொண்டு பெண் என்பதைக் கூட சிந்திக்காமல் வீதிவரை இழுத்துச் சென்று கைது செய்தமையானது பெண்ணிய அமைப்புக்கள் மற்றும் மனிதவுரிமை ஆர்வலர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அரச இயந்திரமானது இன்னமும் தமது அடக்குமுறைக்கு மிருகத் தனத்தைக் கட்டவிழ்த்து விடும் பழமை வாதத்திலிருந்து விடபடவில்லை என்பதற்கான மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக இச்சம்பவம் காணப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட கமலேஸ்வரன் விஜித்தா கமலேஸ்வரன் தேனிலா செல்வவினோத் சுஜானி மற்றும் நவரட்ணராஜா ஹரிகரகுமார் ஆகியோர் சம்பூர் போலீசாரினால் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிசாரின் அடுத்தடுத்த கண் மூடித்தனமான ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் வகையிலான மூர்க்கத் தனமான செயற்பாடானது தமிழ் மக்களைக் கொந்தளிப்பான நிலைக்கு இட்டுச் செல்வதற்கான ஒரு திட்டமிடப்பட்ட அரசியல் செயற்பாடாகும். எனவே கிழக்கு மாகாணத்தில் கட்டமைக்கப்பட்ட ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் சம்பூர் போலீசாரின் செயற்பாடுகளை மிக வன்மையாக நாம் கண்டிக்கின்றோம்.

குறித்த பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கும் மனிதவுரிமை மீறலுக்கும் எதிராக அரசியல் கட்சிகள் பொதுவமைப்புக்கள் மனிதவுரிமை மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பாக செயற்படும் அமைப்புக்கள் என அனைவரும் இணைந்து காத்திரமான செயற்பாடுகளை மேற்கொள்ள முன்வருமாறும் அறைகூவல் விடுக்கின்றோம் என்றுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அற்றார் அழிபசி தீர்த்தல் நிகழ்வு நல்லூரில் நடைபெற்றது



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிப்படைந்துள்ள குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும் "அற்றார் அழிபசி தீர்த்தல்" என்ற திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது.

பகிர்ந்துண்டு வாழ்வோம் என்ற கருப்பொருளில் செயற்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம் ஞாயிற்றுக்கிழமை (12-05-2024) நல்லூரில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நல்லூர் பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட வெவ்வேறு பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.





இவற்றுக்கான நிதி அனுசரணையைக் கனடாவில் இருந்து வருகை தந்திருந்த செல்லையா சத்தியலிங்கம் மற்றும் இலண்டன் வாழ் சற்குணநாதன் து'ாகரன் ஆகியோர் வழங்கியிருந்தார்கள்.

கொரோனாப் பெருந் தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட தொழில் இழப்பைத் தொடர்ந்து, நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சி பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ள குடும்பங்களை வெகுவாகப் பாதித்துள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் கொரோனாப் பேரிடர்க் காலத்தில் ஆரம்பித்த அற்றார் அழிபசி தீர்த்தல் திட்டத்தை இன்றுவரை கைவிடாது தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் நகைக்கடை உரிமையாளரின் மனைவி ஓட்டிச் சென்ற கார் விபத்து!

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நகைக்கடை உரிமையாளரின் மனைவி ஓட்டிச் சென்ற கார் யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்தியில் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் ஏற்பட்ட விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்து 12-05-2024 மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் பெரிய வருவதாவது, யாழ்ப்பாணம் நாவலர் வீதியால் வருகை தந்த நகைக்கடை உரிமையாளரின் மனைவியின் வாகனம் இலுப்பையடிச் சந்தியை கடக்க முற்பட்டது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் பலாலி வீதியூடாக புன்னாலைக் கட்டுவன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் இலுப்பையடிச் சந்தியை கடக்க முற்பட்ட போது குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனின் கால்கள் முறிவடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.



குறித்த விபத்தில் வாகனத்தில் பயணம் செய்த நகைக்கடை உரிமையாளரின் மனைவி சந்தியை கவனிக்காது வாகனத்தை நேராக பயணிக்க முற்பட்ட போதே குறித்த விபத்து இடம் பெற்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உறவுகளை நினைவேந்தும் உரிமையை மறுத்து தமிழர்களைச் சீண்ட வேண்டாம்!

## ரணில் அரசுக்கு செல்வம் அடைக்கலநாதன் எச்சரிக்கை

(14-05-2024)

"தமிழர்கள் மறைந்த தமது உறவுகளை நினைவேந்தும் நிகழ்வையும் கூட, இனங்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்துவதற்கு எதிரான சட்டத்தின் மூலம் தடுப்பதற்குக் களம் இறங்கியமை மூலம் தேசிய நல்லிணக்கத்துக்கான கடைசி வாய்ப்பையும் இறுக மூடி இருக்கின்றது.

இலங்கை ஆட்சிப் பீடம் இது பெரும் துரதிஷ்ட வசமானதாகும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒட்டி முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகித்தவர்கள் சம்பூரில் ஈவு இரக்கமற்ற முறையில் நள்ளிரவில் பொலிஸாரால் அராஜகமான முறையில் கைது செய்யப்பட்ட விடயம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் நினைவேந்தல் உரிமை மறுக்கப்பட முடியாத அடிப்படை உரிமையாகும். சர்வதேசத் தரப்புக்கள் ஐ.நா. மனித உரிமைகள் அவையிலேயே திரும்பத் திரும்ப இதனை வலியுறுத்தி வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூட, தாம் ஜனாதிபதியாக பதவியேற்ற கையோடு, "மக்கள் தமது உறவுகளை நினைவு கூற உரிமை உண்டு. அது மறுக்கப்பட முடியாத" என்று கூறினார். இதன் பின்னரும் அதை அவர் பல தடவைகள் வலியுறுத்தி வந்தார்.



இருப்பினும், அவையெல்லாம் பேச்சளவில் தான் இருக்கின்றன. அவரின் பொலிஸ் கட்டமைப்பு அதற்கு எதிராக மிக முரட்டுத் தனமாக தமிழ் மக்களின் ஆன்மாவையே சீண்டிப் பார்க்கும் விதமாக அடக்குமுறை திமிருடன் இப்படி நடந்து கொள்கின்றது.

இன்னொரு கோட்டாபய ராஜபக்சவின் அராஜக ஆட்சியையே இந்தச் செயற்பாடு மூலம் ரணில் விக்ரமசிங்கவும் இங்கு நிலைநிறுத்த முயலுகின்றாரோ என்ற சந்தேகம் நமக்கு எழுகின்றது. இந்த போக்கு அவருக்கும் நல்லதல்ல, இலங்கை நாட்டுக்கும் நல்லதல்ல. "வினையை விதைத்தால் அதைத்தான் அறுவடை செய்ய வேண்டி இருக்கும்" என்பதை ஜனாதிபதிக்கும் அவரது பொலிஸ் துறைக்கும் நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

நினைவேந்தல் விடயத்தில் மக்களின் உரிமையை அராஜகம் மூலம் அடக்குவது மக்களை அதற்கு எதிராகக் கிளர்ந்தெழ வைக்கும் விபரீதத்தையே ஏற்படுத்தும். இதையும் ஆட்சிப் பீடத்துக்கு நாங்கள் நினைவூட்ட விரும்புகின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.



# மன்னார் பள்ளிமுனை கடலில் வள்ளம் தாண்டு மீனவர் பலி

(13-05-2024)

மன்னார் பள்ளிமுனை கடற்பரப்பில் இருந்து திங்கட்கிழமை (13-05-2024) மாலை வத்தில் கடற்தொழிலுக்கு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் வள்ளம் தண்டதில் கடலில் விழுந்து உயிரிழந்தார்.



உயிரிழந்தவர் மன்னார் பள்ளிமுனை மேற்கு பகுதியைச் சேர்ந்த எஸ்.ஏ.ஜான்சன் (வயது-62) என்ற குடும்பஸ்தர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் உள்ளடங்களாக மேலும் சில மீனவர்கள் வள்ளம் ஒன்றில் தொழிலுக்குச் சென்றுள்ளனர். இதன் போது திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் திடீரென கடும் காற்று மற்றும் மழை பெய்துள்ளது.

இதன் போது குறித்த மீனவர்கள் சென்ற வள்ளம் (படகு) கடலில் மூழ்கியது. இதன் போது ஏனையவர்கள் தப்பிய போதும் குறித்த குடும்பஸ்தரான மீனவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மன்னார் வைத்தியசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ருவாண்டா (1994) ... இலங்கை (2009) ... காசா (2024) ...

## (இனப்படுகொலைகள் தொடர்பில் கனடா உதயனின் சிறப்புத் தொடர்)

## (பகுதி - 6)

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

“தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்” என்று மக-ாகவி பாரதி ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே முழங்கினான்.

அது அறச்சீற்றத்தின் கடுமையான ஒரு வெளிப்பாடு. ஒரு தனி மனிதனுக்கு உணவில்லை என்றால் இந்த உலகம் எதற்கு அவன் வினவியதில் நியாயம் இருந்தது. அந்த ஒரு வேளை உணவிற்காகவே அனைத்து மக்களும் தமது உடல், பொருள், ஆவி என அனைத்தையும் செலவிட்டவர்களுக்கு அந்த உணவு கிடைக்கவில்லை என்றால் இந்த உலகால் என்ன பயன் என்று வினவினான் பாரதி.

இன்று பாரதி இருந்திருந்தால், அந்த அறச்சீற்றம் பன்மடங்கு பெருகியிருக்கும். பேரினவாதத்தை தனது கவிதைகளால் சுட்டெரித்திருப்பான் அந்த முண்டாசு கவிஞர். பாரதி ஒரு பொதுவுடமைவாதி, தேசியவாதி என்றாலும் தமிழ் மீதும் தமிழனத்தின் மீதும் அளவுகடந்த பற்றுகொண்டிருந்தவர்.

பாஞ்சாலிக்கு ஏற்பட்ட அவமானத்தைக் கண்டு சீறியவன். சுற்றுச்சூழல் மீதிருந்த பற்றின் காரணமாகவே “காக்கை குருவி எங்கள் ஜாதி” என்றான். “சாதிகள் இல்லையடி பாப்பா” என்று கூறி சமூகப் பிளவுகளுக்கு எதிராக குரல் கொடுத்தான்.

இப்படியெல்லாம் சமூகத்தில் நிலவிய அவலங்களுக்கு எதிராக குரல் கொடுத்த அந்த மகாகவி இன்று இருந்திருந்தால், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக எப்படியாக தீவிரமாக குரல் கொடுத்திருப்பான் என்ற எண்ண வைக்கிறது.

அவரது ஆருயிர் நண்பர் நீலகண்ட பிரம்மச்சாரி ஆங்கிலேயே ஆட்சியாளர் ஆஷ் துரையை வாஞ்சிநாதன் கொலை செய்த வழக்கில், குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டு ஏழரை ஆண்டுகாலம் கடுஞ்சிறைவாசம் அனுபவித்து விடுதலையான பிறகு, சாப்பாட்டிற்கு வழியின்றி உதவிகேட்டு பாரதியை காண வருகிறார். நீண்ட காலத்திற்கு பிறகு நண்பன் நீலகண்டனை அடையாளம் கண்டுகொண்ட பாரதி தான் வறிய நிலையில் இருந்தாலும், அவருக்கு உணவளிக்கிறார். அப்போது பாரதியின் மனதில் உதித்தது தான் “தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்”.

மகாகவி பாரதி மறைந்து சுமார் 90 ஆண்டுகளுக்கு பிறகு இலங்கையின் வடக்குக் கடற்கரைப் பகுதியில் பேரவலம் ஒன்று அரங்கேறியது. ஒரு சிறிய நிலத்துண்டுப் பரப்பில் ஆயிரக்கணக்கான மக்கள் சிக்கியிருந்தனர் அல்லது திட்டமிட்டு வெளியேற முடியாத வகையில் சிக்கவைக்கப்பட்டனர். “நோ ஃபயர் சோன்” அல்லது யூத்த சூனிய பிரதேசம் என்று அரசால் அறிவிக்கப்பட்ட பகுதியிலேயே அதிகப்படியான தாக்குதல் இடம்பெற்றது. இதை நேரில் கண்ட சாட்சிகளும் பன்னாட்டு அமைப்புகளும் உறுதி செய்துள்ளன. ஒரு சிறிய பிரதேசத்தில் மக்களை சிக்கவைத்து, அல்லது ஓடவோ ஒளியவோ முடியாத ஒரு நிலையை ஏற்படுத்தி நிலம், நீர், ஆகாயம் என்று மும்மார்க்கமாகவும் அகோர தாக்குதல் நடைபெற்றது வரலாறு.

சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்ட கொத்தணி குண்டுகள் பயன்படுத்தப்பட்டன. அவலமும் அழுகையும் அன்றாட நிகழ்வுகளாயின. மருத்துவமனைகள், பாடசாலைகள், வழிபாட்டு தலங்கள் என்று எந்த இடமும் தப்பவில்லை. யார் எங்கிருந்தாலும் ஒரே நோக்கம் போட்டுத் தள்ளுவது தான் என்றிருந்தது.

திட்டமிட்ட ஒரு கடும் பொருளாதார நெருக்கடிக்குள் தமிழ் மக்கள் தள்ளப்பட்டனர் என்று உள்ளேயும் இருக்க முடியாமல், வெளியேயும் செல்ல முடியாமல் சிக்கித்தவித்த பலர் கூற நான் கேட்டுள்ளேன். முள்ளிவாய்க்கால் பகுதியில் ஒரு பெட்டிக்குள் அடைக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் இருந்தனர். கடும் போர் நிலவிய பிரதேசமாக இருந்த அங்கு வெளியிலிருந்து எந்த உதவிகளும் சென்றுவிடக் கூடாது என்பதில் ராஜபக்சக்கள் உறுதியாக இருந்தனர். உணவு, மருந்து என்ற இரு முக்கியமான விஷயங்கள் போராயுதங்களாக பயன்படுத்தப்பட்டன.

போர்க்காலத்தில் வன்ன பிரதேசத்தில், அதிலும் குறிப்பாக முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்த மருத்துவர்கள், மருத்துவ உதவிப் பணியாளர்கள், அவசர மருத்துவ வாகனங்களை ஓட்டியவர்கள் என்று பலரை நேரில் சந்தித்துள்ளேன். அவர்கள் கூறிய வி'யங்களை கேட்பதற்கும், எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் உடலும் உள்ளமும் உறுதியாக இருக்க வேண்டும்.

வன்னிப் பிரதேசம் வளமான பூமி. இலங்கையில் நெல் விளைச்சல் பரந்துபட்ட அளவில் பெரியளவில் செய்யப்பட்ட இடம். நாடு முழுவதற்கும் நெல், அரிசி ஆகியவற்றை தங்குதடையின்றி அனுப்பிய மண். ஆனால், போர் அனைத்தையும் புரட்டிப் போட்டது. வளமான பூமி பயிர் சாகுடியின்றி எறிகணை தாக்குதல், துப்பாக்கிச் சூடு ஆகியவற்றால் வளம் நிறைந்த பூமி வறண்ட பூமியாக மாறியது. இதையடுத்து கடும் உணவுத்தட்டுபாடு ஏற்படும் சூழல் உருவானது.

இதை அப்போது ஆட்சியில் இருந்த அரச, அரசியல் தலைவர்களும், இராணுவ தளபதிகளும் சாதமாகப் பயன்படுத்திக்கொண்டனர். போர் பிரதேசத்தில் உணவு நெருக்கடியை ஏற்படுத்தி, மக்களை பசி மற்றும் பட்டினியில் தள்ளினால் அவர்கள் தாமாக அரச கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி வெளியேறு வருவார்கள், பின்னர் விடுதலைப் புலிகளை சுலபமாக வென்றுவிடலாம் என்று ஒரு கருத்துருவாக்கம் செய்யப்படுகிறது. அதன் முதற்கட்டமாகத்தான் போர் பிரதேசத்திலிருந்து பன்னாட்டு அமைப்புகள் உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டன. அவர்களின் உயிர்களுக்கு அரசு உத்தரவாதம் அளிக்க முடியாது என்று கூறப்பட்டது. இதில் குறிப்பாக உலக உணவுத் திட்டம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க, ஐ நா அலுவலகங்கள் ஆகியவையே இலக்கு வைக்கப்பட்டன என்று அந்த அமைப்புகளில் அப்போது பணியாற்றியவர்கள் என்னிடம் கூறியிருந்தனர்.

அப்படியான ஒரு நெருக்கடியில் தான் திட உணவு கிடைக்காவிட்டாலும், திரவ உணவையாவது பருகி நொந்து, நைந்து நூலாக குற்றுயிரும் குலையுருமாக இருக்கும் உயிரை தக்கவைத்துக்கொள்ள முடியுமா என்ற அவலம் உருவானது. பன்னாட்டு அமைப்புகள் தரப்பில் கையிலிருந்த உணவுப் பொருட்களில் ஒரு பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது, மற்ற பகுதி வலிந்து எடுத்துச் செல்லப்பட்டது.

அவ்வகையில் அந்த சொற்ப உணவுப் பொருட்கள் கிடைத்தவர்களுக்கு அன்றைக்கான உணவைவிட நாளைக்கான உணவை சேமிக்க வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. நாளொன்றுக்கு மூன்று வேளை உணவு என்பது போய் நீண்டகாலம் ஆன நிலையில் அது இரண்டாகி, பின்னர் அது ஒன்றாகி, அதையடுத்து இரண்டு நாட்களுக்கு ஒருமுறையேனும் உணவு என்ற பெயரில் உண்ண ஏதாவது கிடைத்தால் அதுவே இறையருள் என்று கூறப்படும் நிலை தோன்றியது.

இதையடுத்து தான் சோறு சமைப்பதைவிட அந்த அரிசியை கஞ்சியாகக் காய்ச்சி அருந்தும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர். சோறு சமைத்தால் அதனுடன் உண்பதற்கு வேறு சில பதார்த்தங்கள் தேவைப்படும். பாலுக்கே வழியில்லாத நிலையில் பாயாசத்தை எப்படி சிந்திப்பது என்ற நிலை.

மக்களை நிலைகுலையச் செய்ய ஒரு போராயுதமாக உணவு விநியோகத் தடை கையாளப்பட்ட நிலையில், கிடைத்த அரிசியை கஞ்சியாகக் காய்ச்சி அதை ஒரு உயிர் காக்கும் உணவாக போர் பிரதேசத்தில் சிக்குண்டிருந்த தமிழர்கள் உட்கொண்டனர். ஆனாலும், அது அப்போதைக்கு வயிற்றை சற்றேனும் நிரப்பியது போலத் தோன்றினாலும், போதிய ஊட்டச்சத்து இல்லாததன் பாதிப்பு மக்களிடம் தெரிய ஆரம்பித்தது. உடல் ரீதியான வலுவை அவர் சிறுகச்சிறுக இழக்கத் தொடங்கினர். குண்டு வீச்சு மற்றும் துப்பாகிச் சூட்டில் காயமடைந்தவர்களுக்கு மருத்துவம் என்ற பெயரில் முதலுதவி மட்டுமே செய்ய முடிந்த நிலையில் அவர்கள் மீண்டெழுவதற்கு உடலில் போதிய வலு இருக்கவில்லை.

இருந்தாலும் அரசிக் கஞ்சியே பிரதான உணவாக இருந்தது. அந்த அரசிக் கஞ்சி கூட போரின் ஒரு சாட்சியாகவே இருந்தது. காய்ச்சிய கஞ்சியைக் குடிப்பதற்கு கூட பாத்திரங்கள் இருக்கவில்லை. இருந்தாலும் தேங்காய் ஓடுகள் கைகொடுத்தன. போர் வலையத்தில் சிக்கிய மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ கற்றுகொண்டிருந்தனர்.

அந்த எளிய கஞ்சி கூட அன்று அந்த மக்களுக்கு கிடைத்திருக்கவில்லையென்றால், போர் பிரதேசத்தில் உயிரிழப்புகள் மேலும் அதிகரித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அந்த தேங்காய ஓட்டில் குடிக்கப்பட்ட கஞ்சிக்கு இலங்கையில் போர் சரித்திரத்தில் ஒரு இடமுள்ளது என்பதை மறுக்க முடியாது.

ஆனால், இன்று கடந்தகால நினைவுகள், நிகழ்வுகளை அடுத்த தலைமுறையினருக்கு அவர்களுக்கு புரியும் வகையில் எடுத்துச் சொல்வது என்னவோ தெய்வகுற்றம் அல்லது போர்க்குற்றம் போன்று பார்க்கப்படுகிறது. போரின் காயங்கள் மாறலாம் ஆனால் வடுக்கள் மாறாது என்பது புதிய கதையல்ல. ஒரு கோப்பை கஞ்சியைக் கூட தமது இன மக்களுக்கு தமிழர்களால் சுதந்திரமாக வழங்க முடியாது என்றால் அங்கு ஜனநாயகம் கேள்விக்குறியாகிறது.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியன்று தலைநகர் கொழும்பு எங்கும் கிரிபத் (பால் சோறு) வழங்கப்பட்டது. சிங்கள அமைப்புகள் தாமாக முன்வந்து போர் வெற்றியை கொண்டாடும் வகையில் பால் சோறு சமைத்து வீதியில் சென்றவர்களுக்கு எல்லாம் வழங்கினர். அந்த நேரத்தில் இந்த ஒரு கோப்பை கஞ்சிக்கு கூட வழியில்லாமல் பலர் உயிரிழந்தனர் என்பதை அவர் சிந்திக்க மறந்துவிடனர் அல்லது மறுத்துவிட்டனர்.

போர் வெற்றியை கொண்டாடும் வகையில் கிரிபத் வழங்குவதை நியாயப்படுத்த முடியுமென்றால், போரினால் பாதிக்கப்படவர்கள் உயிர் வாழ்வதற்கு அரிசி கஞ்சியே மூலாதாரமாக இருந்தது என்பதை அடுத்த தலைமுறையினருக்கு தெரியபப்டுத்துவதில் என்ன தவறு இருக்க முடியும்?

இன்று அந்த நினைவுகளை எடுத்துச் செல்வதற்கு கூட ஆங்காங்கே நீதிமன்ற தடை உத்தரவுகள் பெறப்படுகின்றன. இப்படியான செயற்பாடுகள் சமூக நல்லிணக்கத்திற்கு எப்படி உதவும் என்று தென்னிலங்கையில் எவரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை - ஒரு சிலரைத் தவிர.

நல்லிணக்கம் என்பது ஏட்டுச்சுரக்காயாக இருந்தால் அது உதவாது. அது கறி சமைக்கக்கூடிய வகையில் இருக்க வேண்டும். “நீத்தர் நினவு கூர்தல்” உலகெங்கும் பண்பாடு மற்றும் கலாச்சார ரீதியாக நிலவுகிறது. பிரித்தானியாவில் ஒவ்வொரு ஆண்டு முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்களில் உயிரிழந்தவர்களை நினைவுகூறும் வகையில் நிகழ்வுகள் இடம்பெற்று அங்கு அரசர் முதல் சாமானியவர் வரை அஞ்சலி செலுத்துவது நடைபெறுகிறது. ஆனால் இலங்கையில் போரில் இறந்தவர்களை நினைவுகூர்வதில் ஏனிந்த தடை. விடுதலைப் புலிகள் முற்றாக அழித்தொழிக்கப்பட்டனர் என்று மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் முழங்கியிருந்தார். பிறகு ஏன் அச்சம்?

பாரதியை ஒதுக்கிவிட்டு சமூக சிந்தனைகளை முன்னெடுக்க முடியாது. குறுகிய காலமே அவன் வாழ்ந்தாலும், அவர் கூறி சென்றவை எக்காலத்திற்கும் பொருத்தமானவை. சமூக அவலங்களை தட்டிக்கேட்டதில் பாரதிக்கு நிகர் யாருமில்லை. இறைவனையே கேள்விக்கு உட்படுத்தியவன் முண்டாசுக் கவிஞன்.

இன்றும் பல நாடுகளில் உழைக்கும் வர்க்கத்தினரின் பிரதான உணவாக கஞ்சியே உள்ளது. அந்த கஞ்சியை ஒரு குறியீடாக அளிப்பதற்கு தடை இருக்க முடியாது.

# இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் தொடர்பிலும் தமிழ் அரசுக் கட்சியின் வழக்கு விடயம் தொடர்பாகவும் அதிக அக்கறை செலுத்திய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**



14-05-2004 அன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் அவர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கும் இடையே விசேட சந்திப்பு ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பின்போது இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரின் அவசியம் பற்றியும் தூதுவர் அதிக அக்கறை செலுத்தியதாகவும் அத்துடடன் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தெரிவு மற்றும்கட்சி வழக்கு விடயம் தொடர்பிலும் கேட்றிந்து கொண்டார் என கலந்துரையாடலில் பங்கெடுத்த தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரையாடல்களிலிருந்து அறிந்து கொள்ளக்சகூடியதாக இருந்தது
ஒரு சந்தர்ப்பத்தில் தூதுவர் ஜூலி சங் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து உங்களைப் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் பொது மக்களும் மிகவும் கடினமான சூழலில் தறபோது நீங்கள் உள்ளீர்கள் என்பதனை ஏற்கின்றோம் என அமெரிக்கத் தூதுவர்தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வருகை தந்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் அவர்கள் இதன்போதே மேற்படி கருத்தை தெரிவித்தார்.

இச் சந்திப்பில் பொது வேட்பாளர் விடயத்தில் கூட்டமைப்பின் சார்பில் கலந்துகொண்ட மூவரும் மூன்று நிலைப்பாட்டில் கணப்பட்டுள்ளனர்.

வழக்கு விடயம் பிரஸ்தாபித்தபோது அதனை தனிப் பேசுவதே பொருத்தமானது என நாடாளுமன்ற உறுப்பினர் சிசிறதரன் பதிலளத்தார்.

இதேநேரம் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாஏர் விடயத்தில் முன்பு சரத் பொன்சேகா, சஜித் பிரேமதாஸா, மைத்திரி என வாக்களித்து ஏமாற்றமே அடைந்தோம். அதனால் பொது வேட்பாளர் வேண்டும். இதனை தமிழ் கட்சிகளை ஒருங்கிணைக்கும் களமாகவும் பயன்படுத்தலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்த அதேநேரம். பொது வேட்பாளர் விடயம் பொருத்தமற்ற ஒன்று என்பதே தனது நிலைப்பாடு என நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தபோதும் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மௌனம் காத்தார்.

இதற்கு பதிலளித்த ஜூலி சங் அவர்கள். "இதேநேரம் நில விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடயம், பொறுப்புக் கூறல், மனித உரிமை போன்ற விடயங்களில் நாங்கள் பல விடயங்களை அரசிற்கு சொன்னோம் அவர்கள் செய்வதாக இல்லை. மிகவும் கடினமான சூழலில் தறபோது நீங்கள் உள்ளீர்கள் என்பதனை ஏற்கின்றோம். இருப்பினும் நாம் தொடரந்தும் அழுத்தம் கொடுப்போம்" என பதிலளித்தார்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில்சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் பங்கேற்பு

**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திப்பதற்கு நேரம் வழங்குமாறு மன்னிப்புச் சபையின் கொழும்பு அலுவலகம் ஓரிரு மாதங்களுக்கு முன்னரே ஜனாதிபதி செயலகத்திடம் கோரியிருக்கின்ற போதிலும், அதற்கு இன்னமும் உரிய பதில் வழங்கப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.**

**---------------------------- நடராசா லோகதயாளன்**



சர்வதேச மன்னிப்புச் சபையின் (அம்னெஸ்டி இண்டர்நேஷனல்) செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள நினைவு நிகழ்வில் பங்குகொள்ளவுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் இலங்கை வந்துள்ளதோடு முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள மே 18 நினைவு தினத்திலும் கலந்துகொள்ளவுள்ளார்.

ஒரு வார பயணமாக 15-05-2024 தினம் இலங்கைக்கு வருகைதந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான வன்முறைகள் என்பன தொடர்பில் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதுடன், சர்வதேச அரங்கில் இலங்கை மீதான அழுத்தங்களையும் பிரயோகித்துவருகிறது.

அந்த வகையில் யுத்த முடிவின் 15 வருடப் பூர்த்தியையொட்டி லண்டனைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் வியாழக்கிழமை இலங்கைக்கு வருகைதந்துள்ளார்.

முள்ளிவய்காலில் சில முக்கிய சந்திப்புக்களை நடாத்துவதற்கு உத்தேசித்திருக்கும் அக்னெஸ் கலமார்ட், எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பில் ஊடகவியலாளர்களையும் சந்திக்கவுள்ளார்.

இதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திப்பதற்கு நேரம் வழங்குமாறு மன்னிப்புச் சபையின் கொழும்பு அலுவலகம் ஓரிரு மாதங்களுக்கு முன்னரே ஜனாதிபதி செயலகத்திடம் கோரியிருக்கின்ற போதிலும், அதற்கு இன்னமும் உரிய பதில் வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# முள்ளிவாய்க்கால் பேரவலம் (மே 18)

---

பாதுகாப்பு வலயமென்று பசப்பு வார்த்தைகூறி
பரந்து வாழ்ந்த எம் பண்பான மக்களை
முள்ளிவாய்க்கால் என்ற மரணப்பொறிக்கு வரச்செய்து
முழுக் கதையையும் முடித்துவைத்த நாளே மே 18
பதினைந்து ஆண்டுகள் பறந்தோடி விட்டாலும்
நித்தம் நித்தம் நினைவில் வரும்நாளே இந்நாள்
பாதுகாப்பென நம்பிய பதுங்குகுழிகள் சவக்குழியாகின
பாதகர் மருத்துவ மனைகளையும் பதம் பார்த்தனர்
காயப்பட்டவரும் காயம் ஆற்றியோரும் காற்றோடு கரைந்தனர்
கொத்துக் குண்டுகளையும் கந்தக எறிகணைகயையும் கொட்டி
கொத்துக் கொத்தாக எம்மக்களை கொன்றொழித்த நாள்
கை கால் இழந்தும் கட்டிய கணவனை இழந்தும்
பெற்ற பிள்ளையை இழந்து பிரியமான மனைவியை இழந்தும்
பேதலித்து நின்றனர் பெற்றோரும் உறவுகளும்
கொஞ்சி விளையாடிய குழந்தைகள் முதியவர்
குடும்பமாகக் கொல்லப்பட்ட கொடிய நாள்
வீர மங்கையரான எம் விவேகப் பெண்களை
சிங்கள மிருகங்கள் சின்னாபின்ன மாக்கியநாள்
சரணடைந்தோரையும் சக்தியற்று இருந்தோரையும்
இனவெறியர் இல்லாமல் ஆக்கிவிட்ட நாள்
எஞ்சிய மக்களை ஏமாற்றி அழைத்துச்சென்று
முட்கம்பி வேலிகளுள் முடக்கிய நாள்
வெள்ளைக் கொடியோடு போனஎம் வீரர்களை
வீணர்கள் வெட்டி வீழ்த்திய நாள்
வற்றிய முலையில் வாய் வைத்தபடி
வெந்துபோன வாலிபம் மாறாத தாயும் சேயும்
முழுமாதக் கற்பிணிகளை மூத்தோரை
பல்குழல் பீரங்கிகள் பதம்பார்த்த நாள்
சுடலை காணாத செத்த பிணங்கள்
நினைத்து நினைத்து நிலைகுலைந்த உறவுகள்
தாலாட்டுக் கேட்டுத் தூங்கிய சிறிசுகள்
ஒப்பாரி ஓசையுடன் ஓய்ந்துபோன நாள்
கொள்ளிக் குடமுமின்றி கொள்ளிவைக்க ஆளுமின்றி
குதறி எறியப்பட்ட குடும்ப உறவுகள்
ஐ.நா வரும் அமெரிக்கா வரும் இந்தியா வருமென
எதிர்பார்த்து ஏங்கிய மக்கள் எல்லோரையும்
கூட்டுச் சதிசெய்து கொன்றொழித்த கொடூரநாள்
சிதறுண்ட சீவன்கள் சின்னாபின்ன மாகியபடி
காரிருள் கடந்த காலை வேளையில்
நடைப்பிணங்களும் நடவாத பிணங்களுமே எஞ்சியிருந்தன
முள்ளிவாய்க்கால் முடிந்த முடிவல்ல ஆரம்பம்
மே 18 அழுவதற்கல்ல எழுவதற்கு
காகிதத்தில் இடம் உள்ளது கவிதை எழுத
இதயத்தில் வரிகள் இல்லை வலிகளைத் தவிர.

(2009 மே 18 இல் முள்ளிவாய்க்காலில் நடந்த பேரவலத்தின் பதினைந்தாம் ஆண்டு நிறைவையொட்டி எழுதப்பட்ட கவிதை.)

---

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்ட சர்வதேச தாதியர் தின நிகழ்வு!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தாதியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச தாதியர் தின நிகழ்வு 12-05-2024 அன்று, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தாதியர் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கலாநிதி த.சத்திய மூர்த்தி கலந்து கொண்டார்.

இதன் போது யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் முதல் தாதியர் சேவையினை ஆற்றிய அமரரின் திருவுருவ சிலைக்கான முதன்மை சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. பின்னர் இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இதன் போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கலாநிதி த.சத்தியமூர்த்தி கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் இப்போது 45 ஆயிரம் தாதியர்கள் கடமையில் இருக்கின்றார்கள். உலக வங்கியின் கணிப்பின்படி இலங்கையில் ஒரு லட்சம் பொதுமக்களுக்கு 240 தாதியர்கள்கடமையாற்றுகின்றார்கள்.

இதனை நாம் ஏனைய நாடுகளோடு ஒப்பீடு செய்தால் ஒரு லட்சம் பொது மக்களுக்கு அமெரிக்காவில் 1250 தாதியர்களும், அவுஸ்திரேலியாவில் 1080 தாதியர்களும் ஐக்கிய ராஜ்யத்தில் 920 தாதிர்களும், சிங்கப்பூரில் 620 தாதியர்களும் கடமையாற்றுகின்றார்கள்.

வளர்ந்து வரும் நாடுகளிலும் இலங்கை போன்று தாதியர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. குறைவான தாதியர் எண்ணிக்கையில் பூரண சேவையை வழங்குவதில் இலங்கை பெரும் சவால்களை எதிர்கொண்டிருக்கின்றது.

இலங்கையின் சுகாதார சேவை வளர்ச்சி அடைந்த (Developed Countries) நாடுகளின் சுகாதார சேவையை நோக்கி பயணிக்கின்றது. இருப்பினும் சுகாதார சேவைக்கான நிதி ஒதுக்கீடு, மனிதவளம் என்பன குறைவாகவே காணப்படு கின்றது. எதிர்காலத்தில் தாதியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு அவர்களுக்கு குறிப்பிட்ட அளவு கடமைகளும் ஓய்வும் வழங்கப்பட வேண்டும்.



தற்போதைய நிலையில் பல வைத்திய சாலைகளில் அவர்களுக்கான விடுப்பு வழங்கப்படாமல் கட்டாய கடமைக்கு அமர்த்த படுகின்றார்கள். அர்ப்பணிப் போடு செய்யப்பட்ட பல சம்பவங்கள் ஏதும் ஊடகங்களில் கிரமமாக வெளிவர வில்லை. ஏதாவது ஒரு சம்பவத்துக்கு பின்னர் ஒட்டுமொத்த தாதியர்களும் எதிரான கருத்துகளும் பொதுமக்களின் மனநிலையும் அவர்களுக்கு நிச்சயம் மனச்சோர்வை ஏற்படுத்தி இருக்கும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை பொறுத்தவரையில் 680 தாதியர்கள் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். 1350 படுக்கைகளை கொண்ட இந்த வைத்தியசாலையில் தினசரி அனுமதிக்கப்படுகின்ற நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கும், பல்வேறு கிளினிக் பிரிவுகளில் சிகிச்சை பெறும் 2500 மேற்பட்ட நோயாளிகள், மற்றும் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கும் என சேவைகளை வழங்க வேண்டிய கட்டாய நிலையில் இருக்கின்றோம்.

அண்மைய காலங்களில் வைத்தியசாலைகளில் காணப் படுகின்ற குறைபாடுகள் மற்றும் மற்றும் பிரச்சனைகள் ஊடகங்களின் ஊடாக வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. இலங்கையில் சுகாதார சேவை மேலும் வலுவடைய அதிகளவு நிதி ஒதுக்கீடும் அதிகரிக்கப்பட்ட ஆளணியும் போதிய பயிற்சியும் முக்கியமானது என்றார்.







இதில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தாதியர்கள், பணி நிலை குழாமினர், பதவி நிலை உயர் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# நெல்லியடி நகரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி!






முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை வாரம் ஆரம்பத்தை முன்னிட்டு இலங்கை தமிழரசு கட்சியினரால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு 11-05-2024 அன்று காலை 9:30 மணியளவில் இலங்கை தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

நெல்லியடி பேருந்து நிலையத்தின் அருகில் முள்ளிவாயக்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு பயணிகள், வர்த்தகர்கள், பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை தமிழரசு கட்சி முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன், தமிழரசு கட்சி பருத்தித்துறை தொகுதி நிர்வாகிளான பிரசாத், தயாபரன், உட்பட தமிழரசு கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்திற்கு முன்பாக பசுக்கொலைக்கு ஏதிராக கவனயீர்ப்பு போராட்டம்




இலங்கை சிவசேனை சிவத் தொண்டர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் பசுக்கொலைக்கு ஏதிராக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நல்லை ஆதீனத்திற்கு முன்பாக 11-05-2024 அன்று காலை 09.30 மணிக்கு இலங்கை சிவசேனை தலைவர் மூதறிஞர் மறவன் புலவு க.சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்றது.

காசாவுக்கு ஒரு நீதியா? இந்துக்களுக்கு இன்னொரு நீதியா? நிறைவேற்று நிறைவேற்று பசுவதைதடைச் சட்டத்தினை நிறைவேற்று, இலங்கை சிவபூமி முகமதியரே புனித சின்னத்தினை சிதைக்காதீர், பொலிசாரே, பொலிசாரே பசுத்திருடர்களை கைது செய், பசுக்கள் மீதும் இறை தூதர்களும், கைவைத்தால் அழிவாய், அறுக்காதே அறுக்காதே கோமாதாவினை அறுக்காதே, கோமாதாவினை வெட்டி இந்து சமயத்தவர்களின் மனதில் ஈட்டிபாய்ச்சாதே? என்ற பாததைகள் ஏந்திய வண்ணம் கோசங்கள் இட்டு தமது எதிர்ப்பு போட்டத்தினை முன்னெடுத்தனர்.



இவ் கவனயீர்ப்பு போராட்டத்தில் தமது ஆதரவினை வழங்க சிவபூமி அறக்கட்டளை தலைவரும், தெல்லிப் பளை துர்க்கா தேவஸ்தான தலைவரும் ஆகிய கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ்ப்பாணம் மத்தியஸ்தான நாகவிகாரை விகாராதிபதி விமலரத்தன தேரர், இந்து சமயப்பேரவையின் தலைவர் சக்தி கீரிவன் மற்றும் இலங்கை சிவசேனை சிவத்தொண்டர்கள் பலரும் கலந்து கொண்டு தமது பசுக்கொலைக்கு ஏதிராக தமது ஆதரவினை வழங்கியுள்ளனர்.

# காரைக்கால் திண்ம கழிவு சேகரிக்கும் நிலைய விவகாரம்

## ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் ஆராய்ந்து நியாயமான தீர்வு வழங்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு!



மக்களின் சுகாதார நலன்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் காரைக்கால் திண்ம கழிவு சேகரிக்கும் நிலையத்திற்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நிலமைகள் தொடர்பில் துறைசார் அதிகாரிகளின் பிரசன்னத்துடன் ஆராய்ந்தறிந்துகொண்டார்.

இணுவில் காரைக்காலில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபையின் திண்ம கழிவுகளை சேகரிக்கும் நிலையத்தில், கடந்த திங்கட்கிழமை இரவு திடீரென சேகரித்து வைக்கப்பட்டிருந்த கழிவுகள் தீ பிடித்து எரிந்துள்ளன.

இதன்காரணமாக குறித்த திண்ம கழிவுகளை சேகரிக்கும் நிலையத்தினால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டு உள்ளதாகவும் அதனால், அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டு அதற்கான தீர்வை பெற்றுத்தருமாறு கோரி யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டவரப்பட்டது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து 11.05.2024 அன்று குறித்த பகுதிக்கு நேரடி கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் அதிகாரிகளின் பிரசன்னத்துடன் நிலமைகளை ஆராய்ந்துள்ளதுடன் அது குறித்து நடைபெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் குறித்த பிரச்சினை கவனத்தில் எடுக்கப்பட்டு நியாயமான தீர்வு காணப்படும் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பு. கஜிந்தன்

# சாவகச்சேரியில் மரம் கடத்தல்

அனுமதியின்றி சட்டவிரோதமாக டிப்பர் வாகனத்தில் கடத்தப்பட்ட சுமார் முப்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான பாலை மரக் குற்றிகள் 12-05-2024 ஞாயிற்றுக்கிழமை காலை 4.30 மணியளவில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

புத்தூர் வீதி ஊடாக மணலுக்குள் மறைத்துக் கடத்தப்பட்ட சுமார் 150 மரக்குற்றிகளே சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகம்புளியடிச் சந்திப் பகுதியில் வைத்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது கடமையில் இருந்த பொலிஸாருக்கு மரக்கடத்தல்காரர்கள் ஒரு இலட்சம் ரூபாய் இலஞ்சம் வழங்கிய போதிலும் பொலிஸார் அதனை வாங்க மறுத்த நிலையில் கடத்தல்காரர்கள் டிப்பர் வாகனத்தையும் - மரங்களையும் கைவிட்டு விட்டு தப்பித்துச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன் - தப்பி ஓடிய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

# வடக்கில் வீதி ஒழுக்கத்தை பேணுவதற்கு பொலிஸார் பல புதிய திட்டங்களை ஆரம்பிப்பு – வடக்கு சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்




வடமாகாணத்தில் வீதி ஒழுக்கத்தை பேணுவதற்கு பொலிஸார் பல



புதிய செயற்திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. திலக் சி.ஏ. தனபால தெரிவித்தார்.

அதன்படி, ஓட்டுநர்கள், வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அடையாளம் காணப்பட்ட இடங்களில் புதிய போக்குவரத்து அறிகுறி பலகைகளை நிறுவுதல், வாகன நிறுத்தங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல், போக்குவரத்து விதிகளை மீறுபவர்களுக்கு அபராதம் விதித்தல் போன்ற பல நடவடிக்கைகள் ஒரே நேரத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

வடமாகாணத்தை அதிகபட்சமாக வீதி ஒழுக்கத்தை பேணும் மாகாணமாக மாற்றுவதே பொலிஸாரின் நோக்கமாகும் என வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.



# கிளிநொச்சியில் மாற்றுத் திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சனைகள் தொடர்பான கலந்துரையாடல்!

மாற்றுத் திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சனைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் ஆரம்பமாகியது.

இயலாமை உடைய நபர்கள் (மாற்றுத் திறனாளிகள்) எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சனைகள், தற்பொழுது காணப்படும் வாய்ப்புக்கள் மற்றும் அவற்றை உரிய முறையில் நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் முன்மொழிவுகள் பற்றிய தகவல்களைக் கலந்துரையாடுவதற்கான விசேட செயலமர்வாக குறித்த அமர்வு இடம்பெறுகிறது.

13-05-2024 அன்று காலை 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த கலந்துரையாடல் ஆரம்பமானது.

மாற்றுத்திறனாளிகள் பற்றிய பாராளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையில் அமர்வு இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் மதுரவிதாரண பதில் அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், மனித உரிமைகள் அமைப்பு சார்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பலர கலந்து கொண்டனர்.

இதன்போது கலந்துரையாடலில் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான புள்ளிவிபரங்கள் தொடர்பில் அமைச்சர் தெரிவித்தார்.



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாம் நாளான 14.05.2024 கிளிநொச்சி சந்தை வளாகத்தில் கஞ்சி வழங்கப்பட்டது



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாம் நாளான 14.05.2024 அன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பொது சந்தை வளாகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இதே வேளை, கிளிநொச்சி வாடகை வாகன உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கனகபுரம் வீதியில் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.



# யாழ்ப்பாணம் காக்கைதீவு பகுதியில் வீதியருகே எரிக்கப்பட்ட கழிவு பொருட்கள் – பயணிகள் சிரமம்!

யாழ்ப்பாணம் காக்கைதீவு மீன் சந்தையில் இருந்து சுமார் 150 மீற்றர்கள் தொலைவில் வீதியோரத்தில் கழிவுப் பொருட்கள் தீயிட்டு எரிக்கப்பட்டது. இந்நிலையில் வீதியில் பயணம் செய்கின்றவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியதை அவதானிக்க முடிந்தது.

இனந்தெரியாத நபர்கள் இரவு சனப் புழக்கமற்ற நேரத்தில், வைத்தியசாலை கழிவுகள், வியாபார நிலையங்களின் கழிவுகள், வீட்டுக்கு கழிவுகள் உள்ளிட்ட பல கழிவுப் பொருட்களை வீதியோரங்களில் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். இது அந்தப் பகுதியில் வழக்கமாகி விட்டது. அந்த கழிவுகளால் வீதியெங்கும் துர்நாற்றம் வீசுகின்றது.

இந்நிலையில் 14-05-2024 அன்றையதினம் அங்கு வந்த யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர்கள் அந்த கழிவுப் பொருட்கள் மீது அவ்விடத்தில் வைத்தே தீமூட்டியுள்ளனர். இதனால் வழி மாசடைந்ததுடன் வீதியால் செல்கின்ற பயணிகள் அசௌகரியங்களையும் எதிர்நோக்கினர். அத்துடன் புகைமண்டலம் வீதியில் பரவியதால் எதிரே வருகின்ற வாகனங்கள் தெரியாமல் வீதி விபத்து ஏற்படக்கூடிய அபாயகரமான சூழலும் அங்கு காணப்பட்டது.

வீடுகளில் நீர் தேங்கக் கூடிய சிறிய கொள்கலன்கள் இருந்தாலும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்ற பொது சுகாதார பரிசோதகர்கள், வீதியில் உள்ள இந்த கழிவுகளை கண்டும் காணாத போலே, தங்களுக்கும் அதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாதது போல செயற்படுகின்றனர். குறித்த பகுதியில் கழிவுப் பொருட்களை போடுபவர்களை கண்டுபிடித்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களது கோரிக்கையாக இருக்கிறது.




# தமிழினப் படுகொலையை நினைவு கூர்ந்து யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் குருதிக் கொடை!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவேந்தி குருதிக் கொடை நிகழ்வு (14.05.2024) அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் கட்டடத் தொகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், விரிவுரையாளர்கள் என பலரும் குருதிக்கொடை வழங்கி வரும் நிலையில் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்க முடியும் என்பதோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழக மாணவர்களும் குருதிக் கொடையில் உணர்வுடன் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# மட்டக்களப்பில் பஸ்வண்டி சாரதி நடத்துனர் மீது தனியார் போக்குவரத்து பஸ்வண்டி சாரதி மேற்கொண்ட தாக்குதல் சாரதி நடத்துனர் படுகாயம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நகர் தனியார் பேருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் புதன்கிழமை (15) இலங்கை போக்குவரத்து பஸ்வண்டி சாரதி நடத்துனர் மீது தனியார் போக்குவரத்து சாரதி மேற்கொண்ட தாக்குதல் சாரதி நடத்துனர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்ப ட்டுள்ளதுடன் தாக்குதலை மேற்கொண்ட சாரதி பஸ் வண்டியுடன் தப்பி ஓட்டம் நடுத்துனரை கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.




குறித்த பஸ்தரிப்பு நிலையத்தில் சம்பவதினமான பகல் 11.10 மணியளவில் பிரயாணிகளை ஏற்றுவதற்காக தனியார் பஸ்வண்டி தரித்து நின்றுள்ளது. இதன் போது பின்னால் கல்முனையை நோக்கி பிரயாணித்த மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சாலைக்கான பஸ்வண்டி சாரதி பஸ்தரிப்பு நிலையத்தில் நிறுத்துவதற்காக அங்கு தரித்து நின்ற தனியார் பஸ்வண்டி சாரதியை பஸ்வண்டியை கொஞ்சம் முன்னோக்கி நகர்த்துமாறு தெரிவித்துள்ளார்.



இதனையடுத்து தனியார் பஸ்வண்டி சாரதி கோபமடைந்து பஸ்வண்டியில் இருந்து இறங்கி இலங்கை போக்குவரத்து பஸ்வண்டி சாரதி, நடத்துனர் மீதும் தாக்குதலை மேற்கொண்டதில் சாரதி, நடத்துனர் படுகாயமடைந்ததையடுத்து அங்கிருந்து தனியார் பஸ்வண்டி சாரதி பஸ்வண்டியுடன் தப்பி ஓடியதையடுத்து இதில் காயமடைநத இருவரையும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் தனியார் பஸ்வண்டி நடத்துனரை கைது செய்துள்ளதாகவும் தப்பி ஓடிய சாரதியை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசர் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விடுதலைப் புலிகள் மீதான தடை அநீதியானது! உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் கண்டனம்



விடுதலைப்புலிகள் இயக்கம் மீது தடையை நீடிப்பது எந்த வகையிலும் நீதியின்பால் பட்டதல்ல. அநீதியான இந்தத் தடை விதிப்பை வன்மையாகக் கண்டிப்பமாக உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

இந்திய அரசினால் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதாக அறிந்துள்ளது இதனை கண்டித்து உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் புதன்கிழமை (15) ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதாக இந்திய அரசின் உள்துறை அறிவித்துள்ளது. "2009ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற போர் முடிவுக்கு வந்த பிறகும், விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழத் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடவில்லை. அதற்கான ஆதரவு மற்றும் நிதித் திரட்டல் வேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

விடுதலைப்புலிகளின் இயக்கம் தமிழ்நாட்டில் இரகசியமாகச் செயல்படுகிறது. அனைத்துத் தமிழர்களுக்குமான தனி நாடு என்ற கோரிக்கையில் இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டையும் சேர்த்துள்ளது. இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு புலிகளின் நோக்கம் எதிரானது மட்டுமல்ல, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது."

ஒரே பொய்யைத் திரும்பத் திரும்ப கூறுவதின் மூலம் அதை மெய்யாக்கிவிடும் முயற்சியில் கடந்தகாலங்களில் பதவியிலிருந்த இந்திய அரசுகளும், இப்போது பதவியில் இருக்கும் இந்திய அரசும் செயல்பட்டு வருகின்றன.

இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு-கிழக்குப் பகுதி மட்டுமே அடங்கிய தமிழீழ கோரிக்கையை தமிழர் விடுதலை கூட்டணி போன்ற அறவழிப் போராட்டங்கள் நடத்திய அரசியல் கட்சிகளும், ஆயுதப் போராட்டம் நடத்திய போராளிகள் அமைப்புகளும் முன்வைத்தனவே தவிர, ஒருபோதும் இந்தியாவில் உள்ள எந்த பகுதியின் மீது அவர்கள் உரிமை கொண்டாடவில்லை என்பது உலகறிந்த உண்மையாகும்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கோ, இறையாண்மைக்கோ எதிராக ஒருபோதும் விடுதலைப்புலிகள் செயல்பட்டதில்லை. மேலும் இந்தியாவின் பகை நாடுகளுடன் எந்த வகையான உறவையும் விடுதலைப்புலிகள் வைத்துக்கொள்ளவில்லை. ஆனால், சிங்கள அரசு இந்தியாவின் பகை நாடுகளுடன் நெருங்கி உறவாடி, அந்நாடுகள் இலங்கையில் இந்தியாவுக்கு எதிரான தளங்களை அமைப்பதற்குத் துணையாக நிற்கிறது என்ற உண்மையைக்கூட இந்திய அரசு எண்ணிப்பார்க்க தவறிவிட்டது.

இந்த உண்மையை உணர்ந்திருந்த காரணத்தினால்தான் இந்தியத் தலைமையமைச்சராக இந்திராகாந்தி அவர்கள் இருந்தபோது, சிங்கள அரசுக்கும், ஈழத் தமிழர் தலைவர்களுக்குமிடையே பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வுகாண இந்தியாவின் சிறப்புத் தூதுவராக ஜி. பார்த்தசாரதி அவர்களை அனுப்பினார்.

அந்தப் பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்ட உடன்பாட்டினை செயல்படுத்தாமல் சிங்கள அரசு காலம் கடத்தி ஏமாற்றுவதற்கு முயற்சி செய்தபோது, ஈழப் போராளிகளை இந்தியாவுக்கு அழைத்து இந்திய இராணுவ முகாம்களிலேயே அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டதோடு, ஆயுதங்களும் வழங்கப்பட்டு அவர்கள் இலங்கை திரும்பித் தங்களது போராட்டத்தைத் தொடர்ந்தார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.



இந்த உண்மையைச் சிறிதும் உணராமல் தலைமையமைச்சர் ரஜீவ்காந்தி சிங்கள அரசுடன் உடன்பாடு செய்து, அதன்படி போராளிகளின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்வதற்கு இந்திய அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பினார் என்பதும், அந்த உடன்பாடு படுதோல்வியடைந்தது என்பதும் அனைவரும் அறிந்ததே ஆகும்.

1991ஆம் ஆண்டில் ரஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட போது, விடுதலைப்புலிகள் மீது பழி சுமத்தப்பட்டு அவர்களின் இயக்கத்திற்கு முதல் தடை விதிக்கப்பட்டது. அது இன்றுவரை தொடர்கிறது.

ரஜீவ்காந்தியின் கொலை மற்றும் அதன் பின்னணியில் வகுக்கப்பட்ட சதித்திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக இந்திய அரசினால் நீதிபதி ஜெயின் ஆணையம் அமைக்கப்பட்டது. இராசீவ் கொலையைப் பற்றி விசாரித்த சி.பி.ஐ. அதிகாரி கார்த்திகேயன் செய்த தவறுகளை ஆணையம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியது. அதுமட்டுமல்ல, சந்திராசாமி உள்பட 21 நபர்கள் குறித்து தனது ஐயப்பாடுகளை பதிவு செய்து அவர்களையும் விசாரிக்கவேண்டும் என்றும் கூறியது.

தலைமையமைச்சராக பி.வி. நரசிம்மராவ் இருந்தபோது அமைக்கப்பட்ட ஜெயின் ஆணையம், தலைமையமைச்சராக வாஜ்பாய் பொறுப்பேற்றப் பிறகு அவரின் அரசிடம் ஜெயின் ஆணையம் தனது இறுதி அறிக்கையை அளித்தது. அந்த அறிக்கையில் குறிப்பிட்டதற்கிணங்க இராசீவ் கொலைப் பற்றி மீண்டும் முழுமையாக புலனாய்வு செய்வதற்காக 1998ஆம் ஆண்டு பல்நோக்குப் புலனாய்வுக் குழு ஒன்றினை அப்போதைய உள்துறை அமைச்சர் அத்வானி அமைத்தார்.

பல்நோக்கு விசாரணைக்குழு 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் தனது புலனாய்வை இறுதி செய்து அறிக்கை அளிக்கத் தவறிவிட்டது. ஜெயின் ஆணையம் சுட்டிக்காட்டிய நபர்கள் யாரையும் தனது விசாரணை வளையத்திற்குள் பல்நோக்கு விசாரணைக்குழு கொண்டுவந்து விசாரிக்கவே இல்லை. காலம் கடத்திய இந்த புலனாய்வுக் குழு இறுதியில் கலைக்கப்பட்டுவிட்டது.

ரஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 26 பேர்களும் 31 ஆண்டு கால சட்டபோராட்டத்திற்குப் பின்னால் முழுமையாக விடுவிக்கப்பட்டுவிட்டார்கள். இக்கொலையில் சம்பந்தப்பட்ட உண்மையான குற்றவாளிகள் தப்பிவிட்டார்கள் எனக் கூறுவதைவிட, தப்பிக்க விடப்பட்டார்கள் என்று கூறுவதே சரியானதாகும்.

ரஜீவ் கொலையைக் காரணமாகக் காட்டித்தான் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டது. அந்தக் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்ட பிறகும், உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட பல்நோக்குப் புலனாய்வுக் குழு 20 ஆண்டு காலமாக யாரையும் கைது செய்யாமல் காலங் கடத்தி இறுதியில் கலைக்கப்பட்டுவிட்டது என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# திருகோணமலையில் கஞ்சி வழங்கியது தொடர்பாக கைதுக்கு வன்மையான கண்டனம்

## கிழக்கு பல்கலைக்கழக கலை கலாச்சார பிரிவு மாணவர் ஒன்றியம்

கனகராசா சரவணன்

திருகோணமலை சேனையூரில் பகுதியில் முள்ளிவாய்கால் கஞ்சியை பகிர்ந்து முள்ளிவாய்க்கால் இனபடுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவு கூர்ந்தவர்களை அநாகரிகமான முறையில் கைது செய்த இலங்கை பொலிசாரின் அத்துமீறலை கிழக்கு பல்கலைக்கழக கலை கலாச்சார பிரிவு மாணவர் ஒன்றியம் கடும் கண்டனம் தெரிவிப்பு.

முள்ளிவாக்கால் கஞ்சி வழங்கிய குற்றச்சாட்டில் திருகோணமலையில் கைது செய்யப்பட சம்பவத்தை கண்டித்து கிழக்கு பல்கலைக்கழக கலை கலாச்சார பிரிவு மாணவர் ஒன்றியம் ஊடாக அறிக்கை ஒன்றை 15-05-2024 புதன்கிழமை வெளியிட்டுள்ளது.

உரிமையை வேண்டி போராடிய ஒரு இனத்தின் மீது சர்வதேச நாடுகளை தவறாக வனிநடாத்திய இலங்கை அரசால் தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட பாரிய இனவழிப்பினால் இறுதி எட்டு மாதங்களில் 146679 க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

அந்தவகையில் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை கொண்டு கொன்றொழிக்கப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள், பொதுமக்களுக்கு 15 ஆண்டுகள் நடந்து நீதி வழங்கப்படாத நிலையில் தமிழரின் உரிமைகள் இலங்கை அரசினாலும் அதன் ஆதரவில் இருக்கும் பெரும்பான்மை சமூகத்தினாலும் தொடர்ந்து மறுக்கப்பட்டும் பறிக்கப்பட்டும் வருகின்றது.

இலங்கை அரசினாலும் படைகளினாலும் கொன்று குவிக்கப்பட்ட எமது மக்களை நினைவுகூறும் உரிமையிலும் இலங்கை அரசாங்கம் கைவைத்துள்ளது. முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களை நினைவுகூறும் முகமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) சம்பூர் சேனையூர் புவனகணபதி ஆலையத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டது.



அதில் பங்கேற்றி கஞ்சி வழங்கிய குற்றச்சாட்டில் சமூகசெயற்பாட்டளரான 40 வயதுடைய கமலேஸ்வரன் விஜிதா, 40 வயதான செல்வவினோத்குமார் சுஜானி, பிரதேச சபை முன்னாள் உறுப்பினரான 43 வயதுடைய நவரெட்ணராஜா. ஹரிஹரகுமார், கிழக்கு பல்கலைக்கழக கலைப்பிரிவுக்கு தெரிவாகியுள்ள 22 வயதுடைய கமலேஸ்வரன் தேமிலா, ஆகியோர் கைது செய்யப்பட்டனர் இதனை வன்மையாக கண்டிக்கின்றோம். அதேவேளை உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

அதேவேளை தமிழர்களின் நினைவேந்தல் உரிமையைக்கூட மறுக்கும் இலங்கை அரசை சர்வதேசம் கண்டிப்பதுடன் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய அழுத்தம் கொடுக்கவேண்டும் என கேட்டுக் கொள்வதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனடிய செய்திகள் Canadian News

# மொன்றியல் நகரில் பாவலர் பவானியின் (பவித்திரா) "வியன்களம்" கவிதைநூல் அறிமுக விழா




கடந்த சனிக்கிழமை 11.05.2024 அன்று மொன்றியல் நகரில் இயங்கும் கல்விச்சாலையான ஆத்மஜோதி வகுப்பரங்கில், நூற்றுக் கணக்கானஇலக்கிய ஆர்வலர்கள் மத்தியில், "வியன்களம்" போர்க்காலக் கவிதைத் தொகுப்பு நூல் மிகவும் சிறப்பாக அறிமுகமாகி, வருகை தந்தவர்கள் கரங்களில் அலங்கரிக்கப்பட்டது.

ஆத்மஜோதி ஆன்மீகக் கல்வி நிறுவனத்தின் நிர்வாகப்பொறுப்பாளர்களில் ஒருவராகிய. உதயகுமார் அவர்களின் தலைமையில் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

வழமைபோல் சிறப்பு விருந்தினர்கள் சிலர் மங்கல விளக்கேற்றவும், ஆத்மஜோதி பள்ளி மாணவர்கள் இறைவணக்கம், தாய்மொழி வாழ்த்துப் பாடல்கள் ஆகியவற்றை மிகவும் இனிமையாகப் பாடி அறிமுக விழாவைப் பக்திக் சூழலுக்குக் கொண்டு வந்தனர்.

பாடுவதில் பயிற்சி பெற்ற பண்ணிசை மாணவர்களுக்கு எல்லோரும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துக் கூறினர்.

வரவேற்புரையையும், தலைமையுரையையும் திரு. உதயகுமார் தமிழர் பண்பாட்டிற்கமையச் செவ்வனே நிகழ்த்தினார். கவிஞர் பவித்திரா (பவானி) அவர்களின் கவிபுனையும் ஆற்றலையும், தமிழ் மேல் கொண்ட காதலையும் உணர்வு பூர்வமாக இரசித்து, வாழ்த்திச் சபையோரை உற்சாகப்படுத்தினார்.

தொடர்ந்து முதலாவதாக, எழுத்துலகில் எல்லோருக்கும் நன்கு அறிமுகமான தமிழன்பரும், கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் நிறுவனருமான கே.ரி.சண் முகராஜா (வீணைமைந்தன்) அவர்கள் "வியன்களம்" நூல்பற்றி மிகவும் விரிவானதொரு உரையை வழங்கிச் சபையோரை வியப்புக்காளாக்கினார். உணர்ச்சி மயமாக்கினார். "போர்க் கால இலக்கியங்கள்" என்னும் புதிய தமிழ் வரவுக்குக் கவிஞர் - பவித்திராவின் இலக்கியப் பங்களிப்புப் பற்றி வியந்து விபரித்தார். பல ஆதாரங்களைத் தொகுத்தளித்தார்.

அதுபோன்று இரண்டாவது விமர்சன ஆய்வாக முன்னாள் ஆசிரியை உமாதேவி சிவதாசன் அவர்கள், நூலில் பொதிந்துள்ள பாடல்கள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றின் இலக்கிய, பொருள், சொல் நயங்களை மிகவும் தெளிவாக எடுத்து விளக்கினார். அவரது ஆழமான ஆய்வும், விளக்கமும் "வியன்களம்" நூலை வாங்கி வாசிக்கத் தூண்டும் வண்ணம் சிறப்பாக அமைந்திருந்தன.

நிகழ்ச்சியில் கலந்து நூலின் கவிதை பாடிய - வாசித்த ஆத்மஜோதி நிறுவனத் தலைவரான திரு. சசிகுமார் கிருஷ்ணா அவர்கள் தனதுரையில் தன்னைத் தூங்க விடாமல் வாசிக்க வைத்த "வியன்களம்" கவிதைப் பக்கங்களை நயம்பட விளக்கினார்.

இறுதியாக நுலாசிரியை திருமதி. பவானி தர்மகுலசிங்கம் (பவித்திரா) அவர்கள் ஏற்புரையை வழங்கியதுடன், நிகழ்ச்சியை நடத்துவதற்கு விழா மண்டபத்தை நல்கியதுடன், தனக்கு உதவியாக முன்னின்று, எல்லாவற்றையும் நடத்திய ஆத்மஜோதி தமிழிணையத்தினருக்குத் தனது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.







நிறைவாக, இரவிச்சந்திரா தவராஜா அவர்களது நன்றியுரையுடன் விழாவானது முடிவுக்கு வந்தது. வருகை தந்திருந்த அனைவரும் சிறப்பான விழாவொன்றில் தமது நேரத்தைச் செலவிட்ட திருப்தியுடனும், மகிழ்வுடனும் விடைபெற்றுச் சென்றனர்.






Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1100

## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

### கொக்குவில், யாழ்ப்பாணம்

மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தோடு தொடர்புடைய பக்தர்கள் இக்காலப்பகுதியில் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வந்தனர். திருப்பணிவேலைகளுக்காக அமைக்கப்பட்ட நித்தியபரிபாலனக்குழுவினர், உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் நிதிசேகரித்து உள்வீதி, நிலவேலை, உள்வீதிச்சுவர்பூச்சுவேலைகள், உள்வீதி வடக்குப்பக்க இரண்டாவது கொட்டகை, சகடைக்கொட்டகை ஆகிய திருப்பணிகளை நிறைவேற்றினர். மீண்டும் பல்வேறு பணிகளை நிறைவேற்றும்பொருட்டு 1986 ஆம் ஆண்டு திரு. இ. பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகக் கொண்ட தர்மகர்த்தாசபை அமைக்கப்பட்டது.

1986 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தர்மகர்த்தாசபை, பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றும்பொருட்டு அமைக்கப்பட்டது. இவ்வாலயத்திலே அக்கறையும், ஆர்வமும் கொண்ட பொதுமக்களின் வேண்டுகோளுக்கமையவே தர்மகர்த்தாசபை மீளத் தெரிவுசெய்யப்பட்டது. குறிப்பாக ஆலய நிர்வாகம் சிறப்பாக நடைபெறவேண்டும் என்பது இச்சபையின் அடிப்படை நோக்கமாகக் காணப்பட்டது. அத்தோடு ஆலயத்திற்குரிய சொத்துக்களை நல்ல முறையில் பேணுவதும் இச்சபையின் கடமைகளுள் ஒன்றாக வரையறுக்கப்பட்டது.

ஆலய வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு காலத்திற்குக் காலம் பல்வேறு பெயர்களில், சபைகள் தெரிவு செய்யப்படுவது பொதுவழக்காகக் காணப்படுகின்றது. ஆனால் ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையாகக் காணப்படும் வழிபடுவோரது நலன்களைக் கருத்தில் கொண்டு, வழிபடுவோர் சபையொன்றும் 1986 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இச் சபையின் தலைவராக திரு. இ. காசிநாதன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். இச்சபை பல்வேறு நெறிமுறைகளைக் கருத்தில் கொண்டு இயங்கியது.

இவ்வாறு படிமுறையாக வளாச்சியடைந்து வந்த மஞ்சவனப்பதி ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகள், 1987 ஆம் ஆண்டு இடம் பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாகத் தடைப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் காரணமாக, ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்திலே தஞ்சமடைந்தனர். இதே ஆண்டு மார்கழிமாத நடுப்பகுதிவரை ஆலயத்தின் நித்திய நைமித்திய பூசைகள் தடைப்பட்டாலும், பின்னர் நிலமையில் மாற்றம் ஏற்றபட்டது. அகதிகளாக வந்த மக்களுக்கு உணவும், உறைவிடமும் வழங்குவதில் தர்மகர்த்தாசபை, வழிபடுவோர் சபை ஆகியவற்றுடன் இணைந்து சைவ இளைஞர்களும் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர்.

அசம்பாவிதங்களின் பின் ஆலயத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1988 ஆம் ஆண்டு ஆலய மண்டபத்தில் திரு. சி. காசிநாதன் அவர்கள் தலைமையில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. சு. சண்முகநாதன் அவர்கள் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டமொன்று இடம்பெற்றது. இவர்களது ஆலோசனையின் பிரகாரம், நித்திய பூசைகளை மேற்பார்வை செய்வதற்காக ஐந்துபேர் கொண்ட இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் இதே ஆண்டு மகாசபை கூடி திரு. இ. பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகக் கொண்ட தர்மகர்த்தா சபை மீண்டும் அமைக்கப்பட்டது.

இச்சபையின் ஆலோசனைப்படி சில தற்காலிக நியமனங்கள் ஆலயத்திலே மேற்கொள்ளப்பட்டது. 1988 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஆலயத்தின் நித்திய, பூசைகளைச் செய்வதற்காக சிவஸ்ரீ. கு. பாலசுப்ரமணியக் குருக்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார். இவரைத்தொடர்ந்து இதேயாண்டு குட்டி ஐயர் என்று அழைக்கப்படும் சிவஸ்ரீ. பா. சண்முகராஜக்குருக்கள், ஆலய நித்திய பூசைகளைச் செய்வதற்குத் தற்காலிகமாக தர்மகர்த்தா சபையினால் நியமிக்கப்பட்டார். மகோற்சவ விழாவை சிவஸ்ரீ.க.குகதாசக் குருக்கள் செய்து வந்துள்ளார். இவர் தலைமையில் ஆலயத்தில் பாலஸ்தாபனமும் இடம்பெற்றது.

மீண்டும் ஆலயத்தின் புனருத்தாரண திருப்பணிகளை நிறைவேற்றுவதற்கு உதவியாக, இருப்தியொருபேர் கொண்ட திருப்பணிச் சபையினை தர்மகர்த்தா சபை நியமித்தது. திருப்பணிச்சபையும், தர்மகர்த்தா சபையும் இணைந்து திருப்பணிவேலைகளை நிறைவேற்றின. திருப்பணி வேலைகளுக்கான நிதியை உள்ளூர் மற்றும் வெளிநாடுகளிலுள்ள முருகபக்தர்கள் மனமுவந்து வழங்கியுள்ளனர்.

கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தில் புதிதாக விக்கிரகங்கள் நிறுவப்பட்டு அவற்றிற்கான கோயில்களும் அமைக்கப்பட்டன. திரு. சி. குமாரசாமி குடும்பத்தினரால் மகாலட்சுமி சிலாவிக்கிரகம் செய்யப்பட்டு கோயிலும் அமைக்கப்பட்டது. திரு. ச.சந. திரமௌலீசன் குடும்பம், திருமதி. நடராசா பவளம் குடும்பம் மற்றும் திரு. ச. லிங்கநாதன் குடும்பம் ஆகியோர் இணைந்து, நவக்கிரக மண்டபத்தினையும் அவற்றிற்குரிய சிலா விக்கிரகங்களையும் நிறுவ உதவினர்.

திரு. மதியாபரணம் குடும்பத்தினர், புதிதாக சமயகுரவர் நால்வரது சிலாவிக்கிரகம் அமைக்க உதவினர். பழனியாண்டியான தண்டாயுதபாணி எழுந்தருளி விக்கிரகத்தினை திருமதி. நடராசா முத்துலட்சுமி குடும்பத்தினர், ஐம்பொன்னாலான விக்கிரகமாக உபயம் செய்தனர். இதேகாலப்பகுதியில் ஆறுமுகசாமி வெளிவாயில் மணிமண்டபமும் புதிதாக அமைக்கப்பட்டது. ஆலயவாசல் வெளி மண்டபத்தைச் சுற்றி இரும்பாலான அழகிய கிராதியும் போடப்பட்டது.

மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திலே, கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றின் வாயில்களிலே பித்தளையாலான அழகிய மூன்று திருவாசிகளும், ஸ்நபன மண்டப வாயிலுக்கு பித்தளையாலான அழகிய கேடயமும் அமைந்து அழகைக் கொடுக்கின்றது. இவற்றினை வைத்திய கலாநிதி செல்லையா தனபாலசுந்தரம் குடும்பத்தினர், தமது தாயார் சொர்ணம் செல்லையா அவர்களின் ஞாபகார்த்தமாக அமைத்துக் கொடுத்துள்ளனர். இவற்றோடு 1989 ஆம் ஆண்டு, இக்கோயிலில் பரிவார மூர்த்திகளுக்கு கோயில் அமைக்கப்பட்டது.

***வளரும்...***




OM NAMO NARAYANA



**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM**
**L3S 3T8 CANADA**
**001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது

குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

**17-05-2024 வெள்ளி தொடக்கம் 23-05-2024 வியாழன் வரையும்**

**மேஷம்:** உயரங்களை சந்திக்கும் வாரம். குதூகலம் தாண்டவமாடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்கள செய்தி வரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். திறமைகள் வெளிப்படும். செல்வாக்கு மேம்படும். காதலர்கள் தம்பதியாவார்கள். சுபச்செலவு அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. வீண் சஞ்சலங்கள் விலகும். வேண்டாத கவலைகள் விலகும். முயற்சிகள் பலன் கொடுக்கும். நினைத்த விஷயம் நிறைவேறும். கடன் பாக்கிகள் வசூலாகும். திருமண தீபம் சுடர்விடும். பொருளாதாரம் மேம்படும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். எதிலும் வெற்றி கிட்டும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வேண்டாத நபர்களின் பேச்சை குறைக்கவும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடி பொருட்கள் சேதமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கௌரவத்தில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிட்டும். விவசாயிகள் பயன்பெறுவார்கள். வீண் செலவுகளை தவிர்ப்பது நல்லது. எதிரிகளால் ஏற்றம் உண்டு. உத்தியோக உயர்வு கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வேலவப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,H

**ரிஷபம்:** கட்டுமானப் பணியில் கௌரவம் உயரும் வாரம். ஆசைகள் நிறைவேறும். காரிய தாமதம் ஏற்படும். இடமாற்றம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். தொழில் வளம் கூடும். சொத்துக்கள் சேரும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உடல்நலம் சீராகும். விரோதங்கள் விலகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் பெரிய பலனை அடைவீர். உலோகத்தொழில் உயர்வு தரும். உறவினர் வருகையால் பலன் உண்டு. கல்விச்செலவு உண்டு. நண்பர்கள் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். பொருளாதாரம் முன்னேற்றம் மேம்படும். பாராட்டுக்கள் குவியும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். திடீர் மாற்றம் ஏற்படும். உடல் சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். முகப்பொலிவு கூடும். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவார்கள். சமூக சேவை செய்ய முன் வருவார்கள். மருத்துவத்துறையில் ஆர்வம் கொள்வீர்கள். காதலில் புத்துணர்வு இருக்கும். வியாபாரம் வளர்ச்சி தரும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கடன் சுமை தீரும். வாய்ச்சொல் பலன் தரும். வருமானத் தடை உண்டு. வாகனச் செலவு உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 3,5,9,7
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,B

**மிதுனம்:** தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் வாரம். அலுவலகங்களில் பாராட்டுக்கள் குவியும். பயணத்தால் நல்ல பயன் கிடைக்கும். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பழிச்சொல்லில் இருந்து விடுபடுவீர்கள். பாக்கிகள் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். பழையக்கடன் வசூலாகும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். புதிய பொருள் சேரும். பூமியால் லாபம் அடைவீர்கள். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். சட்டம் சாதகமாகும். திட்டங்கள் நிறைவேறும். வெற்றி சீக்கிரம் கிட்டும். பயணத்தினால் அனுகூலம் உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அமையும். ஆண்களின் ஆதிக்கம் உயரும். தடைகள் விலகும். வேலைப்பளு கூடும். அரசியல் லாபம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பல்வலி வந்து நீங்கும். எதிர்பார்ப்புகள் உருவாகும். நண்பர்களை சந்திப்பீர்கள். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். தனலாபம் பெருகும். இடமாற்றம் ஏற்படும். பயணம் தடைப்படும். தாய்வழி உறவு நன்மை தரும். குடும்ப தேவை அதிகரிக்கும். பிள்ளைகளால் மேன்மை உண்டு. மதிநுட்பம் தேவை. ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலம் கூடும். மற்றவர்களால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாகும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி தரும். வெளியூர் பயணம் செல்வீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 2,1,4,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,E

**கடகம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும் வாரம். காரியம் வெற்றி தரும். அலைபேசித் தகவல் ஆனந்தம் தரும். உடல்நலனில் அக்கறை தேவை. வெகுமதிகள் உண்டு. வெளிநாட்டுப் பயணம் உண்டு. கனவு பலிதமுண்டு. குடும்பத்தில் அன்யோன்யம் கூடும். கலைத்தொழிலில் ஆர்வம் கூடும். விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. ஆபரணச் சேர்க்கையுண்டு. கவனமுடன் செயல்பட வேண்டும். பொறாமைகள் அகலும். விட்டுக்கொடுத்து செல்ல வேண்டும். அமைதியாக செயல்பட வேண்டும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். பொன்னான தருணம். புதிய வாகனம் வாங்குவீர்கள். புது மனை புகுப்பிப்பீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். குடும்ப மனநிறைவு தரும். புதிய நண்பர்களை தவிர்க்கவும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நல்லோர் நட்பு கிட்டும். குடும்ப கௌரவம் உயரும். திருமண தடைகள் விலகும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பங்குச் சந்தை மாற்றம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். உடல் ஆரோக்கியம் குறையும். பணவிரயம் ஏற்படும். உறவினரால் செலவு உண்டு. கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். மன வேதனை குறையும். எதிர்மறையான எண்ணங்கள் விலகும். வசதிகள் பெருகும். பொருளாதார உயர்வு உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 7,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Y


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'



"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


**சிம்மம்:** நல்ல வாய்ப்புக்கள் வரும் வாரம். கடன் பிரச்சனை உருவாகும். கால்நடைகளால் பலன் உண்டு. கலைத்தொழிலில் ஆர்வமுடன் செயல்படுவீர்கள். செயல்திறன் வெளிப்படும். நிர்வாகத் திறன் கூடும். உத்தியோக முன்னேற்றம் ஏற்படும். மங்களச் செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். வருமானம் உயரும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். உறவினர்களின் வருகையால் செலவுகள் அதிகரிக்கும். கடன் குறையும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். பெண்களுக்கு யோகமான காலம். செயல்களில் கவனம் தேவை. அலைச்சலால் அசதி ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். வேலை திறன் அதிகரிக்கும். சுபக்காரியச் செய்தி வரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன் பிறந்தோரால் உதவி கிடைக்கும். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். உள்ளம் பூரிப்படையும். மனம் மகிழும் நாளாக அமையும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் தேடி வரும். தொலைபேசித் தகவல் நல்ல செய்தி தரும். செல்வாக்கு சேரும். வருமானம் உயரும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். விபரீத எண்ணம் விலகும். சேய் நலம் கூடும். நோய் நொடிகள் அகலும். சேமிப்பு உயரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,1,9
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,J

**கன்னி:** உடல் உபாதை விலகும் வாரம். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச்செலவு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் வியாபாரம் லாபம் தரும். வழக்குகள் வெற்றி தரும். வீண் வம்பு விலகும். மருத்துவச் செலவு ஏற்படும். பிள்ளைகளால் பெருமை உண்டு. விருந்தினர் வருகை உண்டு. வியாபாரத்தில் நன்மை உண்டு. சாதனைகள் நிகழ்த்தும் நாளாக அமையும். சொத்துப் பிரச்சனைகள் தீரும். அரசு வழியில் ஆதாயம் தரும். கடன்சுமை தீரும். நன்மைகள் பெருகும். கூட்டுத்தொழில் லாபம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. கனவுத்தொல்லை உண்டு. ஏற்றுமதி தொழிலில் முன்னேற்றம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. தன வரவில் தாமதம் உண்டு. குடும்பத்தில் சஞ்சலம் உண்டு. மேலதிகாரியின் ஆதரவு உண்டு. கல்வியில் ஏற்றம் உண்டு. கவலைகள் குறையும். உடல்நலத்தில் அக்கறை தேவை. பெரியோர்கள் ஆசி கிடைக்கும். வீண் பேச்சை தவிர்க்கவும். தனம் சேரும் காலம். கடன் பிரச்சனை தீரும். வியாபார வாய்ப்பு உண்டு. புத்திரர் வழியில் தொல்லை உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வீண் வம்பு ஓடி மறையும். வாழ்க்கை வசதி பெருகும். வேலை பளு அதிகரிக்கும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கோதுமை தானம் குல விருத்தியை சேர்க்கும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 7,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,L

**துலாம்:** உள்ளத்தில் கவலைகள் விலகும் வாரம். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். நல்வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். வில்லங்கம் விலகும். போட்டிகள் மறையும். தொல்லைகள் அகலும். இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. விவசாய விளைச்சல் மூலம் நற்பலன் உண்டாகும். புதிய சிந்தனை உருவாகும். போட்டி பொறாமைகள் மறையும். பூமியால் லாபம் உண்டாகும். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. உடல்நலம் சீராகும். இனிய தகவல் வந்து சேரும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். பொருள் நஷ்டம் ஏற்படும். வேலைப்பளு கூடும். நிதானம் தேவை. அரசியல் ஆதாயம் உண்டு. குடும்ப சச்சரவு ஏற்படும். சங்கடம் அதிகமாகும். வருமான வரித்தொல்லை ஏற்படும். விரோதம் விலகும். படிப்பில் ஆர்வம் கூடும். சந்தோஷமான நாளாக அமையும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. உடல் நலம் சீராகும். புஷ்ப வழிபாடு புண்ணியம் சேர்க்கும். வசந்தம் தேடி வரும். நற்பலன்கள் கிடைக்கும். குதூகலம் அதிகரிக்கும். ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. நிம்மதியான குடும்ப வாழ்க்கை அமையும். இனிதான காரியம் நடைபெறும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். கணவன், மனைவி உறவு மேம்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: எமதர்ம ராஜா, அதிர்ஷ்ட எண்: 4,2,3,5
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P

**விருச்சிகம்:** வெற்றி கிட்டும் வாரம். நற்செய்தி நாடி வரும். தொழில் வாய்ப்பு கூடி வரும். தடைகள் விலகும். தேவைகள் பூர்த்தியாகும். விருப்பங்கள் நிறைவேறும். வீண் செலவுகள் அதிகமாகும். புதிய பொறுப்பு வரும். அரசியலில் ஆதாயம் உண்டு. திறமைகள் அதிகமாகும். பயணம் லாபம் தரும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. கலையில் ஆர்வம் பெருகும். நண்பர்களை சந்திப்பீர்கள். தாயின் நலனில் அக்கறை தேவை. பிரச்சனைகள் விடுபடும். புதிய முயற்சி பலன் தரும். நினைத்த காரியம் நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து உயரும். இனிய எண்ணம் உதயமாகும். அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத்தன்மை கூடும். பொன், பொருள் சேரும். மாலைநேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். நினைத்ததை சாதிக்கும் காலம். உற்சாகம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. திடீர் செலவு ஏற்படும். மங்களச்செய்தியால் மனம் மகிழும். பிள்ளைகளால் பெருமை சேரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆலோசனை பூர்த்தியாகும். அணிகலன் ஆர்வம் கூடும். பங்குச்சந்தையில் லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,4,5,6
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K

(தொடர்ச்சி 33 பக்கம்)

# ரணில் மீட்பர் அல்லர் : ஒரு பொருளாதார அடியாள் சர்வதேச நிதி நிறுவனங்களின் சேவகர்

## பொ.ஐங்கரநேசன் சாடல்



ராஜபக்ஸ சகோதரர்கள் அரியணையில் இருந்து துரத்தப்பட்டு அவ்விடத்துக்கு ரணில் விக்கிரமசிங்க இரண்டு வருடங்களுக்கு முன்னால் ஜனாதிபதியாகப் பிரதியீடு செய்யப்பட்டார்.

அவர் ஒரு பொருளாதார நிபுணர், சரிந்திருக்கும் பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்துவார், அடித்தட்டுமக்களின் வாழ்வு மேம்படும் என்று சொல்லியே முன்னிறுத்தப்பட்டார். ஆனால், இன்று இலங்கையின் சனத்தொகையில் கால்வாசிக்கும் அதிகமான மக்கள் வறுமையில் வாடுகின்றனர். 2019 ஆம் ஆண்டு பதினோரு சதவீதமாக இருந்த வறுமை இந்த ஆண்டு இருபத்தியாறு சதவீதமாக அதிகரித்திருக்கிறது.

ரணில் மீட்பர் அல்லர். அவர் ஒரு பொருளாதார அடியாள். உலக வங்கி, நாணய நிதியம் ஆகிய சர்வதேச நிதி நிறுவனங்களின் தாழ்பணியும் ஒரு சேவகராகவே அவர் செயற்பட்டுவருகின்றார் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கடுமையாகச் சாடியுள்ளார்.

பொருளாதாரரீதியாக மிகவும் பின்தங்கிய குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகளை வழங்கி வைக்கும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அற்றார் அழிபசி தீர்த்தல் நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சாடியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது, இலங்கையின் மக்கள் தொகைக்கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2019 ஆம் ஆண்டில் 6,966 ரூபாயாக இருந்த தனி நபர் ஒருவரின் அடிப்படைத் தேவைகளுக்கான மாதாந்த செலவு இப்போது 17,014 ரூபாவாக உயர்ந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

உலக வங்கி தன்னுடைய அறிக்கையில் இலங்கையில் அறுபது வீதமான குடும்பங்களின் வருமானம் வீழ்ச்சி அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. வாங்கும் திறன் குறைந்ததால் உணவுப்பாதுகாப்பின்மை, ஊட்டச் சத்துக்குறைபாடு, வளர்ச்சிக்குறைபாடு என்பவற்றை மக்கள் எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளார்கள்.

பொருளாதார மறுசீரமைப்பு என்ற பெயரில் சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் கட்டளைகளை சிரமேற்கொண்டு அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்ற வரி விதிப்பு முறைகள், அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் எல்லாம் சேர்ந்து சமூகத்தின் மீது தொடுத்திருக்கும் தாக்குதலின் விளைவுகள்தான் இவை.

நாணய நிதியத்தின் சொற்கேட்டு அரச நிறுவனங்களைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளினாலும், மூடும் நடவடிக்கைகளினாலும் இலட்சக்கணக்கான மக்களின் வேலைகளை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுவருகின்றார்.

நாளுக்கு நாள் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. ஆனால், அமெரிக்கப் பேரரசு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார நடவடிக்கைகளை அவ்வப்போது வானளாவப் புகழ்ந்து தள்ளுகின்றது. இதன் பொருள் ரணில் நிறுவனங்களுக்கும் பெரும் பன்னாட்டு வணிக நிறுவனங்களுக்கும் இவற்றுக்கூடாகத் தங்களுக்கும் சிறந்த சேவகராக, ஒரு பொருளாதார அடியாளாக இருக்கின்றார் என்பதுதான்.

ரணில் விக்கிரமசிங்கவை அடிக்கடி வெளிப்படையாகப் பாராட்டுவதன் மூலம் அவரை ஒரு பொருளாதார மீட்பராக மக்கள் மத்தியில் கட்டமைக்க அமெரிக்கா விரும்புகின்றது.

ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் சமயத்தில் இந்த விம்பம் அவரை வெல்ல வைக்கும் என்றும் அமெரிக்கா நினைக்கின்றது. இலங்கையின் ஜனாதிபதியாக யார் வரவேண்டும் என்பதை வல்லாதிக்க சக்திகளே தீர்மானிக்கின்றன. அதற்கேற்ப மக்களை, வாக்காளர்களை, மக்கள் பிரதிநிதிகளை மூளைச் சலவை செய்யும் வேலைகள் கனகச்சிதமாக இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. எமது மக்கள் இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# மன்னார் பாலியாறு நீர்த்திட்டம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பு



- மன்னார் நிருபர் (15.05.2024)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் வழிகாட்டலுக்கமைவாக நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொட்டமானின் தலைமையில் மன்னார் வெள்ளாங்குளம் பாலியாறு நீர்த்திட்டம் 15-05-2024 புதன்கிழமை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

116 பில்லியன் ரூபா செலவில் வட மாகாண மக்களுக்கு பாதுகாப்பான குடி நீரை வழங்குவதை மையமாக கொண்டு மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நீர் சேகரிப்பு மற்றும் நீர் பயன்பாட்டை விணைத்திறனாக்க கூடிய வகையில் மேற்கொள்ளப்படவுள்ள வெள்ளாங்குளம் - மன்னார் பாலியாறு நீர்த்திட்டம் மற்றும் மல்லாவி முல்லைத்தீவு நீர்வழங்கல் திட்டங்களின் சம்பிரதாயபூர்வ இன்றைய தினம் அங்குரார்பணம் செய்யப்பட்டது.

இவ் நிகழ்வில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ், பாராளுமன்ற உறுப்பினரும், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சருமான கே.காதர் மஸ்தான், திட்டத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைத்தனர்.



குறித்த நிகழ்வில் நீர்வழங்கல் அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இவ்வார ராசிபலன்

(32 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும் வாரம். தன்னம்பிக்கை கூடும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். குடும்ப கௌரவம் உயரும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். தோஷங்கள் ஒதுங்கும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். பொது வாழ்வில் புகழ் கூடும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் உண்டு. பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். தெம்பும், தைரியமும் கூடும். மங்கையருக்கு திருமண பாக்கியம் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்ட காலம் மறையும். ஜீவராசிகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். மன அமைதி சீர் குலையும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பொறாமைகள் விலகும். சிறப்புக்கள் சேரும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X




**மகரம்:** கர்ஜனையோடு வலம் வரும் வாரம். உற்சாகம் அலைமோதும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். காரியத்தடை ஏற்படும். புதிய எண்ணங்கள் உருவாகும். மனநிறைவு உண்டாகும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். வெற்றியை எட்டும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும் முடிவுகளில் தெளிவு இருக்கும். செயலில் துணிவு கூடும். உடல்நிலையில் அக்கறை தேவை. ஆதாயம் பெருகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பலன் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். கடன் சுமை குறையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Q




**கும்பம்:** கௌரவம் அதிகரிகும் வாரம். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். காதலர்கள் தம்பதியாவார்கள். விபரீத போக்கு மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பேச்சில் கம்பீரம் இருக்கும். பூர்வீக சொத்து கிடைக்கும். சுபச்செய்திகள் வீடு தேடி வரும். திருமணப் பேச்சு நல்ல தகவல் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் மேன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். பயணம் அனுகூலம் தரும். சாதனைகள் படைக்கும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். நட்பு வட்டம் விரிவடையும். ஆடை, ஆபரணம் சேரும். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சிகள் பலன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,D




**மீனம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய வாரம். செயல் திறமை வெளிபடும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புகள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். புத்தி சாதுர்யம் கூடும். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து உண்டு. மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. மங்களச் செய்தி வரும். வெற்றிகள் குவியும். வீண் செலவுகளை தவிர்க்கவும். ஆன்மீகத்தில் ஆர்வம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். அலைச்சல் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். மாணவர்களுக்கு கவனம் தேவை. காதலர்கள் தம்பதியாவார்கள். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் வரும். செல்வாக்கு மேம்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A

# அன்பின் தொனி - 779

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை** - Grace of God

**இதோ ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக் கண்டேன்**

இதற்குப் பின்பு நான் சூரியனுக்குக்கீழே செய்யப்படும் கொடுமைகளையெல்லாம் சிந்தித் துப்பார்த்தேன்; இதோ ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக் கண்டேன், அவர்களைத் தேற்று வாரில்லை; ஒடுக்குகிறவர்கள் பட்சத்தில் பெலமிருந்தது, அப்படியிருந்தும் தேற்றுவாரில்லை. ஆதலால் இன்னும் உயிரோடிருந்து பிழைக்கிறவர்களைப்பார்க்கிலும் முன்னமே காலஞ்சென்று மரித்தவர்களையே பாக்கியவான்கள் என்றேன். இவ்விரு திறத்தாருடைய நிலைமையைப்பார்க்கிலும் இன்னும் பிறவாதவனுடைய நிலைமையே வாசி; அவன் சூரியனுக்குக் கீழே செய்யப்படும் துர்ச்செய்கைகளைக் காணவில்லையே. மனுஷன் படும் எல் லாப் பிரயாசமும், பயன்படும் எல்லாக் கிரியையும், அயலானுடைய பொறாமைக்கு ஏதுவாயிருக்கிறதை நான் கண்டேன்; இதுவும் மாயையும், மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது. மூடன் தன் கைகளைக் கட்டிக்கொண்டு, தன் சதையையே தின்கிறான். வருத்தத்தோடும் மனச்சஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடியும் நிறையக்கொண்டிருப்பதைப்பார க்கிலும், அமைச்சலோடு ஒருகைப்பிடி நிறையக் கொண்டிருப்பதே நலம். - **பிரசங்கி 4: 1-6**

**ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்**

பின்பு நான் திரும்பிக்கொண்டு சூரியனுக்குக் கீழே மாயையான வேறொரு காரியத்தைக் கண்டேன். ஒருவன் ஒண்டிக்காரனாயிருக்கிறான்; அவனுக்கு உடனாளியுமில்லை, அவனுக்குப் பிள்ளையும் சகோதரனுமில்லை; அப்படியிருந்தும் அவன்படும் பிரயாசத்துக்கு முடிவில்லை; அவன் கண் ஐசுவரியத்தால் திருப்தியாகிறதுமில்லை; நான் ஒரு நன்மையையும் அநுபவியாமல் யாருக்காகப் பிரயாசப்படுகிறேன் என்று அவன் சிந்திக்கிறதுமில்லை; இதுவும் மாயை, தீராத தொல்லை. ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே. இரண்டுபேராய்ப் படுத்துக்கொண்டிருந்தால் அவர்களுக்குச் சூடுண்டாகும்; ஒண்டியாயிருக்கிறவனுக்குச் சூடுண்டாவது எப்படி? ஒரு வனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்துநிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது. இனி ஆலோசனையைக் கேளாத கிழவனும் மூடனுமாகிய ராஜாவைப்பார்க்கிலும், ஏழையும் ஞானியுமாகிய இளைஞனே வாசி. அரசாளச் சிறைச் சாலையிலிருந்து புறப்படுவாருமுண்டு; ராஜாங்கத்தில் பிறந்து ஏழையாவாருமுண்டு. சூரியனுக்குக்கீழே ஜீவனுள்ளோர் யாவரும் ராஜாவின் பட்டத்திற்கு வரப்போகிற பிள்ளை யின் பட்சத்தில் சார்ந்திருப்பதைக் கண்டேன். அவர்களுக்குமுன் அப்படிச் செய்த ஜனங்க ளின் இலக்கத்திற்கு முடிவில்லை; இனி இருப்பவர்கள் இவன்மேலும் பிரியம் வைக்காமற் போவார்கள்; இதுவும் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. - **பிரசங்கி 4: 7-16**

**உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே**

நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவது போலப் பலியிடுவதைப்பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள். தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக் கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக. தொல் லையின் திரட்சியினால் சொப்பனம் பிறக்கிறதுபோல, வார்த்தைகளின் திரட்சியினால் மூடனுடைய சத்தம் பிறக்கும். நீ தேவனுக்கு ஒரு பொருத்தனைபண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே; அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை, நீ நேர்ந்து கொண்ட தைச்செய். நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற்போவதைப்பார்க்கிலும், நேர்ந்துகொள்ளா திருப்பதே நலம். - **பிரசங்கி 5: 1-5**

**தொடரும்...**

## கடந்தவையும் கடப்பவையும் - (98)

எழுத்தில் வடித்ததுபோல் இலகுவாய் இருக்கவில்லை
நினைத்தவுடன் வெளிக்கிட்டுப் போவதற்கு - அன்று

புலிகளின் நிர்வாகம் வலுவாக இருந்ததால் - அவர்கள்
அனுமதி தந்தாலே முடியுமாய் இருந்தது - வெளிப்பயணம்

முன்னர் போயறியா முல்லைத்தீவு அங்குதான் - பெரிய
நிர்வாக அலுவல்கள் எல்லாமே நடந்தன

ஓங்கி உயர்ந்த பெருமரங்கள் வழிநெடுக
பாங்காய் வளர்ந்து வரவேற்க உட்புகுந்தோம் - அங்கே

தென்னோலையால் வேயப்பட்ட குளிர்ந்த நல்ல
தண்மையான கொட்டில்கள் மக்களின் தேவைக்காய்

அதிகாலை ஆனாலும் அதிக சனம்- அங்கிருந்து
கெதியாகத் திருபுவது கடினமெனப் புரிந்தாலும்

பொறுமையுடன் நிற்கவே எங்கள் தவணைவர - அனுமதிக்கு
பொறுப்பானவர் கேட்டுக்கொண்டார் தேவையான தகவல்களை

வீட்டுக்கு ஒருவர் என்பது விவாதப் பொருளாக - வந்து
மாட்டுப்பட்டேனோ என்றதாயும் ஒரு ஏக்கம்

கொஞ்சம் விட்டுக்கொடுக்காத விவாதங்கள் வீறுபெற
அங்கும் வந்துநின்றது நட்புத்தான் தானாக,

பொருளியல் துறையில் சிறப்பான படிப்புக்காய் - ஒரு
குறுகிய காலம் இணைந்தவேளை நல்லஜீவனாய்

மக்றோவும் மாக்றோவும் தெளியவைத்த அச்சீவன் - இது
எத்தகைய சிக்கலென அறிந்து கொண்டு - தன்

பக்கத்தே கூட வந்த நண்பனோடு ஏதோபேச - ஒரு
செக்கன் கூட சிந்திக்காது வைத்தாரவர் கையொப்பம்

பெரிதாக ஒருநாளும் கதைத்ததில்லை ஆனாலும்
சரியான தருணத்தில் அவர்செய்த உதவி

ஒருநாளும் மறப்பதற்கு முடியாத உதவியது
அதனோடு முடிக்கவில்லை அலுவலக நடைமுறைகள் - புகைப்பட

பிரதிகளும் வேணுமென கூறியது அலுவலகம் - மின்சார
வசதிகளே இருக்காத காலமது ஆனாலும்

டைனமோவில் இயங்கச்செய்யும் இயக்கிக்காய் - தம்
உடல் வலுவைக் கொடுத்து மின்வலுவை எடுக்கவும்

உதவியவர் இருவரதும் எதிர்பாரா உதவியால்
ஒருவிதமாய் அனுமதியும் கிடைத்திடவே

பெருமகிழ்வோடு நன்றியினைக் கூறிக்கொண்டு
மறுபடியும் அன்றே திரும்புகிறோம்

விசுவமடு வீடுநோக்கி........

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

## கண்ணீர் அஞ்சலி #63



மலர்வு 12 - 11 - 1935

உதிர்வு 23 - 04 - 2024

**திரு. கணேசன் வேலுப்பிள்ளை**

எங்கள் OSTBA உறுப்பினர் #199
ஏப்ரல் 23, 2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அவரது ஆத்மா அமைதியும் இறைவனின்
பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION
OSTBA2019@GMAIL.COM WWW.OSTB5.CA
416-473-6880

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




## RESIDENTIAL- COMMERCIAL

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உலகெங்கும் நன்கு அறியப்பெற்ற வருடாந்த நிகழ்வு
உதயன் சரவதேச விருது விழா-2024
Uthayan International Awards Festival – 2024
For Tickets and information:
416 732 1608 or 647 762 9512
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
மண்டபம்:-
The Estate Banquet & Event Centre
430 Nugget Ave,
Scarborough, ON M1S 4A4
26th May, 2024
Sunday,
at 6.00 PM

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26 ஆண்டுகளில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1467 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 17, 2024



# மார்க்கம் நகரில் திறந்து வைக்கப்பெற்ற புகழ்பெற்ற 'லத்திகா நகை மாளிகை' கிளை திறப்பு விழாவிற்கு வருகை தந்த மாகாண துணை அமைச்சர் விஜேய் தணிகாசலம்

அண்மையில் மார்க்கம் நகரில் திறந்து வைக்கப்பெற்ற புகழ்பெற்ற 'லத்திகா நகை மாளிகை' திறப்பு விழாவிற்கு ஒன்றாரியோ மாகாணத்தின் துணை போக்குவரத்து அமைச்சர் விஜேய் தணிகாசலம் வருகை தந்தார். அச்சமயம் அவர் திரு சசிகுமார் மற்றும் அவரது பாரியார் பிரியா சசிகுமார் ஆகியோர் கரங்களில் ஒன்றாரியோ மாகாணத்தின் சார்பில் பாராட்டுப் பத்திரம் ஒன்றையும் வழங்கினார்.



# "ஆரபி படைப்பகம்" மற்றும் "ஆரோசை" இணைந்து நடத்திய "கருவறைக் கோயில்" அன்னையர் தின விழா





கனடாவின் "ஆரபி படைப்பகம்" மற்றும் "ஆரோசை" இசைக்குழு இணைந்து நடத்திய "கருவறைக் கோயில்" அன்னையர் தின விழா சிறப்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோ குயின்பெலஸ் விழா மண்டபத்தில் நடைபெற்றது.
ஆரபி படைப்பகத்தின் அதிபர் ரஜீவ் சுப்பிரமணியம் மற்றும் "ஆரோசை" இசைக்குழுவின் நிறுவனர் தியாகராஜா ஜெயச்சந்திரன் ஆகியோர் ஏற்பாட்டில் இந்த விழா சிறப்பாக நடைபெற்றது.
முதலில் அங்கு சமூகமளித்திருந்த அன்னையர்கள் பலர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். பின்னர் அவர்கள் அனைவரும் பூச்செண்டு வழங்கப்பெற்று கௌரவிக்கப்பெற்றனர். தொடர்ந்து "ஆரோசை" இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி ஆரம்பமாகியது. அன்னையர்களை புகழ்ந்து எழுதப்பெற்ற பாடல்களை தெரிவு செய்து பாடக பாடகிகள் பாடல்களை வழங்கினார்கள்.
நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு கலை நிகழ்ச்சிகள் மற்றும் பாடல் நிகழ்ச்சி ஆகியவற்றை இரசித்து உணவருந்தி இல்லம் ஏகினர். நிகழ்ச்சிகளை சாந்தினி சிவகுமார் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

# மே.18, இன அழிப்புக்கான நீதிக்காக உழைப்போம் என உறுதி பூணும் நாள்.

## நிமால் விநாயகமூர்த்தி (மே 18, 2024)

பதினைந்து வருடங்கள் சென்றுவிட்டன. இது போன்ற நாட்களில் தான் எல்லாமும் நடந்தேறியது. "எங்களை காப்பாற்ற எவராவது வரமாட்டார்களா?" என்னும் ஏக்கத்துடன் எங்கள் மக்கள் மரண உலகின் கைதியானார்கள். உலகம் காப்பாற்றும் என்று நாங்கள் நம்பினோம் - எங்களால் முடிந்தது எல்லாம் செய்தோம் - இறுதியில் எமது மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர் என்னும் கொடிதான செய்திதான் எங்களை வந்தடைந்தது. எங்களுக்கு மாபெரும் அநீதி இழைக்கப்பட்டது. நீதி கோரி நாம் தொடர்ந்தும் போராடுகின்றோம் - ஆனாலும் எங்கள் முயற்சியில் தொடர்ந்தும் தோற்றுக் கொண்டேயிருக்கின்றோம். இந்தக் குற்றவுணர்வுடன், மீண்டுமொரு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் தலை தாழ்த்துகின்றோம்.
(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் "சிவத்தமிழ் விழா – 2024" சிறப்பாக நடைபெற்றது







ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும். ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் "சிவத்தமிழ் விழா-2024" கடந்த 11-05-2024 சனிக்கிழமையன்று கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.
சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் தலைமையில் அவரது துணைவியார் மற்றும் ஜெயா குருக்கள் மற்றும் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகள் ஆகியோரின் பங்களிப்புடன் வருடா வருடம் நடைபெற்று வரும் இந்த விழா இவ்வாண்டில் 18வது ஆண்டை நிறைவு செய்கின்றது.
இவ்வருடத்தின் விழாவானது ஆலயத்தோடு இந்துக்கல்லூரியோடும் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தவர்களான அமரர்களான. கவிநாயகர் வி. கந்தவனம். "அருட்கவி ஞானகணேசன். ஆசிரியர் சத்தியமூர்த்தி மற்றும் ஆலயத் தொண்டர் நடராசா அவர்கள் ஆகியோருக்கு சமர்ப்பணம் செய்யப்பெற்று நடைபெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.
பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதியும் சமயப் பேச்சாளருமான டாக்டர் லம்போதரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அத்துடன் அங்கு கௌரவிக்கப்பெற்ற சில சமயப் பெரியோர்களையும் கௌரவித்தார். வழமை போன்று. மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்பாக இருந்தன.



# தமிழ் தலைமைகள் பிளவுபடாத சமூகமாக ஒன்றிணைய வேண்டும் என யாழ்ப்பாணத்தில் வலியுறுத்திய அமெரிக்க தூதுவர்

தமிழ் தலைமைகள் பிளவுபடாத சமூகமாக ஒன்றிணைய வேண்டும் என யாழ்ப்பாணத்தில் அமெரிக்க தூதுவர் வலியுறுத்தினார் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.
15-04-2024 புதன்கிழமையன்று சந்திப்பு தொடர்பில் கிளிநொச்சியில் அவர் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரித்தார்.
(தொடர்ச்சி 14ம் பக்கம்)